
GRIHALAKSHMI
கிரஹலக்ஷ்மி
VL. 1
No. 11

KING OF TONICS




# கிரஹலக்ஷ்மி

ஸ்திரீகள் சித்திர மாதப் பத்திரிகை

6 - NOV 1937

பிரசுரிப்பவர்

டாக்டர் எஸ். சேஷகிரி ராவ்.

பத்திராதிபர்

எஸ். கிருஷ்ணன், பி. ஏ., (ஆனர்ஸ்)

மலர் 1] நவம்பர் 1937 [இதழ் 11

PRINTED AT THE LODHRA PRESS, ROYAPETTAH, MADRAS

159945

# கிரஹலக்ஷ்மி

## சந்தா விவரம்

வருடசந்தா ரூ. 3, ஆறு மாதம் 1-8-0. 6 மாதத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பர்மாவுக்கு வருட சந்தா ரூ. 4-8-0. தனிப்பிரதி விலை அணா 4. எந்த மாதத்திலிருந்தும் சந்தாதாராகச் சேரலாம். தனிப் பிரதிகள் வேண்டுவோர் நாலு அணா போஸ்டேஜ் ஸ்டாம்புகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத் தொகையை முன் பணமாக அனுப்புவது நல்லது. வி. பி. பி. வீண் அதிகச் செலவுதான்.

## விளம்பர விகிதம்

மாதர்களுக்கு உபயோகப்படக் கூடிய பொருள்களைப் பற்றி விளம்பரம் செய்வதற்கு இப்பத்திரிகை மிகவும் பிரயோஜனமானது. விளம்பரக் கட்டணம், ஒரு தடவைக்கு ஒரு பக்கத்துக்கு ரூ. 15, அரைப்பக்கம் ரூ. 8, கால் பக்கம் ரூ. 5. நீண்டகால நிரந்தர விளம்பரங்களுக்கு 12½% கமிஷன் தரப்படும். கால் பக்கத்துக்குக் குறைந்த விளம்பரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. தனிச் சலுகைகளுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

## ஏஜண்டுகள்

பிறிதொரு பக்கத்தில் நமது ஏஜண்டுகளின் ஜாப்தாவைக் காணலாம். ஏஜண்டுகளில்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

## வியாசம் வரைவோர் கவனிக்க

வியாசங்கள் எல்லாம் ஸ்திரீகளுக்குப் பயன்படத் தக்கவைகளாகவே யிருக்க வேண்டும். அவைகள் சுருக்கமாக இருந்தால் உடனே பிரசுரிக்க இயலும். கட்டுரைகள் ஒரே பக்கத்தில் தெளிவாக மையினால் எழுதப்பட வேண்டும். பிரசுரமாகாத வியாசங்களைத் திரும்பப்பெற விரும்புபவர்கள் போஸ்டேஜ் ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். இதுபற்றி கடிதப் போக்குவரத்து அனாவசியமாக வைத்துக் கொள்ள முடியாது. ரிப்ளை கார்டு அனுப்புவோருக்கு பதில் எழுதப்படும்.

## பத்திரிகை

பத்திரிகை கிடைக்கப் பெறாத சந்தாதார்கள் பிரதிமாதம் 7ந்தேதிக்குள் விஷயத்தைக் காரியாலயத்துக்குத் தெரிவிக்க வேண்டியது. சந்தாதார்களின் விலாச மாறுதல்களை அப்போதைக்கப்போது 4 நாள்முன் கூட்டியே அறிவிக்க வேண்டியது. பத்திரிகைகள் காலா காலத்தில் வந்து சேராவிடில் தபால் இலாகா அதிகாரிகளிடம் புகார் செய்யலாம்.

## சந்தா

சந்தாவின் காலம் முடிய ஒரு மாதத்திற்கு முன்னரே சந்தாதார்களுக்கு அறிவிக்கப்படும். தங்கள் சந்தாதார் பதவியை அவரவர்கள் நீடிக்கக் கோருகிறோம். பத்திரிகை தேவையில்லாதவர்கள் முன் கூட்டியே தெரிவித்துவிட வேண்டியது. இல்லையெனில் பத்திரிகையை வி. பி. பி. யில் அனுப்ப நேரிடும்.

## குறிப்பு

"கிரஹலக்ஷ்மி" பணசம்பந்தமான கடிதப்போக்கு வரத்துகளும், மணியார்டர்கள், போஸ்டல் ஆர்டர்கள், செக்குகள் முதலியன டாக்டர் கே. என். கேசரி, பிரசுரிப்பவர், 15, வெஸ்ட்காட் ரோட், ராயப்பேட்டை, சென்னை என்ற விலாசத்துக்கே அனுப்பப்படவேண்டும்.






## கேஸரி குடீரம் நூதனபவனம்

இந்த பவனத்தில் நவீன முறைகளை அனுசரித்து சிறந்த மூலிகைகளைக் கொண்டு லோத்ரா, அமிருதா, அர்க்கா முதலிய ஔஷதங்கள் தயார் செய்யப்படுகின்றன.

**லோத்ரா—கர்ப்பாசய ரோக நிவாரணி.** ருதுசூலை, பகிஷ்டை ஆகாமலிருப்பது, அகாலபகிஷ்டை, அதிகமாகப்போவது அல்லது குறைந்த அளவு போவது, சந்தானமின்மை முதலிய சகல ஸ்திரீ ரோகங்களையும் கண்டிக்கும்.

**அமிருதா—ரத்த சுத்தி திராவகம்.** ரத்தமின்மை, மலபந்தம், அஜீர்ணம், கீல்வாய்வுகள், மேக சம்பந்தமான வியாதிகள், பலஹீனம், நெஞ்செரிச்சல், கண் எரிச்சல் முதலிய நோய்களை நிவர்த்திசெய்து சரீரத்துக்கு பலத்தையும், காந்தியையும் கொடுத்து முகத்துக்கு தேஜசைக் கொடுக்கும்.

**அர்க்கா—சர்வ ஜ்வர நிவாரணி.** வாத ஜுரம், பித்த ஜுரம், கப ஜுரம், சன்னிபாத ஜுரம், மலேரியா ஜுரம், விஷ ஜுரம், இன்ப்ளுவென்சா போன்ற ஜுரங்களையும், வயிற்றுக்கட்டி முதலியவற்றையும் போக்கடிக்கும். இந்த ஔஷதத்தைச் சிறு குழந்தைகளுக்குக்கூடக் கொடுக்கலாம்.

**கேஸரி குடீரம் - ராயப்பேட்டை - மதரூஸ்**

# பொருளடக்கம்


1. கௌரி பூஜை .... .... .... 737
2. மதுவிலக்கும் மாதரும் .... .... .... 739
3. இந்தியாவின் முன்னேற்றம் — ஸ்ரீமதி கோமளம் .... .... 742
4. பெண்களின் இடமும் தொழிலும் — "சந்திரிகா" .... 745
5. சாவித்திரிபாய் — "சமுனி" .... .... 749
6. கார்த்திகை தீபம் — "ஜனககுமாரி" .... .... 752
7. தீபாவளியும், நரகசதுர்த்தசியும் — ஸ்ரீமதி டி. எஸ். ஜானகி அம்மாள் 753
8. பெண் பாவம்! — ஸ்ரீமதி அம்புலு .... .... 756
9. காவேரி மகத்துவம் — "ஜானி" .... .... 760
10. விதவையின் கடிதம் — திரு. ஆ. வெ. சுப்பிரமணியம் .... 762
11. மொராக்கோ — ஸ்ரீமதி ஜி. கிரிஜா .... .... 763
12. கோலாட்டம் — "ஞானு" .... .... 767
13. சீன ஸ்திரீகள் முன்னேற்ற இயக்கம் — திரு. அன்வர்குரேஷி .... 770
14. பிரேமா — திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை .... .... 775
15. பத்மாவதி அல்லது பதிபக்தி — திரு. கி. சந்தானம் .... 777
16. என் சகோதரிகளுக்கு — டர்பன் ஸ்ரீமதி பார்வதி .... .... 781
17. கர்ப்பவதி கவனிக்கவேண்டியவைகள் — ஸ்ரீமதி. எஸ். கமலா .... 782
18. முருகனிடம் முறை — "மேருவல்லி" .... .... 786
19. ஸ்ரீமதி பிலோமினு தம்புசெட்டி — "கண்ணன்" .... .... 788
20. ஹம்பி—விஜயநகரம் — திரு. எஸ். ஆர். வெங்கோபராவ் .... 793
21. சைனுக்ராஸ் ஹல்வா முதலியன — "ஸரோஜா" .... .... 795
22. செய்தித்திரட்டு .... .... .... 798
23. விசித்திரம் ஆனுல் வாஸ்தவம் .... .... .... 800
24. கதம்பம் .... .... .... 802
25. சினிமா செய்திகள் .... .... .... 804
26. ஆசிரியர் குறிப்புகள் .... .... .... 805
27. பஞ்சாங்கம் .... .... .... 807
28. பிரசவ அட்டவணை .... .... .... 808

மூவர்ணப்படங்கள்

1. கௌரி பூஜை
2. ஸ்ரீமதி பிலோமினு தம்புசெட்டி





# கிரஹலக்ஷ்மி ஏஜண்டுகள்.

பெங்களூர் : மெஸர்ஸ் ஆனந்தா புக் டிப்போ, கண்டோன்மென்ட்.

கோலார் கோல்ட் பீல்ட்ஸ் : திரு. எம். ஏ. தாஸ், கண்ணபிரான் தெரு, ராபர்ட்ஸன் பேட்டை, கோலார் கோல்ட் பீல்ட்ஸ்.

திருப்பதி : மெஸர்ஸ் ஒய். வி. சுப்பையா அன் கோ., மெர்ச்சென்ட்.

சேலம் : எம். எஸ். ராஜகோபால், கோபால்ஸ் நியூஸ் மார்ட், சின்னக்கடைத் [தெரு.

பொள்ளாச்சி : திரு. கே. ஆறுமுகம், நியூஸ் ஏஜன்ட்.

மதனபள்ளி : என். ராதாகிருஷ்ணய்ய செட்டி, நியூஸ் ஏஜன்ட்.

திண்டிவனம் : திரு. எஸ். என். கோபாலதேசிகன், சுப்ரமண்யஸ்வாமி கோயில் தெரு.

சித்தூர் : திரு. வி. வெங்கடரமணய்ய செட்டி, 163, பஜார் ரோட், சித்தூர்.

வேலூர் : திரு. கே. சீனிவாசன், சென்ட்ரல் நியூஸ் ஏஜன்ஸி, பெரிய கடைத் தெருவு, கோட்டை.

ஆரணி : திரு. என். நாராயணசுவாமி நாயகர், கெமிகல் ஷாப்.

திருச்சிக்கோட்டை : திரு. எஸ். அஜீபா சாஹிப், நியூஸ் ஏஜண்டு, வைரவன் கோவில் தெருவு.

மதுரை : திரு. ஜி. வெங்கட நாராயண அய்யர், ரிடையர்ட் போஸ்ட் மாஸ்டர், 248, மேலமாசி வீதி.

திருநெல்வேலி டவுன் : திரு. ஆர். வி. பதிராவ், 12, கீழரத வீதி.

தூத்துக்குடி : மெஸர்ஸ். சங்கரன் அன் கோ., நேஷனல் நியூஸ்மார்ட்.

பீமாவரம் : திரு. வி. அச்சுத ராமய்யா, பிராஞ்சு மானேஜர், அஸ்வின் குமார் பார்மஸி.

நிடதவோல் : திரு. கே. ஸி. சென்ன கேசவய்யர், வியாபாரி.

ஹனுமகொண்டா : திரு. கே. அச்சுதானந்தம், ஆனந்த ஆயுர்வேதாஸ்ரமம்.

சென்னை : மெட்ராஸ் நியூஸ் ஏஜன்ஸி, மவுண்டு ரோட்.

கொழும்பு : திரு. ஏ. பாலகிருஷ்ணசாமி, 191,—193, நார்ரிஸ் ரோட்.

யாழ்பாணம் : திரு. ஏ. எஸ். அந்தோனி பிள்ளை, நார்த் ஸிலோன் நியூஸ் ஏஜன்ஸி, இரண்டாவது கிராஸ் தெரு.

ரங்கூன் : திரு. வி. பகவதி சாஸ்திரி, 244, பேர் தெரு.

கோலாலம்பூர் : திரு. பி. சிவகுரு, நியூஸ் ஏஜண்டு, 108, பிரிக்ஸ் பீல்ட்ரோட் F.M.S.

ஹிஜ்ஜின்பாதம் கம்பெனியாரின் புத்தக சாலைகளில் எங்கும் கிடைக்கும்.

இன்னும் எல்லா விடங்களுக்கும் சந்தாதார் சேர்க்கவும், விற்பனை செய்யவும் ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

**கிரஹலக்ஷ்மி காரியாலயம்,**

**ராயப்பேட்டை, : : சென்னை.**



கௌரி பூஜை.




# கௌரி பூஜை

அம்மா சாரதா! உன்னைக்காண என் மனம் தினம் தினம் சந்தோஷம் அதிகரித்து வருகிறது. ஏதோ கிழட்டுப் பயல் (ஆம் வயதானவன்தான், இல்லையென்று சொல்லவில்லை) உளறுகிறான் என்று அலட்சியமாய் இராமல் நான் கூறி வரும் போதனைகளை நீ கவனமாய் கேட்டு வருகிறாய் என்று உன்முகமே கூறுகிறது. உன்னுடையவும், உன்னைப்போன்ற கௌரீமணிகளின் க்ஷேமத்தையும் உத்தேசித்தே நான் நிர்மலஹிருதயத்துடன் இவ் விஷயங்களைக் கூறுகிறேன். என்னுடைய ஜீவிய நாடகத்தில் இது ஐந்தாவது கட்டம். இந்தத் தளர்ந்த வயதில் குமாரியே நான் பரிஹாச வார்த்தைகள் பேசவரவில்லை. ஆனால் நான் பேசுவதைப் பார்த்துச் சிலர் அதுபோல் நினைத்தாலும் நினைக்கலாம். அதற்கு யான் என்னசெய்வது? பாஷையிலாகட்டும், வேஷத்திலாகட்டும், வேலையிலாகட்டும் சர்வசாமான்யமாயிருப்பதுதான் என் வழக்கம். என்னிடத்திலில்லாத பாண்டித்யத்தை என்னிடம் எதிர் பார்த்தால் நான் என்னசெய்வது? என் ஜீவனமே கஷ்டம். கஷ்டப்பட்டுப் பிழைத்துக் கொண்டிருக்கும் நான் ஆடம்பர அட்டஹாசம் எவ்வாறு செய்ய முடியும். தலைக்கு மிஞ்சின காரியத்தை எடுத்துக்கொண்டு வேலை செய்வது எனக்கு இயலுமா? முடியாது.

உன்போல் சிறுமிகளைக் கண்டாலே என் மனம் பூரித்து, உள்ளம் களிப்பெய்தி திருப்தி அடைந்துவிடுகிறது. ஏதாவது பக்ஷணங்கள் கொடுக்க வேண்டுமென்று தான் ரொம்பவும் ஆசைப்படுகிறேன். ஆனால் ஏழையாகிய நான் கொடுத்து வைக்கவில்லையே!! ஆகையால்தான் நான் இந்தக் குழலை எடுத்து உங்களுக்கு ஊத ஆரம்பித்திருக்கிறேன். இதுவே சிறந்த உபாயம். பக்ஷணங்கள் கொடுத்தேனானால் நீங்கள் அந்தக்ஷணமே தின்று

ஜீரணித்துவிடுவீர்கள். ஆனால் நான் சொல்லும் நீதிக்கதைகள் எப்பொழுதும் உங்கள் மனதில் பதிந்திருக்கும். நான் செய்யும் கௌரி பூஜை இதுவே. ஏன் அப்படிப் பார்க்கிறாய். கௌரி என்றால் கன்னிகை என்று அர்த்தம். "அனுக்ராதம் புஷ்பம்" என்றால் என்ன அர்த்தம்? ஜாதிப் புஷ்பத்தின் வாசனையும் விகாசமும் தூய்மையும், நிர்மலத்தன்மையும் சிறிதும் குறையாதபடி புனிதமாயிருக்கிறது. அது போன்ற 'கன்னித்துவம்', முகரப்படாத புஷ்பத்தின் தூய்மை, நான் மட்டுமல்ல, ஈஸ்வரன்கூட பூஜிக்கத்தக்கது. நம் ஹிந்துக்கள் கன்னித்தெய்வத்தை பூஜிப்பதுபோல் வேறு எந்த தேசத்திலும் கிடையாது என்பது மிகையான பேச்சல்ல. மேல் நாடுகளில் கன்னியர்கள் படும்பாட்டை நீங்கள் உண்மையிலேயே உணர்ந்தீர்களானால் உங்கள் ஹிருதயம் வெடித்துப்போகும். அவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பதுகூட உனக்குத் தெரிய வேண்டியதில்லை. அந்த முகரப்படாத மலரின் கந்தத்தை உனது இஷ்டதெய்வத்துக்கு மட்டும்தான் சமர்ப்பிக்கவேண்டும். இந்தப்பணியில் நீ மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் தெரியுமா? நம் தேசீயத்தின் கௌரவத்துக்கு ஹானி இன்றி உன் நடத்தை இருக்கவேண்டும். உஷார்! உஷார்!!

இப்பொழுதோ தேசம் ரொம்பவும் அல்லோலகல்லோலமாய் இருக்கிறது. கையிலுள்ள வெண்ணையை வீசி எறிந்துவிட்டு விரலை நக்கிக் கொண்டிருக்கும் நிலையில் நாமிருந்து வருகிறோம். கெட்ட காலமாயிருக்கிறது. அனாசாரங்களும், மனதைக் கெடுக்கும் கல்விப்பயிற்சியும், மேலெழுந்து நம்பூர்வீக புராதன ஆரிய நாகரிகத்தை அநேகமாக பஸ்மம் செய்துவிட்டது. இதை புனருத்தாரணம் செய்யப் போகிறாயா, இல்லையா புனித குமாரியே! நசித்துப்போகும் நம் மேன்மைமிக்க ஆரிய தர்மம் மறுபடியும் மேலோங்கி புத்துயிர் பெற்றுத் திகழச்செய்ய வேண்டிய பொறுப்பு உன்னுடையதும், உன்னையொத்த மங்கையர் திலகங்களுடையதாகும். அதை நீ செய்ய வேண்டியதற்கு உன்னுடைய தூயபக்தியை சகல கலாவல்லியாகிய அம்பாளுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும். அதுவே உண்மையான கௌரி பூஜையாகும். கனவில்கூட மாயாபிரம்மாச்சாரிகளை நம்பவேநம்பாதே. உன்னுடைய உக்கிரமான தபசை நீ தீவிரமாகச் செய்துவா. "நரத்னமன்விஷ்யதிம்ருக்யதேஹி". ரத்னம் என்னை யாராவது வாங்கிக் கொள்வார்களா? என்று கூவிக்கொண்டு வீதிதோறும் சுற்றித்திரியாது. ஒரு மூலையில் ஒதுங்கியே நிற்கும். ரத்னம் வேண்டியவன் எங்கு சிறந்த ரத்னம் கிடைக்கும் என்று பிரபஞ்சம் பூராவாகவும் நிச்சயம் தேடி அலைவான். நான் சொல்ரது புரிகிறதா? உன்னுடைய கன்னியத்துவம் உண்மையிலேயே ரத்னம் போன்றதாயிருந்தால் எப்படிப்பட்ட மாயா பிரம்மாச்சாரியாயிருந்தால் கூட தூய்மையானவனாய் விடுவான். தன்னில் பாதியை உனக்கு தத்தம் செய்வான். ஒருதரம் வேண்டுமானால் "குமார சம்பவம்" என்ற நூலைப் படித்துப் பார்! நீங்களும் கௌரியைப்போல் உண்மையான பக்தியைக் கொண்டு நடந்தால் தூய கணவர்களைப் பெற்று மாங்கல்ய பாக்கியம் என்றும் மங்காமல் நித்திய சுமங்கிலிகளாய் வாழ்ந்து வருவீர்கள். கௌரிதேவி உங்களை ஆசிர்வதிப்பாளாக!



# :: மதுவிலக்கும் மாதரும் ::

பஞ்சமாபாதகங்களுள் ஒன்றெனத் தொன்றுதொட்டு கண்டனம் செய்யப்பட்டது மதுபானம். மதுபானத்தை நல்லது என்று உலகில் ஒரு மதமாவது ஒப்புக்கொள்ளவில்லை. சகல மதங்களும் கட்குடியை மகாபாவமான செய்கை என்று கூறியிருக்கின்றன. எனினும் அத்தீய வழக்கம் நம் நாட்டினரிடையும் வெகு காலமாக இருந்து வருகிறது. குடி பல குடித்தனங்களைக் கெடுத்து வருகிறது. அகால மரணத்துக்கு மதுபானம் ஒரு முக்கிய காரணம் என்று சொல்வது மிகையாகாது. மதுபானம் மனிதனுக்கு இயற்கையாயுள்ள புத்தியை அழித்து, மகனாகவும், கணவனாகவும், தந்தையாகவும் இருந்து அவன் செய்யவேண்டிய கடமைகளை மறக்கும்படி செய்கிறது. அதுமட்டுமின்றி அவனை வேலை செய்யத் திறமையற்றவனாக்கி, திருடவும், கொள்ளை அடிக்கவும், காமாந்தகப்பேயனாகவும் ஆக்கி தன்னை மறந்து பலவித தீச்செயல்களைச் செய்யுமாறு அவனைத் தூண்டுகிறது. தவிர அதை அருந்துபவர்கள் க்ஷயம், கபம், பாரிசவாயு, பைத்தியம் முதலிய நோய்களுக்கும் ஆளாகிறார்கள். இதனாலேற்படும் கொடுமைகளைப்பற்றி விஸ்தரிக்கையில் லண்டன் பார்லிமெண்டு சபையில் 1880ம் வருஷம் இவார்டு க்ளாட்ஸ்டன் என்பார் "குடியினால் மக்களுக்கு நேரிடும் கேடுகள் யுத்தம், நோய், பஞ்சம் ஆகிய இம்மூன்றினால் நேரிடும் ஆபத்துக்களைக் காட்டிலும் அதிகம்" என்றார். அவர் கூறியது மெய்யே.

பொதுவாக இந்தக் குடிப்பழக்கத்தால் மிகுதியும் அல்லலுறுவோர் யார் என்று சற்று ஆராய்வோமானால் பெண் மக்களே என்று புலப்படும். உதாரணமாக தொழிலாளிகள் விவசாய குடும்பங்களின் நிலையை எடுத்துக்கொள்வோம். கணவன் எட்டு, அல்லது பத்து அணா சம்பாதித்தால் அவன் அதில் தவறாது ஆறணாவுக்குக் குடித்து விடுகிறான். அநேக நாட்களில் பூராக் கூலியையும் குடியில் செலவழித்துவிட்டு சாயந்திரம் வீட்டுக்கு வருகிறான். மனைவி போனவன் வருவான் வருவான் என்று கடைக்குச் சென்று பதார்த்தம் வாங்கக் காத்துக்கொண்டிரு கிறாள். அவனோ வந்து ஏதாவது உண கொள்ள வேண்டும் என்று நினைக்கிறான். வீட்டின் அடுப்பில் பூனை தூங்குகிறது. தன்னறிவை இழந்து கிடக்கும் அந்த மானிட மிருகம் மனைவியைப்போட்டு உதைக்கிறது. மனைவி கதறுகிறாள். குழந்தைக் குஞ்சுகள் "நயினா, அம்மாவை அடிக்காதே" என்று தகப்பனைத் தடு கின்றன. கண்மண் தெரியாத முரட்டுக் குடிகாரன் அவைகளையும் காலால் உதைத்துத் தள்ளுகிறான். வீட்டில் ஓ இரைச்சல், வெளியில் வேடிக்கை பார் கும் கும்பல். இதுபோன்ற காட்சிகளை நகரங்களிலும், நாட்டுப்புறங்களிலும் தினசரி காண்கின்றோம்.

இத்தோடு நிற்கவில்லை. மனைவி தன் கணவனின் குணத்தை அறிந்து தானு ஏதோ கூலி வேலை செய்து அதையாவ

வைத்துத் தன் குழந்தைகளையும், கட்டிய கடனுக்குக் குடிகாரக் கணவனையும் காப்பாற்றுவோம் என்று ஏதோ சில காசுகள் சம்பாதிக்கிறாள். அளவுக்கு மிஞ்சி குடிக்கு அடிமையான மானிடக் கசடனுக்கு மதுவருந்த தன் சம்பாத்தியம் போதவில்லை. தன்மனைவியிடம் காசு கேட்கிறான். தரமறுத்தால் தடியடி பூஜை, வசை புராணம் முதலியன நடக்கின்றன. வீடு அமர்க்களம் தான். இவ்வாறாகக் குடிப்பழக்கத்தால் அவஸ்தைப் படுவது கீழ்தர மக்கள் வீட்டுப் பெண்டிர் மட்டுமென்று நினைத்துவிட வேண்டாம். நல்ல குடும்பத்து ஸ்திரீகளும் கெட்ட சகவாசத்தால் தங்கள் தந்தையரோ, சகோதரரோ, கணவன்மாரோ இந்தத்தீய வழக்கத்துக்கு ஆளானால் மானம், மரியாதை, செல்வம் யாவற்றையும் இழந்து பரிதவிக்க நேரிடுகிறது. குடிகாரனுக்குத் தாயென்றும், மகள் என்றும், மனைவி என்றும், சகோதரி என்றும் வித்தியாசம் தெரியாது. கொஞ்சகாலம் வேண்டுமானால் "நிதான"மாய் இருக்கலாம். பின்னர் 'நிதானம்' மறைந்து 'தடிதானம்' தான் குடித்தனத்தில் குடிகொண்டிருக்கும்.

மேலும் ஆண்கள் இந்த பழக்கத்தைக் கைகொண்டால் நேரிடும் இன்னல்களை நாம் இதுவரையில் கூறிவந்தோம். பெண்களிலும் குடிக்கிறவர்கள் இருக்கிறார்கள். நாகரிகம் முதிர்ச்சி பெற்ற பலகுடும்பங்களில் இம்முறை சில இடங்களில் நாகரிகத்தின் அறிகுறியாக பழக்கத்திலிருந்து வருகிறது என்பது யாவரும் உணர்ந்த விஷயமே. இதனால் நாளாவட்டத்தில் அக்குடும்பங்களின் நிலை சீர்கேடடைந்து வீழ்வதையும் நாம் கண்ணாரக் கண்டிருக்கிறோம். விவசாய தொழிலாளி ஸ்திரீகளும் தங்கள் கணவருடன் கூடிக்குடிக்கிறார்கள் என்பதும் வாஸ்தவமே. சென்னைக் கள்ளுக்கடைகளின் முன்னர் சற்று நின்று பார்த்தால் இந்த ஸ்திரீகள் தாங்கள் மட்டும் குடித்து மதியிழந்தால் போதாது என்று, தங்கள் சிசுக்களுக்கும் இந்த விஷபானமாகிய மதுபானத்தைத் திணித்து ஊட்டுவதைக் காணலாம். என்ன கோரக்காட்சி! நெஞ்சு துடிக்கிறதே!!

"மது வரக்கனும் வீழ்வானா, நம்மக்களும் இன்பவாழ்வு நடத்துவார்களா" என்று ஏங்கியிருந்த சமூக சீர்திருத்தவாதிகளுக்கு ஒரு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. உலகம் போற்றும் உத்தமராகிய மகாத்மா காந்தியடிகள் நாட்டில் மதுபானத்தை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார். தேசீயமகாசபையான காங்கிரஸின் நிர்மாணத் திட்டத்திலும் மதுவிலக்கை ஒரு முக்கியமான அம்சமாக ஆக்கினார். ஆனால் சர்க்காரோ "மதுவரக்கன்தான் எங்களுக்கு கொழுத்த பணம் தருகிறான். அவனுக்கு ஏதாவது தொந்தரவு கொடுத்தால்...". என்று மீசையை முறுக்கி பயமுறுத்தினார்கள். ஒத்துழையாமை, சட்டமறுப்புக் காலங்களில் மதுவிலக்குப் பிரசாரத்துக்கும் கள்ளுக்கடை மறியலுக்கும் தடைகள் ஏற்படுத்தப்பட்டன. தன்னலம் சிறிதும் உன்னிடாத பல பெண்மணிகள் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டு பலவித துன்பங்களுக்கு ஆளானார்கள். அது அந்தக்காலம். இன்று, "இந்தத்தூய





சேவையில் ஈடுபட மாதர்களே முன் வாருங்கள்! உங்களுக்குச் சிறையில்லை; தடியடி இல்லை. நாங்களும் ஆதரவு அளிக்கிறோம்" என்று காங்கிரஸ் சர்க்கார் கூவி அழைக்கின்றது. காங்கிரஸ் மகா சபை எந்த எந்த மாகாணங்களில் மந்திரி சபை ஏற்று அரசியலை "உடைத்தெறியப் போகிறதோ" அந்த மாகாணங்களிலெல்லாம் குறைந்த பக்ஷம் மூன்று வருஷங்களில் பூரண மதுவிலக்கைச் செய்து தீர்த்து விடவேண்டும் என்று மஹாத்மா கட்டளை பிறந்துவிட்டது. நாம் மேலே எடுத்துக்காட்டியுள்ள காரணங்களால் இந்த திட்டத்தால் மிகுந்த பலனை அடைபவர்கள் மாதர் சமூகத்தார் என்று எடுத்துக் காட்டியிருக்கிறோம். ஆகையால் பெண்கள் ஒவ்வொருவரும் இந்தப் புனித சேவையில் ஈடுபடவேண்டியது அத்தியாவசியமானது என்று நாம் வற்புறுத்திக் கூறவேண்டியதில்லை. இந்த மது விலக்குத் திட்டம் வெற்றி பெறவேண்டுமானால் அது பெண்களின் பரிபூரண ஆதரவும், ஒத்துழைப்பும் இருந்தால் தான் முடியும். படித்த ஸ்திரீகள் இன்று முதலே தங்களுக்கு அவகாசம் கிடைக்கும் பொழுதெல்லாம் தங்களைச் சுற்றியுள்ள சேரிகளுக்கும், கிராமங்களுக்கும் சென்று பெண்களிடத்தில் குடியால் விளையும் கேடுகளைப்பற்றி மனதில் பதியும்படி சொல்லவேண்டும். சும்மா சாயந்திரம் போய் கியாஸ்லைட் கொடியுடனும், மேசை நாற்காலிகளுடனும் பத்துப்பேர் போய் கூச்சலிட்டுப் பேசி வருவதால் மட்டும் பலன் கிடைக்காது. தொடர்ந்து அவர்களுடன் அன்பாகப் பேசிப் பழகி அவர்களின் மனதை மாற்றிவரவேண்டும்.

சென்னை சர்க்கார் சேலம் ஜில்லாவில் பூரணமதுவிலக்குத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்து விட்டார்கள். அங்கு திட்டத்தை ஆதரித்துப்பிரசாரம் செய்யச் சென்ற மந்திரிகளுக்கு நடந்த வரவேற்புகளிலும் கூட்டங்களிலும் பெண்கள் பெரிதும் உற்சாகம் காட்டினார்கள் என்றும், கூட்டங்களில் ஏதேஷ்டமாகக்கூடியிருந்தனர் என்றும் அறிந்து நாம் களிப்பெய்தினோம். இந்த ஊக்கம் தற்காலீகமாக ஆகிவிடாமல் நிரந்தரமாக இருந்து கள்ளரக்கனைத் தலையெடுக்க ஒட்டாமல் செய்யவேண்டியது நம் சகோதரிகளின் முக்கிய பொறுப்பாகும். ஜில்லா வாரியாக ஸ்திரீகள் தொண்டர்படை ஏற்பட்டு இப்பொழுதிருந்தே இடைவிடாமல் வேலை செய்து வரவேண்டும். கிராமம், கிராமமாகச் சென்று தங்கி சரியானவேலை செய்து உருவான திட்டங்கள் அமைக்க வேண்டும். ஆடவர் அப்பழக்கத்தை விட்டு நன்மக்களாக மாறும்படி செய்து குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்தி, அதன்மேல் இதரத் துறைகளிலும் குடும்பங்கள் உயர்வடையச் செய்ய வேண்டியது நமது ஸ்திரீகளாலாயே முடியும். சட்டமும், போலீசும் எல்லாவற்றையும் செய்து விடமுடியாது. எனவே ஸ்திரீகள் முன்னேற்றத்திற்காக உழைக்கும் ஸ்திரீகள் எல்லோரும் மதுவிலக்கு விஷயத்திலும் பூரணகவனம் செலுத்தி வேலை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

# இந்தியாவின் முன்னேற்றம்

ஸ்ரீமதி கோமளம்

நமது வேஷ்டி, சேலை, குல்லாய், படுக்கை முதலிய ஜவுளி தினுசுகளும், கலப்பை கொழு, மண்வெட்டி கடப்பாறை கோடாலி, வண்டிப்பட்டை ஆணி வளையம் முதலிய இரும்புச் சாமான்களும், தவலை, குடம், அண்டா, அடுக்கு இன்னும் பலவித சமையல் பாத்திரங்கள், பித்தளை, செம்பு, ஈயம், முதலிய லோகப் பொருள்களும், காப்பு கொலுசு, சங்கிலி வளை முதலிய ஆபரணங்கள் செய்யும் வெள்ளி தங்கம் இரத்தினம் முதலிய அழகிய பொருள்களும், தீப்பெட்டி எண்ணை மெழுகுவத்தி முதலிய தீபசாமான்களும், ஸ்திரீகளுக்கு வாஸனைப்பொடி ஸோப், அத்தர் பட்டை நூல், கொண்டை ஊசி முதலிய நாகரிகப் பொருள்களும், குழந்தைகளுக்கு பென்ஸில் சிலேட் மைக்கூடு பேனா காகிதம் மை அட்டை முதலிய பள்ளிக்கூடச் சாமான்களும், விஸ்கி பிராந்தி ஒயின் ஜின் பீர் முதலிய அறிவைக் கெடுக்கும் லாகிரி வஸ்துக்களும், வியாதியஸ்தர்களுக்கு பெட்டி பெட்டியாய் மருந்தும், ரயில், மோட்டார் முதலிய வாகனச்சாமான்களும் இன்னும் நம்மைச் சுற்றியிருக்கும் சாமான்களெல்லாம் அயல் நாடுகளில் செய்யப்பட்டு இங்கு வந்து (இந்தியாவில்) குவிந்து கொண்டிருக்கின்றன.

வேலையில்லாத் திண்டாட்டமும், வறுமையும், சோம்பலும் மலிந்துகிடக்கிறது. நமது செல்வம் தினம் தினம் வெளியேறிக் கொண்டிருக்கிறது. செல்வத்தை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு நமது ஜனங்கள் பிழைக்க வழிதெரியாமல் அயல் நாட்டிற்குச் சென்று உழவுமாடு போல் உழைத்துச் சாகிறார்கள். இப்பொழுது சீமையில் கவர்ன்மெண்டார் தங்களுடைய சாமான்களை எப்படி இந்தியாவில் விற்கலாம் என்று யோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது நம்முடைய வியாபாரம் நம்முடைய கையில் இல்லை. ஆங்கில வியாபாரிகளிஷ்டம் போல் நடந்து வருகிறது. உதாரணமாக ஒருவன் பருத்தியை விற்றால் அவன் இஷ்ட விலைக்கு விற்கமுடியாது. வியாபாரிகள் கேட்ட விலைக்குதான் விற்கமுடியும். நமது வியாபாரம் ஆங்கிலேய வர்த்தகர்கையில் இருக்கிறது. தோல் பொம்மையை ஆட்டிவைப்பது போல் அவர்கள் இஷ்டப்படி நம்மை ஆட்டிவைக்கிறார்கள். ஐரோப்பிய ஜப்பானிய ஆங்கிலேய அமெரிக்க வியாபாரிகள் நம்மிடம் அவர்கள் இஷ்டம் போல் வியாபாரம் செய்து, ஏராளமான பொருளைக் கொள்ளையடித்து சந்தோஷமாகக் காலங்கழிக்கிறார்கள். நமது குடியானவர்களோ பஞ்சத்தால் பரதவித்து, ரத்தம் இழந்து உயிருக்கும் மன்றாடுகிறார்கள். ராஜாக்கள் ஜமீன்தார் ஆகிவருகிறார்கள்; ஜமீன்தார்கள் மிராசுதாராகி வருகிறார்கள்; மிராசுதார்கள் இன்சால்வெண்டாகி வருகிறார்கள்; குடியானவர்களோ கடன்காரனும் பிச்சைக்காரனும் நடைபிணங்களாகி வருகிறார்கள். ராஜாக்களும் மற்ற செல்வவான்களும் தமாஷிலும் ஆடம்பரத்திலும் லக்ஷக்கணக்கான பொருள்கள் விரயம் செய்து பணம் போதவில்லையே என்று ஏக்கம் அடைகிறார்கள். ஆடவர்களோ வீடுவாசல் நிலபுலன்களையெல்லாமும், மனைவிமார் நகைகளையும் விற்று போலிப்படிப்புப் படித்து வேலையில்லாத் திண்டாட்டக் கஷ்டத்திற்கும் உள்பட்டு வெறுங்கையோடு வீட்டிற்கு திரும்பிவந்து உட்காருகிறார்கள்.

ஆகையால் பசிபசி என்ற கூக்குரல் உண்டாகிறது. இப்பொழுது கஷ்டப்படுகிறவர்கள் எல்லோரும் அநேகமாக ரொம்பவும் மேன்மையான நிலைமையில் இருந்தவர்கள் என்பதை தம்மனதில் நினைத்துக்கொண்டு தற்சமயம் நல்ல நிலைமையில் இருப்பதாக எண்ணும் மனிதர்கள் கண்களை நன்றாய்த் திறந்துகொண்டு தங்களுடைய குழந்தை குட்டிகள் மனைவிமார்கள் முதலியவர்கள் பிச்சை எடுக்காமலும் பசிபசி என்று பதறாமலும் இருக்க என்ன ஏற்பாடு செய்யவேண்டும் என்று யோஜனை செய்யவேண்டும். நமது குடியானவர்களும் வியாபாரிகளும் பரிதாபஹரமான நிலைமையிலிருந்து விடுதலை அடையவேண்டும். அயல் நாட்டார் பிடிப்பிலிருந்து விடுதலை அடையவேண்டுமானால் நம் நாட்டிலேயே வேண்டிய சரக்குகளை தயார் செய்யவேண்டும்.

தொழிலாளிகள், முதலாளிகள், வியாபாரிகள் எல்லோரும் இந்த விஷயத்தில் மும்முரமாக வேலை செய்ய வேண்டும். நம்நாட்டு ஜனங்களும் நமது நாட்டில் தயாரான சரக்கையே வாங்க வேண்டும். நமது நாட்டில் தயார் செய்த சாமான்களையே எல்லோரும் உபயோகப்படுத்த வேண்டும். இதற்குத்தான் சுதேசி என்று பெயர். நாம் பருத்தியை உற்பத்தி செய்கிறோம். ஆங்கிலேய வியாபாரிகள் அதை வாங்கி தங்கள் நாட்டுக்கு கொண்டுபோய் ஆடைகளாக்கி நம்மிடமே கொண்டுவந்து விற்று ஏராளமான பொருள் ஆதாயம் அடைகிறார்கள். அதற்கு இடங்கொடாமல் நம் நாட்டிலேயே ஆண்பெண் இருபாலரும் நூல் நூற்று ஆடைகளை நெய்து கொண்டால் நமக்கு பொருள் சேருகிறது. பஞ்சம் நீங்குகிறது. தரித்திரம் ஒழிகிறது. பிறரை எதிர்பார்க்காமல் இருக்கலாம். பிறர் பிடியிலிருந்து விடுதலை அடையலாம். நம் இந்தியாவில் வேஷ்டி துணியில் மாத்திரம் வருஷத்திற்கு அறுபது கோடி ரூபாய் வெளிநாடு செல்லுகிறது. அதைத்தடுத்து நமது ஏழை ஜனங்களுக்கு உதவும்படி செய்ய வேண்டும். நாம் எல்லோரும் கதரையே உடுத்த வேண்டும். நாம் எல்லோரும் நூல் நூற்று நெய்து கதரையே உற்பத்தி செய்ய வேண்டும். வியாபாரிகளும் சுத்தமான கதரையே விற்கவேண்டும்.

இதைத்தான் நம் சுதேச மகரிஷி மகாத்மாகாந்தி எல்லோருக்கும் உபதேசஞ் செய்கிறார். இப்படி நமக்கு வேண்டிய எல்லா சாமான்களையும் நாமே தயார் செய்ய பிரயாசப்படவேணும். நம்நாட்டுச் சாமான்கள் அழகில்லாதிருந்தாலும் முறடாய் இருந்தாலும் அதிக விலையாயிருந்தாலும் இதையே நம் ஸகோதர ஸகோதரிகள் எல்லோரும் உபயோகித்து வரவேண்டும். ஸகோதர ஸகோதரிகள் எல்லோரும் கூடியமட்டும் நூல் நூற்க வேண்டியது அவசியம். வேலையற்றிருக்கும்போது விளையாட்டாய் நூல் நூற்று

வம்பு சண்டை முதலியவைகளை அறவே நீக்கி எல்லோரும் ஒற்றுமையோடு வாழ்வோமாக.

மேற்கூறிய நற்காரியங்களை செய்து வந்தால் நம் இந்தியாவில் பஞ்சம், வினை, பசி, பிணி, முதலியவைகள் நீங்கி சந்தோஷமாக இருப்போம் என்பதில் சந்தேகம் இல்லை. இதை ஒரு விரதமாகக் கொண்டவருக்குத்தான் சுதேசி என்று பெயர். நீர்வளம் நிலவளம் தொழிலாளிகள் முதலாளிகள் விளைபொருள்கள் அறிவாளிகள் நிறைந்தபோதிலும் நம் இந்தியா தனக்கு வேண்டிய சாமான்களுக்கு அன்னிய நாட்டை எதிர்பார்ப்பது மிகக் கேவலம், இழிவு, பாவம் என்றே சொல்ல வேண்டும். எங்கும் நிறைந்த கடவுள் நம் எல்லோரையும் உண்மையான சுதேசிகளாக ஆக்குவாராக. நம் இந்தியாவும் முன்னேற்றமடையும்படி ஒத்து உழைப்பீர்களாக. நம் எல்லோரும் நம் இந்திய தேசிய காங்கிரஸ் சபையை போற்றுவோமாக. ஸகோதரிகள் எல்லோரும் நம் இந்தியாவை முன்னேற்றமடையச் செய்யும் விஷயத்தில் ஒத்து உழைக்கும்படி பிரார்த்திக்கிறேன். நம் மகாத்மாகாந்தியும், பண்டித ஜவஹர்லால் நேருவும் நீடுழி வாழ்வார்களாக.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.



# பெண்களின் இடமும் தொழிலும்

'சந்திரிகா'

பெண்ணினும் ஆணே உயர்ந்தவன் என்ற மூடத்தனமான கொள்கை நம்மவரிடம் வெகு விரைவாகப் பரவி வருகின்றது. உண்மையில் ஆடவரிடமில்லாத குணங்களும் தன்மைகளும் பெண்டிரிடம் உள்ளன. இவரிடமில்லாதது அவரிடமுளது. இவ்வாறு ஒருவர்க்கொருவர் ஒன்றுபட்டு நிறைந்த தன்மையராகின்றனர்கள். ஒருவர்க்கொருவர் அளித்துப் பெறுதலே இருபாலருடைய சுகத்திற்கும் இன்பத்திற்கும் ஏதுவாகும்.

மனிதன் சுறுசுறுப்பாயும் முன்னேறுவதிலேயே கண்ணுயும், காக்குந் தொழிலில் ஈடுபட்டும் உளன். செய்பவனும் சிருஷ்டிப்பவனும், காப்பவனும், கண்டுபிடிப்பவனும் அவனே. புதியன செய்தலும், எதிலும் புகுவதும் அவனுடைய இயல்பு. யுத்தமும் வெற்றியும் அவனைச் சேர்ந்தவை. ஆனால் மங்கையின் தொழிலோ யுத்தமல்ல; ஆளுகையே. கட்டளையிடல், சீர்படுத்தல், யோசனைகூறல், முதலியவையே அவளுடைய வேலைகள். ஒவ்வொரு பொருளினுடைய இடமும் செயலும் அறிந்தவள் அவள். போட்டிகளில் கலந்துகொள்ளாவிடினும், அவைகளின் முடிவைத் தீர்மானிப்பவள் அவள். பரந்த விவ்வுலகத்தில் மனிதனுக்குச் சயமும் அபசயமும் நேர்வது சகஜமே. வெற்றியுந் தோல்வியும் அவனைச் சேர்ந்தவை. அவைகளாலேற்படும் லாப நஷ்டங்களுக்கு அவனே உரியவன். ஆனால் இவையொன்றும் ஓர் நங்கையை யணுகா வண்ணம் அவன் காப்பாற்றுகின்றான். இல்லத்திற்கோர் குயிலாய், மனைக்கோர் தலைவியாய் விளங்கிக் கவலை சிறிதுமின்றித் திகழ்தலே அவளுடைய தொழில். இதுவே ஓர் உண்மை இல்வாழ்க்கையின் முக்கிய தன்மையாம். அமைதியின் உருவே அகம். துன்பம், ஐயம், அச்சம் இவைகளினின்று நீங்கி இன்பப் பிழம்பாய் விளங்குவதே இல்லம். இத்தகைய தன்மைகளில்லையேல் இது இல்லமாகாது. வெளியுலகத்தில் நிலவியுள்ள விரோதம், அன்பின்மை, அறிவீனம், இவைகளை ஆணேனும் பெண்ணேனும் தம்மகத்தில் புகும்படி விடுவரேல் அவ்வில்லத்தின் ஒளி அவியும். ஓர் துன்பக்கேணியாய் விடும். அஃதன்றி, தெய்வத்தன்மை துலங்கும் தலமாகவும், புனிதம் மலிந்த ஆலயமாகவும், சர்வேச்வரன் கருணைக்கிலக்காகி பரிசுத்தம் நிறைந்து விளங்குமோர் இல்லமாகவும், பொட்டைத் திடலில் நிழலுக்கென வளர்ந்த ஒரு மரமாகவோ, அல்லது பொங்கியெழும் எல்லையில்லா அலைகடல் நடுவே சஞ்சீவிபோல் மிளிர்ந்த ஒரு தீபத்தம்பமாகவோ விளங்கி, கருணை, தயாளம், இரக்கம், வள்ளன்மை முதலிய அரிய குணங்களைப் படைத்த வில்லமே உண்மையான அகமாம்.

இத்தன்மையதாகத் தளிரும்படி செய்வதற்கு ஓர் இல்லக்கிழத்தி அவசியம். குடிசையே எனினும், உண்மையான இருதயத்தோடு கூடிய உயரிய நங்கைவரப் பெறின் அதுவுமோர் புரிசையாய் விடும். ஏழ்மையே குடிகொண்டு தாரகை நிறைந்த

வானமே கூரையாய், மின்மினிப் பூச்சியினொளியே விளக்காய்க் கொண்டு வீடற்றுத் தவித்தாலும், புனிதமானவோர் பூவை வரப்பெறின் அவ்விடமும் ஓர் மாடமாளிகைக்குச் சமமாகும். அவள் எங்கிருந்தாலும் அவ்விடம் ஓர் சிறந்த இல்லமாகும். தான் தங்கும் தலம் மட்டுமல்லாமல் பிறவிடங்களில் தவிக்கும் பெற்றியோருக்கும் ஓர் ஊக்கமளிக்கும் ஒளியாய் விளங்குகின்றாள் பெண்மணி.

இத்தகைய விடமே ஓர் நங்கை தங்கும் இடமாகவும், இத்தொழிலே அவளுக்கென்றளிக்கப்பட்ட கடமையும் ஆம். ஆனால் இத்தகைய இடத்தை ஏற்படுத்தித் தனக்கென்றிட்ட கடமையைச் செய்வதற்குப் போதுமான திறனையும், கல்வியையும் அவள் அடைந்திருக்க வேண்டியது அவசியம். கூடுமானவரையிலும் அவள் முறை பிறழாது, பிழைகள் செய்யாதிருத்தல் வேண்டும். தவறென்பதேயில்லாமலிருப்பது அசாத்தியம். தவறிழைத்தல் மாந்தர்க்கியல்பு. ஆயினும் அவள் நிர்மலமான மனதோடும், உயரிய அறிவோடும் கூடினவளாய் தன்னலமற்றவளாய், பிரத்தியேகத்துவ புத்தியையொழித்தவளாய், தன் கணவனுக்கு இடுக்கணுற்ற காலையில் ஆறுதல் கூறி யோசனைகள் சொல்லும் திறமையைப் பெற்றவளாய் விளங்குவதின்றியமையாதது. அவள் அறிவிற் சிறந்தவளாயிருக்க வேண்டுமென்பது எதனால்? 'அறிவிலுயர்ந்தோள் யான்' என்று கர்வம் கொள்வதற்கோ? அல்ல. அவ்வறிவினுதவியினால் பெண்களுக்குரிய, அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு, முதலிய பண்புகளைப் பூரணமாய்ப் பெறுதற்கே.

ஒரு நங்கை எக்காலத்திலும் உதவி செய்பவளாய், மாறுந்தன்மையளாய் இருக்க வேண்டும். மாறுந்தன்மையென்பதனால் சபலபுத்தியென்றுயான் கூறவரவில்லை. தன்னருகே நெருங்கும் பொருள்களுக்கெல்லாம் வெளிச்சமளித்து, அவைகளுக்குப் பயன் படுமாறு மாறும் ஓர் விளக்கைப்போல் ஒரு மெல்லியலாளும் தன்னிடம் உதவியென்று அண்டிவந்தவர்களுக்கு அவரவர்கள் கோறும் உதவியைச் செய்வதற்கேற்றபடி தன்னுடைய நிலையை மாற்றவேண்டும்.

இதுவரையில் பெண்ணின் உண்மையான இடத்தையும் தொழிலையும் ஆராய்ந்தோம். இனி அவ்விடத்திற்குப் பொருந்த, இத்தொழிலுக்கேற்றத் திறனுண்டாவதற்குரிய, எத்தகைய கல்வியை அவளுக்களிக்க வேண்டுமென்பதைத் தேர்வோம்.

மிக்க அழகோடும், ஆரோக்கியமாகவும் அவள் வாழ்வதற்கேற்ற தேகப்பயிற்சியை அவளுக்கு அளிப்பது அவசியம். சுறுசுறுப்பும், வன்மையுமே அழகை அதிகப்படுத்தும். இவ்வழகைப் பெருக்குவதுமல்லாமல் அதன் சக்தியையும் அதிகப்படுத்தவேண்டும். வெறும் அழகு அழகல்ல. முகத்தில் சாந்தம், தயாளம், கருணை முதலியன நன்கு தோய்ந்து தேஜசுடன் விளங்குவதே அழகு. இத்தகைய அழகே பெண்களிடம் குடிகொள்ள வேண்டும். இவ்வழகு பெருகுவதற்கேற்ப மனமும் சஞ்சலமற்று நிம்மதியாக விருக்கவேண்டும். வீண் கவலைகளால் மனம் வதங்குவது வனப்பின் பெருக்கத்திற்கோர் ஹானியைத்தரும். பெண்மணியொருவளுக்கு ஆரோக்கியத்திற்கேதுவான இன்ப உணர்ச்சி உதய





மாம்படி செய்யவேண்டும். இதைக் குறித்துப் பல பிரபல ஆசிரியர்கள் எழுதியிருக்கின்றார்கள். சந்தோஷமற்ற நங்கையின் வதனம் மங்கி முகத்தில் திகழும் களையும் மறையும். நற்குணக்குன்றாகிய நங்கையொருத்திக்குச் சிறிது துன்பமேற்படினும், அவள் முயற்சிக்குச் சிறுதடைகளெழினும், அதனாலேற்படும் அதிருப்தியின்குறி அவள் முகத்திலுதயமாகி, புனிதமாம் வதனத்தின் வசீகரத்தன்மையையும், மருவற்ற நயனங்களின் ஒளியையும் மங்கச் செய்யும்.

ஓர் மங்கையின் முகத்தில் தவழும்களையும் வசீகரமும், நிறைந்த அமைதியினிடையே ஓங்கிவளரும். கழிந்துபோன ஆண்டுகள் சந்தோஷகரமாயிருந்து, பின் வரப்போகும் வருடங்களெல்லாம் அதிகமான இன்பத்தோடு கூடியவாழ்வைத் தரும் என்ற ஓர் தளரா நம்பிக்கையும் ஏற்படுமேல் இதைவிட இன்பகரமான எண்ணமும் உணர்ச்சியும் வேறெது? இவ்வெண்ணமும் உணர்ச்சியும் நீடிக்குமேல், வயோதிக காலத்திலும், யௌவனத் தன்மையும், வாலிபமுறுக்கும் நங்கையை விட்டு நீங்காது அவளுக்குப் புத்துயிரையும் புத்துணர்வையும் தரும்.

ஆகையால் அவளுடைய தேகசுகத்தையும் ஆரோக்கியத்தையும் பெருக்கியபின், அவளடைந்த சக்திக் கேற்பச் சிறிது சிறிதாய்க் கல்வியைப் புகட்டி, இயற்கையாகவே தழைத்த அறிவையும் அன்பையும் நன்றாக மெருகிட்டுத் தேய்த்துப் பிரகாசிக்கச் செய்வது அவசியம்.

அவளால் நன்கு அறிந்து கொள்ளக் கூடியதும், ஆடவர்களுக்கு உதவி புரிய ஏதுவாயுமுள்ள கல்வியே அவளுக்களிக்கப்பட வேண்டும். கேவலம் சிறிது கற்று 'நாமும் படித்தோம்' என்று கூறிக் கொள்ளும் படிப்பு போராது. பிறருடைய சுகதுக்கங்களை அறிந்து உணரவும், விஷயங்களை நன்கு சீர்தூக்கிப் பார்த்து தீர்மானங்களுக்கு வருதலுமே அவள் படிப்பினாலுண்டாகும் பயனாதல்வேண்டும்.

வெறும் திருப்திக்காக ஒரு பெண் பல பாஷைகளைக் கற்கலாம். ஆனால் முக்கியமாக வேண்டியது என்ன? புதியவர் எவரேனும் வரின் அவருக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்யவும், அவருடைய மொழிகளின் அழகையும், இனிமையையும், பொருளையும் அறிந்து மகிழ்வதுமே தான் மிக்க அவசியம்.

பெருமைக்காகவோ அல்லது பெயருக்காகவோ இக்கலையோ அச்சாத்திரமோ தெரிந்திருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. ஆனால் அவள் உயரிய கொள்கைகளை அறிந்து அவற்றின் வழியே பழகுவதற்குத் திறமையுள்ளவளாதல் வேண்டும். ஏதோ கூடுமான வரையில் இனிய கலைகளான சங்கீதம், சித்திரம் முதலியனவைகளில் அவள் போதுமான தேர்ச்சியடைந்திருப்பது இன்றியமையாதது.

ஊர்களின் அமைப்புகளைப் பற்றியோ, அவைகளிருக்குந் தேசங்களைப் பற்றியோ, முக்கியமான தேதிகள், சம்பவங்கள் இவைகளைப் பற்றியோ, முன்னணிப் பிரமுகர்களைப் பற்றியோ, எவ்வளவு தூரம் அவள் அறிந்திருந்தாலும், அதைப்பற்றி அக்கரையில்லை. ஆனால் அவளை ஒரு அகராதியாக்குவதில் பல

ென்றுமில்லை. ஆயினும், அவள் சரித்திரங்களைப் படிக்குங்கால், ஒவ்வொரு அரசாட்சியிலும், பிரதியொருகாலத்திலும், அடங்கியுள்ள தத்துவங்களை நன்கு அறிந்து, சரித்திர ஆசிரியர்களால் நன்குணரப் படாத மக்களின் துன்பங்களையும், மிடிகளையும், அறிந்து வெகுமதியையும் தண்டனையையும் வேறுபடுத்தி, பிழைகளையும் அவற்றிற்கு நேரும் பிரதிகளையும் உணர்ந்து, ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

இதன்றி தற்போது உலகத்தில் எழுந்துள்ள நெருக்கடிகளையும், தொடர்ந்து நேரும் சம்பவங்களையும், யுத்தத்தில் அல்லலுறும் தேசங்களைப் பற்றியும் அவள் நன்கறிந்து துன்புற்றவர்களிடத்தே கருணைகாட்டவேண்டும். தன்னறிவுக்கெட்டிய மட்டும் இப்பொழுதேற்பட்டுள்ள பெரு நெருக்கடியைத் தொலைக்க அவள் யோசனைகள் கூறவேண்டும். எத்திறத்திலும் அவள் மனிதனுக்குக் கீழானவளல்ல. வெளியுலகத்தில் மாந்தர் படும் கஷ்டங்களும், நாள்தோறும் புதிது புதிதாய் எழும் துன்பங்களும், அவள் மனதில் எத்தகைய மெய்ப்பாட்டை எழுவிக்கின்றன என்பதை அவள் யோசித்துப் பார்க்கவேண்டும். இவ்வாறு பிறருடைய கஷ்ட நிஷ்டூரங்களைவரையறுத்துப் பகுத்தாராயும் திறமையை அவள் அடைந்தபின், அவளுக்கு சாஸ்திர உண்மைகளை அறிவிக்கவேண்டும். இவ்வுலகம் நிலையற்றதென்றும், இதனினும் மேலானதும், சர்வேசுவரன் தங்கியுள்ள ஒப்பற்ற இடத்தை அடைந்து வாழ்தலே ஏற்றது என்றும், இவ்வரிய உலகத்தை அடைய மார்க்கங்களெவை யென்பதையும் அப்பெண்மணி அறியவேண்டும்.

இத்தன்மையதாய் ஒரு பெண்மணிக்கு அவளிடத்தைத் தேர்ந்து, அவ்விடத்திருந்து அவள் ஆட்சி புரியுமாறு அவளுக்கேற்ற சக்தியையும், அச்சக்திக்கின்றியமையாததான கல்வியையும் அளித்தால், அவள் துன்ப உலகில் உழலும் மனிதனுக்கு வேண்டிய ஆறுதலை அளித்து, அவன் களைப்பாறுவதற்கென நுழையும் இல்லத்தில் அதிதேவதையாய் இருந்து அவனுக்குச் சகல சுகங்களையளித்து, அவனுடைய வாழ்க்கையைக் கூடுமான வரையில் இன்பகரமாகச் செய்து சமூகத்திற்கே ஓர் காப்பு தேவதையாய் விளங்குவாள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.



# சாவித்திரிபாய்

"சமுனி"

சிவாஜி 1677-ம் வருடத்தில் தென் மராட்டிய தேசத்தின்மீது படையெடுத்தபோது, அந்த இடத்திலுள்ள ஒரு பலமான கோட்டையைப் பிடிக்க வேண்டுமென விரும்பித் தம் அபிப்பிராயத்தைத் தமது உத்தியோகஸ்தர்களிடம் தெரிவித்தார். மகாராஜாவின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும்பொருட்டு இந்த சர்தார்கள் பெல்வாடி என்னும் பலமான கோட்டையைப் பிடிக்கச் சென்றார்கள்.

எதிரிகளின் வரவை ஏற்கனவே அறிந்து பெல்வாடி சேனைகள் அவர்களை எதிர்த்து நிற்கவேண்டிய சித்தம் செய்து கொண்டனர். இந்த சேனைகளுக்குக் கிலிடார், தளுடார், ஹவில்டார் என்று மூன்று சேனாதிபதிகள் இருந்தார்கள். இவர்கள் மூவரும் என்ன கஷ்ட நஷ்டங்கள் ஏற்படினும் எதிரிகளைக் கோட்டைக்குள் நுழைய வொட்டாமல் அடித்துத் துரத்த வேண்டுமெனத் தீர்மானித்துக் கொஞ்சமும் அஞ்சாமல் இரண்டு மாதம் வரையிலும் எதிர்த்து நின்றார்கள்.

ஒரு நாள் மராட்டியர்கள் கோட்டையைச் சுற்றிக் காய்ந்து உலர்ந்திருந்த ஒரு புதரில் நெருப்பு வைத்துவிட்டார்கள். புதரில் பிடித்த நெருப்பு கோட்டை முழுதும் பரவ ஆரம்பித்ததால் கோட்டைக்குள் இருந்த கன்னடியர்கள் நெருப்பை அணைக்கும் பொருட்டுப் பற்பல திசையை நோக்கிச் சென்றார்கள். இதுதான் சமயமென்று மராட்டியர்கள் அவர்களை எதிர்க்க ஆரம்பிக்கவே, அவர்களும் எதிர்த்துத் தங்களாலானதைச் செய்ய முயன்றார்கள். இந்தச் சண்டையினால் நெருப்பை அணைக்கத் தடையுண்டாகி அக்கினி ஜ்வாலை எங்கும் பரவிவந்தது. இந்தப் பயங்கரமான தீ விபத்தினால் அநேக தளகர்த்தர்களும் கன்னடியர்களும் உயிர் நீங்கும்படி ஏற்பட்டது. இங்ஙனம் நேரிட்ட உயிர்ச் சேதத்தைக் கண்ட கன்னடியர்கள் பயந்து மூலைக்கு மூலை ஓடத் தலைப்பட்டார்கள்.

தளுடார் என்பவருடைய அருமை மனைவியான சாவித்திரிபாய் தன் உயிர்க் காதலனுடைய பெயரும் கீர்த்தியும் போய் விட்டதே என்னும் அவமானத்தாலும், பெல்வாடி கோட்டையை இழக்க நேரிட்டதே என்னும் வருத்தத்தாலும், தன் கணவன் இறந்து போன துக்கத்தைக் கூடப் பாராட்டாமல், தன்னுடைய கணவனின் உடைவாளை எடுத்துக் கொண்டு யுத்தத்துக்குப் புறப்பட்டு விட்டாள்.

சாவித்திரி தன்னுடைய ஜனங்களை ஒழுங்குபடுத்திப் போர் முகத்துக்குக் கொண்டுபோனவிதமே மிகவும் நன்றாயிருந்ததாம். சாவித்திரி தனக்கு முன்னிருந்த மராட்டிய வீரர்களின் மத்தியில் கிழித்துக்கொண்டு சென்று, அநேக மராட்டிய வீரர்களைத் தன் வாளுக்கு இறையாக்கினாள். கன்னடியர்களுக்கும் தைரியம் அதிகரித்து மராட்டியர்களை மேல் விழுந்து வதைக்க ஆரம்பித்தார்கள். சாவித்திரிபாய் தான் அணிந்திருந்த உயர்ந்த ஆபரணங்களை எல்லாம் யுத்தகளத்திலேயே கழற்றித் தன்னுடைய ஆட்களுக்குப் பரிசளித்து விட்டாள். "வீரர்களே! நாம் யுத்தத்தில் எதிரிகளைக் கொல்லவேண்டும்; அல்லது எதிரிகளால்

கொல்லப்பட வேண்டும்; அப்பொழுதுதான் நமக்குப் புகழும் கீர்த்தியும் உண்டாகும்" என்று சாவித்திரிபாய் தன் சேனைகளுக்குத் தைரியம் கூறினாள்.

மராட்டியர்களுக்கோ வரவரக் கோபம் அதிகமாகிவிட்டது. யுத்தத்தில் மகா தீரர்கள் என்று உலகெங்கும் கொண்டாடப்பட்ட தாமா ஒரு பெண்ணினால் தோல்வி அடைகிறது? என்று நினைத்தார்கள். ஆகவே, தங்கள் சேனையை இரண்டாகப் பிரித்து, சாவித்திரியைத் தனியாக எதிர்க்கவும், மற்றவர்களைத் தனியாக எதிர்க்கவும், மராட்டியர்கள் தீர்மானித்துச் சாவித்திரியை அவளுடைய ஆட்களிடமிருந்து தனியாகப் பிரித்துக் கொண்டுவந்து விட்டார்கள். அப்படித்தனியாக வந்தும் அவள் மராட்டியர்களுடன் யுத்தஞ் செய்து வந்தாள்.

கடைசியாக, ஒரு மராட்டிய தளகர்த்தன் அவளுக்குப் பின்புறமாக அவளுக்குத் தெரியாமல் வந்து குதிரையின் கால்களை வெட்டி விட்டான். அப்போதும் சாவித்திரி அதைரியப்படவில்லை. உடனே குதிரை மேலிருந்து கீழே குதித்துக் கோபாவேசம் கொண்டவளாய் மராட்டியர்களின்மேல் விழுந்து அவர்களைச் சின்னாபின்னமாக்கத் தொடங்கினாள். இப்படி இவள் யுத்தஞ் செய்துகொண்டிருக்கும்போது, ஒரு மராட்டியன் இவளுக்குத் தெரியாமல் பின்புறமாக வந்து இவளைப் பிடித்துக்கொண்டான். அப்படி பிடிக்கப்பட்டும் அவள் அவனுடைய பிடியைத் திமிறிக்கொண்டு, அவனையும், அவனைச் சேர்ந்த பலரையும் வீர சுவர்க்கத்திற்கு அனுப்பினாள்.

இதுவரையிலும் சாவித்திரிக்கு ஒரு காயங்கூடப் படவில்லை. அவ்வளவு சாமர்த்தியமாய்ப் போர் புரிந்தாள். ஆனால், இந்தச் சமயத்தில் நடந்த சச்சரவில்தான் இவள் தன்னுடைய வலது கையையும், கையிலிருந்த வாளையும் இழக்க நேரிட்டது. அந்தச் சமயத்தில்தான் சாவித்திரி சற்றுத் தளர்வடைந்தாள். ஐயோ! பரிதாபம்! இவள் தன்னுடைய கணவனின் கீர்த்தியைக் காப்பாற்ற வேண்டுமெனப் பட்டபாடெல்லாம் அவலமாய்ப் போயிற்று! சாவித்திரியை இந்த நிலைமையில் கண்ட அவளுடைய ஆட்கள் மீண்டும் உக்கிரத்துடன் மராட்டியர்களை எதிர்த்தார்கள். எதிர்த்து என்ன பயன்? தளகர்த்தனில்லாத சொற்ப ஜனங்கள் ஒரு பெரிய சேனையை எவ்வளவு நாழிகைதான் எதிர்த்து நிற்பார்கள்! அநேகர் இறந்து போனார்கள். வேறுபலர் மராட்டியர்களால் கைதியாக்கப்பட்டார்கள்.

சண்டை ஒரு முடிவுக்கு வந்த பின்பு சாவித்திரிக்கு விலங்கு பூட்டி, அவளை அச்சமயத்தில் கோல்காப்புரியிலிருந்த சிவாஜி மகாராஜனிடம் கொண்டுபோய் நிறுத்தினார்கள். சிவாஜி மிகவும் சற்குணவந்தர். அவர் சாவித்திரியையும் அவள் நிலைமையையும் பார்த்துப் பரிதபித்து அவளை விடுவித்துவிட்டார். அப்படி விடுவித்தபோது மிகவும் மரியாதையுடன் சிவாஜி மகாராஜா அவளை நோக்கி, "அம்மா! நான் உங்களை என் தாயாரைப் போல் கருதுகிறேன். உங்களுக்கும் உங்களுடைய குழந்தைகளுக்கும் யாதொரு குறைவுமின்றி சம்ரட்சணை செய்துவர நான் ஏற்பாடு செய்கிறேன்.





ஆதலால் உங்களுடைய விருப்பத்தைத் தயை செய்து தெரிவியுங்கள்" என்று கேட்டார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் சாவித்திரிக்குக் கோபத்தினால் முகம் சிவந்து விட்டது. அவள் அவனை நோக்கி, "ஏ! அரசனே! தற்சமயம் நான் உதவியற்றவளாயும், பலவீனமுள்ளவளாயும் இருக்கிறேன் என்றுதானே நீர் இவ்விதம் என்னை பரிகசிக்கவும் சோதனை செய்யவும் துணிந்தீர்? என்னுடைய தேசத்திற்குக் கேடாகவும், என்னுடைய பேருக்கும், என் ஆருயிர் கணவருடைய கௌரவத்திற்கும் அவமானமுண்டாக்கும்படியாகவும் நடப்பேன் என்று நீர் நினைக்கிறீரா? அவ்விதம் ஒருகாலும் நடக்கமாட்டேன். எங்களுடைய அரசனுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்வது எங்கள் குலத்து வழக்கமல்ல. நியாயமாயும் உண்மையாயும் நடக்கும் இந்த உத்தியோகஸ்தர்களால்தான் எங்களுடைய கோட்டை மதிப்படைந்திருக்கது. அப்படிப்பட்ட கோட்டையைச் சேர்ந்தவளாக நான் இருப்பதனால் நான் பெருமை பாராட்டிக் கொள்ளத் தடையென்ன? தயவுசெய்து என்னுடைய வாளாயுதத்தை இப்பொழுதே என் கையில் கொடுத்துவிடும். இந்த நிலைமையிலும் நான் என்ன செய்கிறேன் என்பதைப் பாரும். என்னுடைய கணவனும் அவருடைய முன்னோர்களும் பிடித்திருந்த அந்த ஆயுதத்தை உம்மிடம் விட்டுச் செல்ல இன்னமும் நான் சகிக்கமாட்டேன். மகாராஜாவே! நான் சொல்வதைக்கேளும். என்னுடைய கத்தியைத் திருப்பி என்னிடம் கொடுத்துவிடும். நான் என்னுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொள்ளுகிறேன்" என்று மகா உக்கிரத்துடன் கேட்டாள். தன்னைத் தானே விடுவித்துக்கொள்ளவும், தன்னுடைய வாளாயுதத்தைக் கைப்பற்றிக் கொள்ளவும் நினைத்து சாவித்திரி மிகுந்த கோபத்துடன் தன்னைச் சுற்றியிருந்த காவலாளர்களைத் தள்ளிக்கொண்டு வெளியே வரமுயன்றாள். இவளுடைய கம்பீரமான தோற்றமும், தைரியமான பேச்சும், திடமான சரீரமும் இவள் சாமானியமான பெண் அல்ல என்று நினைக்கும்படி அரசனைச் செய்தன.

அரசன் இவளை பெல்வாடிக்கே அனுப்பி இவளுக்கு வேண்டிய சகல சௌகரியங்களையும் செய்து மிகுந்த மரியாதையுடனும் கௌரவத்துடனும் வைத்திருந்தான். இவளுடைய குழந்தைகளை எல்லாம் பள்ளியில் வைத்துப் படிக்கும்படி அரசனே ஏற்பாடு செய்தான். ஆயினும் சாவித்திரிபாய் தன்னுடைய கணவனின் மரணத்தினால் அநுபவிக்க வேண்டிய துக்கத்தை அதிக நாள் இந்த பூலோகத்திலிருந்து அநுபவிக்காமலே வீரசுவர்க்கம் சென்றாள்.

இந்தியாவில் பண்டைக்காலத்தில் வீர தீர பராக்கிரமசாலிகளான பெண்மணிகள் இருந்திருக்கிறார்கள் என்னும் உண்மையை உலகத்தாருக்கு அறிவித்து, கணவனுடைய கீர்த்திப் பிரதாபத்துக்கு எவ்வித பங்கமும் நேரிடாமல் காத்து, தன்னல மறுப்பே மக்களுக்கு அவசியம் வேண்டுமென்பதைக் குறிப்பித்து, தனது புகழ் என்றும் அழியா வண்ணம் யுத்தம் செய்து இம்மண்ணுலகைத் துறந்த சாவித்திரிபாய் இறந்தும் இறவாதவளே என்பதில் தடையென்ன?

# கார்த்திகை தீபம்

"ஜனககுமாரி"

இந்த உத்ஸவம் தமிழ் நாட்டிலுள்ள ஆலயங்களிலும் கிரகங்களிலுமாத்திரமே தான் மிக்க ஆதரவுடன் கொண்டாடப் படுகிறதாய்த் தெரிகிறது. இந்த உத்ஸவத்தைப்பற்றி, தர்ம சாஸ்திரங்களில் ஆதாரம் காணப்படுவதுடன் ஆகம சாஸ்திரங்களும் விசேஷமாய்ச் சொல்லியிருக்கிறது. இவற்றில் தர்ம சாஸ்திரங்களில் சொல்வதாவது:—கார்த்திகை மாதத்தில் வரும் பூர்ணிமையானது சில வருஷம் கிருத்திகா நக்ஷத்திரத்தோடும் சில வருஷம் பரணியோடும் சில வருஷம் ரோகிணியோடும் சேர்ந்து வருவதுண்டு.

இவைகளில், பூர்ணிமை கிருத்திகா நக்ஷத்திரத்தோடு சேர்ந்து வந்தால் அதற்கு பத்மக யோகம் என்று பெயர். ரோகிணியுடன் சேர்ந்து வந்தால் அந்தப் பூர்ணிமைக்கு மஹாகார்த்திகீ என்று பெயர். இத்தினமே தான் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் அவதாரமாகிய மத்ஸ்யாவதார தினம். தவிர, பதினான்கு மன்வாதி புண்ய காலங்களில் இது தக்ஷஸாவர்ணிக மன்வாதி. இந்தத் தினத்தில் ஸ்நாநம், தானம், விருக்ஷோத்ஸர்ஜனம், முதலிய பல புண்ய கார்யங்கள் செய்யும்படி விதிக்கப்பட்டிருப்பதுடன், சிவன், விஷ்ணு, முதலிய தேவாலயங்களிலும் கிரகங்களிலும், சாயங்காலத்தில் தீபோத்ஸவம் செய்ய வேண்டுமென்றும் இந்தத் தீபங்களைத் தெரிசித்த பிராணிகள் மறுபடி ஜென்மம் எடுக்க மாட்டார்களென்றும், இந்தத் தீபங்களைத் தெரிசித்த பஞ்சமன் கூட பிராமணனாய்ப் பிறந்து விடுவானென்றும் கிரந்தங்கள் கூறுகின்றன.

இந்தத் தினத்தில், ஜன்மமத்தியத்தில் ஒரு தடவை சுப்பிரமணியக் கடவுளைத் தெரிசித்தவன் ஏழு ஜென்மங்களில் மகா தாட்டியனாகவும் மகா வித்வானாயுமுள்ள பிராமணச் சிரேஷ்டனாகப் பிறக்கிறான் எனக் காசிக்காண்டம் கூறுகிறது. இது நிற்க, காரணம் முதலிய ஆகம சாஸ்திரங்களில் சில விசேஷங்களும் சொல்லப்படுகிறது. அதாவது, இந்தப் பர்வதினத்திற்கு முதல் தினத்திலேயே ஆலயங்களில் முக்கியமாய்ச் சில தீபங்களை வைத்து அவைகளுக்கு ஆகமத்திற் சொல்லிய விதிப்படி பூஜைகள் செய்யவேண்டும். அவலை வறுத்துச் செய்த பொரி யென்பது முக்கிய வஸ்து. பிறகு ஆலயங்களைத் தீபங்களால் அலங்கரித்து ஸ்வாமியின் பூஜை முடிந்த பிறகு, முன் பிரதிஷ்டை செய்த தீபங்களையும், திவ்ய மூர்த்திகளையும் வாத்திய கோஷம் முதலிய உத்ஸவக் கொண்டாட்டத்துடன் வீதிப் பிரதக்ஷிணம் செய்துவைத்து, பிறகு அந்தத் தீபங்களைக் கொண்டு ஸ்ந்நதியில் இருபத்திநான்கு முழம் உயரத்தில் கட்டப்பட்ட சொக்கப்பானையை விதிப்படி பூஜித்து எரிக்கவேண்டும். அந்தச் சொக்கப்பானை எரியும்பொழுது, அந்த ஜோதிசை, சிவனது ஜியோதிர்லிங்கமாய்ப் பாவிக்க வேண்டும். இதுவே முப்புரங்களையும் எரித்த பாவனையும் ஆகும். நிற்க, இதை நாம் திரிபுர உத்ஸவம் என்றும் சொல்லலாம். அதற்கு த்ரிபுரர் என்னும் அசுரர்களைப் பரமசிவன் எரித்து, தேவர்களையும், உலகங்களையும் காத்த தினத்தில் கொண்டாடப்படும் உத்ஸவம் என்பது பொருள்.

# தீபாவளியும், நரகசதுர்த்தசியும்

ஸ்ரீமதி டி. எஸ். ஜானகி அம்மாள்

இந்த இரண்டு புண்ய தினங்களுக்கும் பொதுவாக தீபாவளி யென்ற பெயர் நம் பாரதவருஷம் (இந்தியா) முழுவதும் வழங்கி வருகிறது. இந்தப் பண்டிகைகளை ஹிந்துமதத்தைச் சேர்ந்தவர்களில் கொண்டாடாதவரில்லை. ஹிந்துக்கள் பல தினங்களில் அனுஷ்டித்து வருகிற புண்ய காரியங்களுக்குள், இந்தத் திபாவளிப் பண்டிகை, உபவாஸம் முதலிய தேகப் பிரயாஸமும், இதை எப்படிச் செய்து முடிப்போம் என்ற விசேஷ மனக்கவலையுமில்லாமல், மிக்க ஆவலுடன் எதிர்பார்க்கும் புண்ய கார்யமாயிருக்கின்றது. தீபாவளி என்னும் பெயர், சிவன், விஷ்ணு, முதலிய தேவர்களின் ஆலயங்களிலும், கிரகங்களிலும் தீபங்களால் அலங்கரிக்க வேண்டியது பற்றி வந்தது. தீபாவளி என்பதற்குத் தீபங்களின் வரிசை என்று பொருள். நரகசதுர்த்தசி என்பதற்கு நரகாஸுரன் ஸ்ரீ கிருஷ்ண பகவானால் வதஞ்செய்யப்பட்ட காலமாகிய சதுர்த்தசியின் உஷக் காலத்தில் அப்யங்க ஸ்நானம் செய்வது பற்றியும், அன்று இரவில் செய்ய வேண்டியதான தீப உத்ஸவமும், ஆகாச தீபமும் மனிதர்களுக்கு நரக பயத்தைத் தீர்த்து விடுமென்பது பற்றியும் வந்த பெயராகும்.

மேற்சொன்னவைகளில் முதலாவதான தீபாவளிக்குக் காரணமாகச் சொல்லப்பட்டிருக்கும் இதிஹாஸமாவது:—

கிருதயுகத்தில் அசுரகுலத்தலைவனாகிய ஹிரண்யகசிபுவின் ப்ரபௌத்ரன் மஹாபலி சக்கரவர்த்தி யென்று ஒரு புண்ய புருஷரிருந்தார். அவர் அசுர குலத்திலுதித்தவராயினும் விஷ்ணு பக்தியில் சிறந்த மஹா புருஷர். அவர் காலத்தில், ஜனங்களில் எவருக்கும் ஏழ்மை இன்னதென்று தெரியாமலிருக்கும்படி அரசு புரிந்து வந்தார். சகல ஜனங்களும் மிகுந்த சம்பத்துடன் தங்களிஷ்ட தெய்வங்களைக் கொண்டாடி நித்யோத்ஸவமாய் ஆனந்தித் திருக்கும்படி நடத்தி வந்தார். ஆனபடியால் அவர் ராஜ்ய பரிபாலனம் செய்யும்போது பூமண்டலத்தில் வசிக்கும் ஜனங்களுக்காவது, ஜகந்நாதனான நாராயணனுக்காவது அவரிடத்தில் அப்ரீதியில்லை யென்பது மாத்திரமல்ல, அன்பும் மிகுந்தே வந்தது. ஆனால் அவர் தன் குலவழக்கப்படி இந்திரன் முதலான தேவர்களிடத்தில், அவர்களுக்கு எப்பொழுதுமுள்ள அதிகாரத்தை விட்டு விலக்கி, தாயாதி விரோதத்தைப் பாராட்டி சர்வ அதிகாரங்களையும் தாமே நிர்வகித்து வந்தார். இந்த ஒரு குற்றத்திற்காகவே சகல தேவர்களுங்கூடி ஸ்ரீமந் நாராயணனைச் சரண மடைந்தனர். அப்பொழுது அவரும் மஹா பக்த சிரோன்மணியாகிய அந்த பலிச்சக்கரவர்த்தியை நிக்ரஹத்தால் வெல்வது நியாய விரோதமானகையால் அனுக்ரகத்தாலேயே வென்று, சரணமடைந்த தேவர்களையும் அனுக்ரகிப்

பதாய் வாக்களித்துத் தேவர்களை அனுப்பினர். பிறகு தம்மைப் புத்திரனாக அடைய வேண்டி நெடுங்காலம் தவம் புரிந்த அதிதியின் கர்ப்பத்தில் கச்யபப்ரஜாபதியின் புத்திரராய் அவதரித்தார். அப்படி அவதரித்த மூர்த்திக்கு வாமன மூர்த்தி யென்று பெயர். வாமனன் என்பதற்குச் சித்திரக் குள்ளன் என்று பொருள். இது அந்த மூர்த்திக்குக் காரணப் பெயருமாகும். இந்திரன் மாதாவாகிய அதிதியின் கர்ப்பத்தில் இந்திரனுக்கு அநுஜராக ஜனித்தமையால் உபேந்திரன் என்ற பெயரும் உண்டு. இவர் சிலகாலம் ஸித்தாச்ரமம் என்ற புண்ய பூமியில் பிரம்மச்சர்ய நியமத்தோடு தவம் புரிந்து பிறகு ஒரு சமயம் மஹாபலி சக்ரவர்த்தி ஒரு யாகம் செய்யும் தருணத்தில் சிஷ்ய வேஷதாரிகளான பல தேவர்களுடன் வந்து சேர்ந்தார். அப்பொழுது திவ்ய தேஜஸுடன் விளங்கிய இந்தப் புண்ய மூர்த்தியைக்கண்டு மஹாபலிசக்கரவர்த்தி மனமகிழ்ச்சியுடன் எதிர்கொண்டழைத்து விதிப்படி பூஜை செய்து "அடியேன் செய்யவேண்டிய கைங்கர்யங்களென்ன" என்று கேட்டார். அப்பொழுது வாமனமூர்த்தி, தாம் தவம்செய்வதற்காக தமது கால்அடியால் மூன்றடி பூமி சொந்தமாய்க் கொடுக்கவேண்டுமென்று கேட்டார். அப்படியே கொடுப்பதாக மஹாபலிசக்கரவர்த்தி ஒப்புக்கொண்டார். அப்பொழுது இந்த வாமன மூர்த்தியின் கபடச் செய்கையையறிந்து தானம் கொடுக்கவொட்டாமல்செய்த தன் குலகுருவாகிய சுக்ராசாரியரின் வார்த்தைகளையும்மீறி, தாம் வாக்களித்தபடி பூமி தானம்செய்து முடித்தார். உடனே ஸ்ரீ வாமனமூர்த்தி தன் வாமனரூபத்தை மாற்றி மூன்றுலோகங்களும் நிறைந்த திருவிக்ரமரூபத்தை எடுத்து ஆச்வயுஜ கிருஷ்ணத்ரயோதசி, சதுர்த்தசி, அமாவாஸ்யை, இந்த மூன்றுதினங்களிலும் பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம், என்னும் மூன்று உலகங்களையும் மூன்று அடியாக அளந்து தம்வசப்படுத்திக் கொண்டார். அப்பொழுது மாஹாபலி சக்ரவர்த்தி, புருஷோத்தமரின் மஹிமையைக் கண்டு "இந்த மஹா புருஷரிடம் நம்முடைய சகல பாக்யத்தையும் ஒப்புவிக்கும்படியான பாக்யம் கிடைத்ததே" என்று ஆனந்தித்து துதிக்கும்போது பகவான், ஸ்வர்க்கத்திலும் மேலான ஸுகஸ்தானமும் சாச்வதமுமான பாதாளலோகத்தில் சிரஞ்சீவியாகவிருந்து அரசுபுரிந்து தம்மையும் பூஜித்துக் கொண்டிருக்கும்படி அனுக்கிரகித்தார். அப்பொழுது இந்த உலகங்களை அளந்த தினங்களில் ஒவ்வொரு வருஷத்திலும் தாம் இந்த பூலோகத்தை வந்து தரிசிக்க வேண்டும் என்றும், அந்தத்தினங்களில் தாம் அரசாட்சி செய்யும்காலத்தில் எவ்வாறு ஜனங்கள் மஹோத்ஸவத்துடனிருந்தார்களோ, அவ்வாறே சகலஜனங்களும் மஹோத்ஸவம் கொண்டாடவேண்டுமென்றும் வரம் கேட்டுக்கொண்டார். பக்தவத்ஸலரான ஸ்ரீபகவானும் அப்படியே சகல ஜனங்களும் மஹோத்ஸவம் கொண்டாடட்டுமென்றும், அப்படிச் செய்யாதவர்கள் பாபத்துக்காளாவார்களென்றும் வரமளித்தார். ஆகையால், அதுமுதல் இந்தத் தீபாவளி என்பது ஒரு பெரிய புண்யதினமாய் வழங்கி வருகிறது. த்ரயோதசி, சதுர்த்தசி, அமாவாஸ்யை, என்ற இந்த மூன்றுதினங்களும் மஹாபலி ராஜ்யமென்று சொல்லப்படுகிறது.





## நரகசதுர்த்தசி.

துவாபர யுகத்தின் முடிவில் இந்தியாவுக்கு வடமேற்கிலிருந்த பிராஜ்யோதிஷம் என்னும் நகரத்தில், நரகாசுரனென்று ஓர் அசுரவீரன் ராஜ்யபரிபாலனம் செய்து கொண்டிருந்தான். அவன் தன்னுடைய பராக்கிரமத்தால் பூமண்டலத்திலுள்ள அரசர்களையெல்லாம் வென்று, அவர்களிடமிருந்த தனங்களை யபகரித்து மிகுந்த தனவானாக இருந்ததுமாத்திரமல்ல; தான் ஆங்காங்கு விஜயத்துக்குச் செல்லும்பொழுது புலப்பட்ட அழகிற்சிறந்த கன்னிகைகளையும் அபகரித்துக்கொண்டுவந்து பதினாயிரத்துநூறுகன்னிகைகளையும் சிறையில் வைத்திருந்தான். அப்படிப்பட்ட கொடியவனை வதம் செய்யவேண்டுமென்ற தேவேந்திரனது வேண்டுகோளுக்கிணங்கி, ஸ்ரீ கிருஷ்ணபகவான் பிராஜோதிஷத்தின்மேல் படையெடுத்துச் சென்று அந்த நரகாஸுரனுடன் போர் புரிந்து கடைசியாய் அவனைச் சக்ராயுதத்தால் வதஞ்செய்தார். அவன் பூமிதேவியின் புத்ரனாகையால், பூமிதேவியின் வேண்டுகோளின்படி, அவனுடைய பிராண வியோககாலத்தில் ஸ்ரீ பகவான், சங்கம், சக்கரம், கதை, பத்மம், இவைகளுடன் சோபிக்கின்ற சதுர்புஜங்களுடன், பீதாம்பரதாரியாய், நீலமேகச்யாமளராய் கௌஸ்துப ரத்தினமணிந்தவராய், வனமாலாதாரியாய் இன்னும் பலவித விஷ்ணு வைபவங்களுடனும் அவனுக்குத் தரிசனம்கொடுத்தார். அப்பொழுது அவன் பகவானைத் தரிசித்து தனது மோக்ஷகாலமாகிய இந்த ஐப்பசி மாதம், கிருஷ்ண பக்ஷம், சதுர்த்தசிகூடிய உஷக்காலத்தில் சகல ஜனங்களும் அப்யங்கஸ்நானஞ் செய்து மஹோத்ஸவம் கொண்டாட வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். ஸ்ரீ கிருஷ்ணபகவானும் அப்படியே அனுக்ரஹித்து, அந்தக்காலத்தில் தைலத்தில் லக்ஷ்மியும், ஜலத்தில் கங்கையும் வசிக்கட்டுமென்றும், இந்த அப்யங்கஸ்நானத்தால் ஜனங்களுக்கு லக்ஷ்மி விருத்தியும் பாபக்ஷயமும் உண்டாகட்டுமென்றும், அப்படிச்செய்யாதவர்களுக்குப் பாபமே சம்பவிக்கும் என்றும் அனுக்ரஹித்தார். அதுமுதல் நரகசதுர்த்தசிஎன்று வழங்கிவருவதாக ஹரிவம்சம்முதலிய புராணங்களால் தெரியவருகிறது.

இந்தத் தினங்களில் செய்யவேண்டியவைகளாவன. திரியோதசிஅன்று இராத்ரி சிவன், விஷ்ணு, முதலிய தேவாலயங்களிலும் தங்கள் தங்கள் வீடுகளிலும் தீபங்கள்வைத்து அலங்கரிக்கவேண்டும். தவிர ஆகாசதீபம் ஒன்று போடவேண்டும். அதாவது எட்டுதிக்குகளிலும் வெளிச்சம் தெரியக்கூடிய பத்மாகாரமான ஒரு கூடு செய்து அதில் தீபம்வைத்து, உயர்ந்த ஸ்தம்பத்தின்மேல் வைக்கவேண்டும். இதற்காகவே சிலதேசங்களில் கூடுகட்டித் தொங்கவிடுவது வழக்கமாகிவிடுகிறது. இந்த ஆகாசதீபம் பிதுர்தேவதைகளுக்கும் யமதர்மராஜாவுக்கும் பிரீதிகரமென்று சாஸ்திரம் கூறுகிறது. சதுர்த்தசியன்று இரவு 4ம் ஜாமத்தில் முக்கியமாய் சந்திரோதயகாலத்தில் ஸுகந்த தைலங்களால் அப்யங்கஸ்நானம் செய்துகொள்ளவேண்டும். ஸ்நாநம் செய்யும்பொழுது, சுரைஇலை, நாயுருவி, தகரஇலை இவைகளைக் கையிலெடுத்துக்கொண்டு தன் தலையை மூன்று சுற்றுச்சுற்றி வடகிழக்குத் திக்கில் எறிந்துவிட்டு ஸ்நானம் செய்யவேண்டும். இது ஒரு பீடாபரிகார விதியாம். ஸ்நானம் செய்தபிறகு புதியவஸ்திரங்கள் தரித்துக்கொண்டு சக்திக்கியன்ற ஆபரணங்களையும், நல்ல கந்தங்களையும் புஷ்பங்களையும் தரித்துக்கொள்ளவேண்டும். அன்று தமது பந்துஜனங்களுடன் புசித்து, சங்கீதமுதலிய சந்தோஷ கார்யங்களுடன் ஆநந்தித்திருக்க வேண்டும். ஸ்ரீ கிருஷ்ணபகவான் அனுக்ரஹிப்பார்!



# பெண் பாவம்!

ஸ்ரீமதி, அம்புலு

திருபுரசுந்தரி அம்மாள் எஞ்சினீயர் சாம்பசிவ அய்யர் வீட்டில் வேலைக்கமர்ந்து பதினைந்து தினங்களேயாயின. என்றாலும் வேலைத்திறமையாலும் பணிவாலும், இதற்குள் அவ்வீட்டிலுள்ளவர்களின் பிரியத்தைக் கவர்ந்துவிட்டாள். அன்னையிடம் தோன்றும் அன்பு, அவ்வீட்டில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் ஈறாக அவளிடம் தோன்றியது.

எஞ்சினீயர், அவர் சம்சாரம் சுப்புலெக்ஷ்மி அம்மாள், அவர்களின் ஐந்து குழந்தைகள், ஆகியவர்களே அவ்வீட்டிற்கு உடையவர்கள். இரண்டு வேளையும் சமையல் செய்து, காப்பி முதலியவைகள் தயாரித்து எல்லோருக்கும் வேளாவேளைக்குப் பறிமாறுவது திரிபுரசுந்தரி அம்மாளின் வேலை. சாப்பாடும், மாதம் பதினைந்து ரூபாயும் இதற்குச் சம்பளம்.

ஒரு நாள் ஏதோ அலுவலாய் எஞ்சினீயர் வெளியூருக்குச் சென்று விட்டார். வீட்டில் எல்லோருக்கும் அன்று விடுமுறை நாள் போல் சற்றுக் குதூகலமாயிருந்தது. ஏனென்றால், அவர் சற்றுக்கண்டிப்பான மனிதர். குழந்தைகளின் இரைச்சலுக்கும், பிடிவாதத்திற்கும் பெரியவர்கள் வம்புக்கும், அவர் இடங்கொடுக்கமாட்டார். அவரிடம் எல்லோருக்கும் கொஞ்சம் பயமுண்டு. அவர் வீட்டிலிருக்கும்பொழுது எல்லோரும் இருக்குமிடம் தெரியாமல் இருப்பார்கள்.

அன்று பகல் சாப்பாட்டிற்குப் பிறகு அனைவரும் கூடத்திலமர்ந்து பேசிக்கொண்டிருக்கையில் பன்னிரண்டு வயதுடைய எஞ்சினீயர் பெண் ராஜம் பேச்சுவாக்கில் "என் அம்மாமி! நீங்கள் சுமங்கலியாய்த்தானே இருக்கிறீர்கள். உங்க ஆத்து மாமா எங்கே இருக்கிறார்?" என்று கேட்டாள். எல்லோரும் திரிபுரத்தின் முகத்தை நோக்கினர். அவள் முகத்தில் சடக்கென்று துயரம் குடிகொண்டது. ஒரு நிமிஷம் திகைத்துப்பின் "இருக்கிறார், அவர் ஊரில் அவர் இருக்கிறார்" என்றாள்.

இராஜம், "எந்த ஊரில்? அவர் என்ன செய்துகொண்டிருக்கிறார்? இங்கே உங்களைப் பார்க்க வருவாரா?" என்றெல்லாம் கேட்டாள். திரிபுரத்தம்மாள், "அதெல்லாம் பெரிய கதை" என்று சுப்புலக்ஷிமியம்மாளிடம் பின்வருமாறு கூறத் தொடங்கினாள்.

"நான் என் பெற்றோர்களுக்கு ஒரே பெண். எவ்வளவோ சீருஞ் செல்வமுமாய் என்னை வளர்த்தார்கள். என் தகப்பனாருக்குப் பாமக்குடியில் கொஞ்சம் காணி பூமியும் பள்ளிக்கூட வாத்தியார் வேலையும் இருந்தது. வேறு சந்ததி இல்லாததால் நான் வெகு செல்வப் பெண்ணாய் வளர்ந்தேன். நான் எழெட்டு வயதாயிருக்கும்பொழுது என்னை நல்ல யிடத்தில் கல்யாணஞ் செய்து கொடுக்கவேண்டு



பெர்லினுக்குப் பக்கத்திலிருந்து படகுகளில் காய்கறிகள் கொண்டு போகும் காட்சி.



"குர்னு பார்க்கிறயா"



யசோதா — கிருஷ்ணன்



மென்று வரன் தேடித்தேடிக் கடைசியில், பாபநாசத்தில் பத்து வேலி நிலமுடைய ஒரு மிராசுதார் பிள்ளைக்கு என்னைக் கொடுத்தார். என் புருஷன் மெட்ரிகுலேஷன் வரையில் படித்திருந்தார். பார்வைக்கு இராஜ வடிவா யிருப்பார். அவரோடு கூடப்பிறந்தவர்கள் நாலு தம்பிமார்களும் உண்டு. இவர்தான் எல்லோரிலும் பெரியவர்.

என் தகப்பனார் என்பேரிலுள்ள வாஞ்சை யால், பணத்தைப்பாராமல் மூவாயிரம் வர தக்ஷிணை கொடுத்து வெகு விமரிசையாய்க் கல்யாணம் செய்தார். இவ்வளவு பெரிய குடும்பத்தில் சம்பந்தஞ் செய்து சீரும் வரிசை யும் குறைவரச் செய்ததுபற்றி அந்த நாளில் அவரைப் புகழாதாரில்லை. என் புருஷன் வீட்டாரும், என்னிடத்திலும் என் தகப்பனா ரிடத்திலும் எவ்வளவோ அன்பாயிருந்தார்கள்.

பிறகு நான் புஷ்பவதியானேன். உடனே என் மாமனார் என்னைத் தன் வீட்டிற்கழைத் துக்கொள்ள அவசரப்பட்டார். என்னைப் பிரிய மனமில்லாத என் தந்தை சம்பந்தியிடம் நான் சிறு குழந்தையாயிருப்பதாகவும், இரண் டொரு மாதங் கழித்து அனுப்புவதாகவும் தெரிவித்தார். அவரும் சரிதானென்று ஒப் புக்கொண்டார். ஆனால் அன்றே என் விதி சிரித்தது ஒருவருக்கும் தெரியாது.

எங்கள் குடும்பத்திற்கு க்ஷீணதிசை ஏற் படத் தொடங்கியது. முதலில் என் தகப்ப னாருக்கு வேலை போய்விட்டது! பிறகு, காணி பூமிகளை ஒவ்வொன்றாய் விற்று, அரிசிமில் என்றும், மளிகைக்கடை என்றும் ஏதோதோ ஜீவனோபாயந்தேடும் முயற்சியில் இறங்கினார். ஆனால் ஒன்றும் நடைபெறவில்லை. எல்லா வற்றிலும் நஷ்டம்! கைவைத்ததெல்லாம் உருப்படாமல் போய்விட்டது. கண்ணியமாய் கௌரவமாய் நடந்து கொண்டிருந்த எங்கள் குடும்பம் சீர் கெட்டுவிட்டது. எங்கள் குடும் பத் தொல்லைகளெல்லாம் ஓயட்டுமென்று, முதலில் நல்ல எண்ணத்தோடுதான் என் மாம னார் ஒரு வருஷ காலம் பொறுத்திருந்தார். பிறகு "அவனே திண்டாடிக் கொண்டிருக் கிறானே, பெண்ணை எப்படிக்கொண்டுவந்து விடப்போகிறான்" என்பதே அவர்கள் யோசனையாய் விட்டது. என் தகப்பனாரோ "முன்பு எவ்வளவோ அவசரப்பட்டவன், இப்பொழுது நம்மிடம் காசில்லாததால் பேச்சே எடுக்காமலிருக்கிறான். நாமென்ன செய்வது" என்று வருத்தமடைந்தார். அவ ரவருக்குத் தோன்றியதை அவரவர் சொல்லிக் கொண்டு இப்படியே ஒரு வருஷம் ஓடி விட்டது!

மூன்றாவது வருஷமும் பிறந்தது. எங்கள் குடும்பமும் அதே ஸ்திதியிலிருந்தது. என் தகப்பனார் மனமுடைந்து தன் சம்பந்திக்கு ஒரு கடித மெழுதினார். அதாவது "எடைக்கு எடை சதையாவது பிய்த்துத்தருகிறேன். தயவுசெய்து பெண்ணையழைத்துக் கொள்ள வும்" என்று. ஆனால் அக்கடிதம் என் மாம னாருக்கு மிக ஆத்திரத்தை உண்டாக்கியது. அதற்குப் பதில் அவர் "உன் சதையும் வேண் டாம். உன் பெண்ணும் வேண்டாம்" என்று எழுதி விட்டார். என் பெற்றோர்களுக்கு என் கவலையே பெரிதாய்ப் போய்விட்டது. என் நிலைமையே அவர்கள் ஸ்திதியைப்பன் மடங்கு கேவலமாய் எடுத்துக்காட்டியது. என்னைப்பார்த்துக் கண்ணீர் விட்டு விட்டு என் தாய் சில மாதங்களில் இறந்துவிட்டாள். நானும் என் தகப்பனாரும் எல்லையற்ற மனத் துயரோடும் கஷ்டத்தோடும் காலந்தள்ளிக் கொண்டிருந்தோம்.

நாலைந்து வருஷங்களுக்குப் பிறகு நான் என் தகப்பனாருக்குப் பாரமாயிருப்பதை யுணர்ந்தேன். என்ன செய்வதென்று யோசித்துக் கடைசியில் ஒரு தடவை நேரில் புருஷன் வீட்டிற்குச் சென்று, அவர்கள் காலில் விழுந்து எப்படியாவது ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக்கொண்டு அங்கிருப்

படே நலம் என்று தீர்மானித்து என் தகப்பனாரிடம் என்னை யழைத்துக்கொண்டு போகும்படி தெரிவித்தேன். இதன் நடுவில் என் புருஷனுக்கு வேறு விவாகம் செய்வித்து விட்டதாகவும், யாரோ சொல்லிக் கேள்விப்பட்டோம். என் தகப்பனார் கண்ணீர்விட்டு "அம்மா! நீ உன் புருஷனை மறந்துவிடு. நீ ஒரு கன்னிகையாயிருப்பதாகவே நினைத்துக்கொள்" என்றார். பிறகு என் பிடிவாதத்தின் பேரில் அழைத்துக்கொண்டு போவதாய் ஒப்புக்கொண்டார்.

ஒரு நாள் சாயங்காலம் நானும் என் தந்தையுமாய்ப் புறப்பட்டு என் புருஷன் வீட்டையடைந்தோம். என் மாமனார் வாசத்திண்ணையில் உட்கார்ந்து சந்தியாவந்தனம் செய்துகொண்டிருந்தார். எங்களைக் கண்டவுடன் சரேலென்று பஞ்சபாத்திரத்தை எடுத்துக்கொண்டு உள்ளே போய்விட்டார்! வாவென்று அழைப்பாரில்லாமல், நான் உள்ளேசென்று ஒருபுரமாய் நின்றுகொண்டிருந்தேன். என் தகப்பனார் வாசத்திண்ணையிலேயே உட்கார்ந்துவிட்டார்.

இராஜம் இடைமறித்து, "ஏன் அம்மாமி, அப்பொழுது நீங்கள் உங்கள் மாமாவின் இளையாளைப்பார்த்தீர்களா?" என்றாள். குழந்தைகள் ஒவ்வொருவரும் வெகுகவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தனர். இஞ்சினீயரின் சம்சாரத்தின் முகத்தில் ஈயாடவில்லை.

திரிபுரம் "ஓ, பார்த்தேன். பச்சைக் கிளிமாதிரி ஒரு பெண் வந்திருக்கிறாள். ஒரு பிள்ளைக் குழந்தை இரண்டு வயதில் என் புருஷனைப் போலவே இருக்கிறது. நான் உள்ளே போனதும் அம்மாவிடம் ஓடி, "அம்மா! யாரோ ஒரு புது அம்மாமி வந்திருக்கா. காப்பி கொடு" என்றது. அதன் பிறகு எல்லோரும் உள்ளிருந்து வெளியே வந்தனர். மைத்துனன்மார்களுக்கெல்லாம் விவாகமாகி, அப்பெண்களெல்லாம் வந்திருக்கிறார்கள். அச்சிறிய பெண்களெதிரில் நின்றுகொண்டிருக்க எனக்குச் சகிக்கமுடியாத அவமானமாயிருந்தது.

சிறிது நேரத்தில் எங்கிருந்தோ என்மாமியார் வந்து சேர்ந்தாள். அவளை நமஸ்கரித்தேன். அவள் என்னை உற்றுப்பார்த்துவிட்டு, "யாருடி! திருபுரமா!" என்றாள். "ஆமாம்" என்றேன். உடனே ஏதோ பழைய சங்கதிகளை எடுத்து வாயார வாழ்த்திக்கொண்டேயிருந்தாள். அஸ்தமித்ததும் தலையில் முண்டாசுந்தாருமாய் என் கணவன் வந்துசேர்ந்தார். அங்கும் இங்கும்போய் என்னையும் ஏறஇறங்கப் பார்த்துவிட்டுப் பழையபடியும் வாசலில் போய் விட்டார்.

என் தகப்பனார் உயிரைக் கையில்பிடித்துக்கொண்டு என் மாமனாரிடம் சென்று, "திருபுரத்தைக் கொண்டுவந்து விட்டிருக்கிறேன். என் சங்கதிகளெல்லாம் தங்களுக்குத் தெரியாததல்ல. நான் புதிதாய் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. நான் என்ன தப்பிதம் செய்திருந்தாலும் மன்னித்து அவளைத் தங்கள் குழந்தைபோல் ஆதரிக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். ஆனால் அப்பாதகனின் நெஞ்சம் இளகவில்லை. அதற்குப்பதில் ரௌத்திராகாரமாய்க் கோபமே பொங்கியெழுந்தது. "உன் பெண்ணைக் கூட்டிக்கொண்டு வந்தவழியே நட. இனி உனக்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை" என்று சீறிவிழுந்தார். என் தந்தையின் மனம் எவ்வாறிருக்குமென்று நீங்களே யோசித்துப்பாருங்கள். உடனேயவர் என்னிடம்வந்து "அம்மா! புறப்படுகிறாயா? என்னசெய்யப்போகிறாய்?" என்று கண்களில் நீர்ததும்பக்கூறினார். நான் "அப்பா! கொஞ்சம் பொறும். அவர் வரட்டும்" என்றேன். என் தந்தை சரி என்று வாசலில்போய் விட்டார்.

இரவு சாப்பாடு முடிந்தது, என் கடைசி மைத்துனன் என் தகப்பனாரைச் சாப்பிட அழைத்தான். ஆனால் அவர் சாப்பிடமறுத்து





விட்டார். என்னையும் ஓரகத்தியொருவள் வந்து சாப்பாட்டிற்கழைத்தாள். எல்லோரும் சாப்பிட்டபிறகு சாப்பிடுவதாய்க் கூறிவிட்டேன். என் புருஷன் சாப்பிட்டுக் கூடத்தைக் கடந்து செல்லும்பொழுது எதிரில் சென்று நமஸ்கரித்தேன். அவரும் நின்றார்.

மேலே சொல்ல முடியாமல் திருபுரசுந்தரி அம்மாளின் நெஞ்சம் அடைத்துக்கொண்டது. கண்களில் நீர் நிறைந்து விட்டது. நிமிஷ நேரம் ஒன்றும் சொல்லாமல் தன்னைச் சமாளித்துக்கொண்டு பிறகு பேசலுற்றாள்.

"அவர் முகத்தைப்பார்த்ததும் எங்கிருந்தோ என் துக்கம் குபீரென்று பாய்ந்தது. எவ்வளவோ சொல்ல நினைத்த நெஞ்சம் ஓர் பாரைவைத்து மூடியது போலாகிவிட்டது. விசிப்பும், அழுகையுந் தவிர வேறொன்றும் வரவில்லை. அப்படியும், மெதுவாய் சமாளித்துக்கொண்டு, "என்னை அங்கீகரிக்க மாட்டீர்களா?" என்று அவர் முகத்தைப்பார்த்தேன். அவர் முகத்தில் எள்ளளவாவது வருத்தமோ, இரக்கமோ தோன்றவில்லை. மரம்போல் நின்றுகொண்டிருந்தார். அது என்னைத் துண்டு துண்டாய் வெட்டுவதுபோலிருந்தது. நான் என்னையுமறியாமல் "ஐயோ! என். கெதி என்ன?" என்றலறினேன். அவர் நிதானமாய் "நான் என்ன செய்யமுடியும்?" என்றார். உடனே என்தகப்பனார் என்கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு வெளியே வந்துவிட்டார்.

சென்ற வருஷம்வரையில், நானும் என் தந்தையும் ஒருவர் துயரத்தை யொருவர் பங்கிட்டுக்கொண்டு ஒருவருக்கொருவர் துணையாய் காலந்தள்ளி வந்தோம். விதியின் சதிக்கு எல்லையே இல்லை போலும்! என் வாழ்க்கையைப் பாழாக்கியவிதி, அதோடு திருப்தியடையாமல் நிர்கதியாக்கியும் வேடிக்கை பார்க்கவிரும்பியது. என்னைக் கண்ணிமைபோல் பாதுகாத்த என் அருமைத் தந்தையும் சென்றவருஷம் காலமானார். இப்பாழும் உலகில் நான்தான் மிஞ்சி நின்றேன்.

என் தகப்பனாரிருக்கும்பொழுது என் ஜீவனாம்சத்திற்காக என் புருஷன் வீட்டார்மீது வழக்குத் தொடரும்படி எல்லோரும் சொன்னார்கள். ஆனால் என் தந்தை "ஒரு பாவமும் அறியாத பெண்ணுக்குத் துரோகம் செய்தவனிடம் காசுக்கு வழக்காடுவதா", என்று மறுத்துவிட்டார்.

எவ்வளவு துக்கம் வந்தாலும் உயிருள்ளமட்டும் சோறும் துணியும் வேண்டும். இப்பொழுதுதான் ஏழெட்டு மாதங்களாய் வேலைக்குப் புறப்பட்டேன். நானும் இரண்டொரு இடங்களில் வேலை செய்தேன். இந்தயிடம் என் மனதிற்குப் பொருத்தமாயிருக்கிறது. ஏதோ பகவான் இனி என்னை அங்குமிங்கும் அலைக்கழிக்காமல் இங்கேயே என் மீதிகாலத்தைக் கழிக்க அநுக்கிரகிக்கவேண்டும்." என்று கூறி முடித்தாள்.

"அம்மாமி! நீங்கள் எங்கிட்டேயே இருந்துடுங்கோ," என்று நாலைந்து வயதுடைய மணியன் அவள் மடிமீதுவந்து உட்கார்ந்தான். திரிபுரம் அவனை வாரி முத்தமிட்டுக்கொண்டாள்.

எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்குப் படிக்கும் இஞ்சினீயரின் இரண்டாவது மகன், "அம்மாமியின் கதை என்ன பரிதாபமாயிருக்கிறது" என்றான்.

அதற்கவன் தாய் "இம்மாதிரி பழிக்கு ஆளானவர்கள் நம் நாட்டில் எத்தனையோபேர்! இப்படித்தான் ஊர் கெட்டுக்கிடக்கிறது" என்றாள்.

"எத்தனையோபேர்?" என்று பரிதவித்தாள் ராஜம். அவள் 'குறுகுறு'கண்கள் கலகலவென்று கண்ணீர் சொறிந்தன.

அடுத்த அறையில், ஈஸிச்சேரில் சாய்ந்து படித்துக்கொண்டிருந்த கங்காதரன் பி. ஏ. மூத்தபிள்ளையின் முகம் சிவந்துபோய் விட்டது. அவன் இரத்தம் கொதித்தது. ஆனால் பயன் என்ன? அவனைப்போன்ற ஒருவனே அப்பெண்மணியின் வாழ்வைத் துலைத்தவன்!

# காவேரி மகத்துவம்

**"ஜானி"**

பூர்வத்தில் அதிக விரக்தரும் யோக நிஷ்டருமாயிருந்த கவேரனென்ற ராஜரிஷியானவர் இமயமலைச் சாரலில் பதினாயிர வருடக்காலம் வரையில் பிரமதேவனை குறித்து தவம்புரிகையில், பிரமனும் அவருக்குப் பிரஸன்னமாகி என்னவேண்டுமென, ராஜரிஷி "சுவாமி! அடியேனுக்கு மோக்ஷம் வேண்டும்" என, பிதாமகர்: "அரசனே! மோக்ஷமளிக்கும் சக்தி எனக்கில்லை. ஆகிலும் ஸ்ரீமந் நாராயணனுடைய மாயையே எனக்குக் கன்னிகையாயிருக்கின்றாள். அவளை உமக்குப் புத்திரியாகக் கொடுக்கின்றேன். அவள் உமக்கு மோக்ஷம் கொடுப்பாள்," என்று சொல்லி அம்மாயை ஸ்மரிக்கவே, அவளும் சர்வாபரண பூஷிதையாய் ஓர் கன்னிகை வடிவுடன் எதிர்நிற்க, பிரமனும்! "பெண்ணே! இந்த கவேரனுக்குப் பெண்ணாகிக் காவேரியென்ற பெயருடன் நதிரூபிணியாய்ப் பூலோகத்தில் பிரவேசித்து, இந்த அரசனையும் மற்றும் உனது ஜலஸ்பரிசம்பெற்ற மனிதர்களையும் மோக்ஷமடைவிப்பாய்" என்று கூறி தமதிருப்பிடஞ் சென்றார். கவேரனும் ஜகன்மோகினியான விஷ்ணு மாயையைப் புத்திரியாகப் பெற்றவுடன் அவளைநோக்கி, "பெண்ணே! நீயோ சாக்ஷாத்ஜகதம்பிகையான விஷ்ணுமாயை. நானிப்பொழுது லௌகீக வ்யாபாரங்களில் விரக்தியடைந்து, மோக்ஷ காமியாயிருப்பதினால் எனக்கு மோக்ஷமளிக்கக் கடவை" என்று பலவாறு அவளைப்புகழ காவேரியும், "அரசனே ஸகலலோக பாவனையான யான் உனக்குப் பெண்ணாக ஆய்விட்டேன். ஆதலால் உமக்கு இனி என்ன குறை. மோக்ஷம் கையிலிருப்பதாக நினைத்துக்கொள்ளும். இனி நீர் விரும்பிய இடத்துக்குப் போகலாம்" எனவே கவேரனும் மகா விரக்தனாய்த் தேசமெங்கும் திரிந்து காலாந்தத்தில் மோக்ஷமடைந்தனன். பின்னர் காவேரியும் லோபாமுத்திரையென்ற வடிவை வகித்துத் தனதுபுண்ணிய ஜலத்திலேயே ஸ்நானஞ்செய்து ஸ்ரீஹரியை நோக்கித் தவஞ்செய்கிறகாலத்தில் ஸ்ரீமகாவிஷ்ணுவும் பிரசன்னராய் "பெண்ணே என்ன வேண்டும்" என வினவவும் காவேரி "சுவாமி யான் பூலோகத்தில் நதிரூபிணியாய்ச் செல்லும்படிக்கும் எனது ஜலத்தில் ஸ்நானஞ்செய்பவர் எவ்வித பாபிகளாக இருந்தபோதிலும் அவர்களுக்கு முக்தியுண்டாகும்படிக்கும் வரமளிக்க வேண்டும்" என்றாள். பகவானும் "பெண்ணே நீ கேட்டபடி வரமளித்தோம். அதிக பாவனமான ஸஹ்ய பருவதத்தினருகே யான் ஓர் நெல்லிமரமாக இருக்கிறேன். அங்குப் பிரமதேவன் விரஜாநதி ஜலத்தை சங்கில் சுத்தமாகத் தாங்கிவந்து எப்பொழுது எமதுபாதத்தில் அபிஷேகம் செய்வானோ அப்பொழுது அந்த சஹ்யாசலத்தினின்றும் தக்ஷிண கங்கையென்ற பெயருடன் நதிரூபிணியாகச்சென்று எல்லோரையும் பரிசுத்தம் பண்ணக்கடவை. நீ சகல புண்ணிய நதிகளிலும் சிறந்தவளாகக் கடவை.



தவிர, யாம், தத்தாத்ரேயனென்னும் நாமத்துடன் உனது சிரஸ்தானத்திலிருந்து கொண்டிருக்கிறோம். மேலும் கங்கையானவள் எனது பாதத்தினின்றும் உண்டானமையால் நீ நதிகளுள் சிறந்தாகின்றாய். நான் ஸ்ரீரெங்கநாதனாக உன் மடியில் படுத்துக்கொள்ளப்போகின்றேன். ஆதலால், நீ கங்கையைவிடச் சிறந்தவளாய்விடுவாய். ஸஹ்யாமலக தீர்த்தத்தினது மகிமை மற்றெந்தப் புண்ணிய நதிக்குமுண்டாகமாட்டாது. உனது தீர்த்தத்திற்குச் சங்கதீர்த்தமென்றும், ஸஹ்யாமலக தீர்த்தமென்றும் இரண்டு பெயர்கள் உண்டாகும்" என்று சொல்லிவிட்டு அந்தர்த்தானமாயினார். இப்படியிருக்கப் பிரமனானவர், அம்மலையிலேயே நித்திய பிரமசாரியாக இல்லற வாழ்க்கையில் வெறுப்புற்று மோக்ஷத்தைக்கருதி தவம்புரிந்து கொண்டிருந்த அகஸ்தியமாமுனிவருக்குப் பிரஸன்னமாகி, "நீர் இங்குத் தவஞ்செய்து கொண்டிருக்கிற லோபாமுத்திரையென்ற காவேரியை மனப்பூர்வமாய் விவாகித்து, ஜலரூபிணியான இவளையுமது கமண்டலத்தில் எடுத்துக்கொண்டு சூரிய சந்திரர்களுடைய மார்க்கத்தைத் தகைந்துகொண்டு ஆகாயமட்டும் அளாவியிருக்கும் விந்திய மலையின் கர்வத்தை அடக்கி, சஹ்யமலைக்குச்சென்று, அங்கு இந்த காவேரியை நதியாகச் செல்லும்படி செய்து பின்னர் மலயகிரிக்குச் செல்லக் கடவீர்" என்று கட்டளையிட்டு மறைந்தார். பிரமனுடைய ஆக்ஞைப்படியேயாவும் நடந்தது.

இத்தகைய சிறப்புவாய்ந்த புண்ணிய நதியான காவேரியில் யார் ஒருமுறை ஸ்நானம் செய்தாலும் அவர்கள் பாபங்கள் விலகி முரகரியின் பாதாரவிந்தங்களை அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை, காவேரியில் தீர்த்தமாடுவதற்கு ஐப்பசி மாதம் மிகவும் விசேஷமாகும். மற்றும் கார்த்திகைமாத சோமவாரதினத்திலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும், மாசி மாதமும் ஸ்நானமாடுவதும் விசேஷமாகும். மேற்சொன்ன மாதங்களில் ஸ்திரீகள் காவேரியில் ஸ்நானமாடி, தேங்காய், பழம், கரும்பு, தாம்பூலம், பாயஸம் முதலியவைகளுடன் காவேரியை பூஜித்து சுமங்கலிகளுக்கு கொடுப்பார்கள்.

ஐப்பசி, கார்த்திகை, மாசி, இம்மாதங்களில் ஸ்நானம் செய்வதாலேற்படும் விசேஷத்தை காவிரிப்புராணம் அடியிற்கண்டபடி கூறுகிறது: எவர் இக்காவிரியில் அற்பசி, கார்த்திகை, மாசி இம்மாதங்களில் ஸ்நானம் செய்கிறார்களோ அவர்கள் அடையும் பலனை சொல்லிமுடியாது. புஷ்பங்களுக்குள் துளசியும், யக்ஞங்களுக்குள் பஞ்சமயாக்யமும், விரதங்களுக்குள் ஏகாதசியும், தேவர்களுக்குள் ஸ்ரீமந் நாராயணனும், எழுத்துக்களுக்குள் பிரணவமும், மந்திரங்களுக்குள் அஷ்டாக்ஷரமும், வேதங்களுக்குள் சாமவேதமும், சகாதசருத்திரர்களுக்குள் சங்கரனும், பிராம்மணஸ்திரீகளுக்குள் அருந்ததியும், ஸ்திரீகளுக்குள் இலக்ஷ்மியும், தானங்களுக்குள் அன்னதானமும், கிரகங்களுக்குள் சந்திரனும், யக்யங்களுள் மனோயக்யமும், பூஜைகளுக்குள் விஷ்ணு பூஜையும், ஆச்சிரமத்தில் கிருகஸ்தாஸ்ரமும், ஜாதிகளுக்குள் பிராமணஜாதியும், பொறுமையுடையவர்களுக்குள் பூமாதேவியும், அஸ்திரங்களுள் பிரம்மாஸ்திரமும், புண்ணிய க்ஷேத்திரங்களுள் ஸ்ரீரங்க க்ஷேத்திரமும், பரிசுத்தம் செய்வதில் இராமசேதுவும், சூக்தங்களில் புருஷசூக்தமும், பசுக்களுள் காமதேனுவும், சதுர்யுகங்களுள் கிருதயுகமும், நதிகளுள் காவிரியும், ஸ்நானஞ்செய்ய ஐப்பசி, கார்த்திகை, மாசி மாதங்களும் மிகச் சிறந்தது!!

காவேரி விரிஜாதோயம் வைகுண்டம் ரங்கமந்திரம்
பரவாசு தேவோரங்கேசம் ப்ரத்யக்ஷம் பரமபதம்.

# விதவையின் கடிதம்

திரு. ஆ. வெ. சுப்பிரமணியம்

[வாசகர்களே! எனக்கு வெகுகாலமாக பெண்கள் விஷயமாக பத்திரிகைகளுக்கு யெழுத வேண்டுமென ஆவல். ஆனால், கதைகள், கட்டுரைகள் எழுதிப் பழக்கமில்லை. எதைப்பற்றி யெழுதலாமென்று யோசித்துக்கொண்டு வந்தேன். அதற்கு இப்பொழுது சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. ஆனால் இது "கட்டுக்கதை" யல்ல. ஒரு "விதவை"ப் பெண் தன் மாமியாருக்கு யெழுதிய கடிதம் தெய்வச் செயலாய் எனக்குக் கிடைத்தது. அதை அப்படியே யெழுதியனுப்பியிருக்கிறேன். கட்டுக்கதையைவிட இதுவே சிறந்ததாக யெனக்குத் தோன்றியதால் பெயர் தவிர அப்படியே யெழுதியிருக்கிறேன். இதைச் சமூகப்பெரியோர்களும் பொதுநல வாதிகளும் ஊன்றிக்கவனித்து "விதவை"களின் கஷ்டங்களைப்போக்க தீவிரமாக முற்படுமாறு வேண்டிக்கொள்கிறேன்.]

ஷை கடிதத்தில் அடியில் வருமாறு யெழுதப்பட்டிருக்கின்றது:—

எனது இரு கண்ணிலும் அதிக பிரியமுள்ள மாமியார் அவர்களுக்கு, மருமகள் எழுதும் செய்தி யென்ன வென்றால், மாமி நான் ஒரு பாபி—துரோகி—சண்டாளி—அனைவராலும் வெறுக்கப்பட்டவள்—தூற்றப்பட்டவள்—துரத்தப்பட்டவள். நான் உயர்ந்த சமூகத்தில் வளர்ந்தேன். நன்றிகெட்ட அச்சமூகம், கொஞ்ச நாளைக்குள் எனக்கு "விதவை" யென்ற பட்டத்தைச் சூட்டி ஒதுக்கி வைத்துவிட்டது. மாமி! பூவுலகிலுள்ள ஜீவராசிகள் அனைத்தையும் நமதாண்டவர் படைத்தார். பாரபட்ச மறியாத கடவுள். பசி, தாகம்—சுக—துக்கம்—சந்தோஷம்—ஆசை—அன்பு—காதல்—காமம்—கருணை முதலான உணர்ச்சிகளை—அனைவருக்கும் சமமாகவே அளித்திருக்கிறார். ஆதலால்—காதல்—மகா கொடியது. அதைத் தடுக்க எவரால் முடியும்? எவராலும் முடியாது. அது யெல்லோருக்கும் பொதுவானது. யெல்லோருக்கும் இயற்கையானது—அபாரமான சக்தி வாய்ந்தது. அச்சம், அவமானம், முதலியவைகளை அறவே அறியாதது. இந்த உணர்ச்சியை ஒழுங்கான முறையிலோ, அல்லது மாறான முறையிலோ தணித்துக் கொள்ளாவிடில் இப்பூவுலக வாழ்க்கை நரகலோக வாழ்க்கையைவிட கேவலமானதாகி விடும். மனதிற்கு அமைதி யென்பதே கிடையாது. என் மாமியவர்களே! இப்போதாகிலும் உண்மையைத் தெரிந்து கொண்டீர்களா? மாமி உங்களின் அக்காள்—தங்கையைப் போல் நானும் ஒரு பெண்பிள்ளைதான்—சகல அவயங்களும்—சகல உணர்ச்சிகளும் உள்ளவள்தான். எல்லோரையும் போல் எனது உள்ளத்தையும் உடலையும் என் உயிரைக் கொள்ளைகொண்ட காதலர் ஒருவருக்கு சேர்ந்தாப்போல் அர்ப்பணம் செய்து விட்டேன். இன்றல்ல, ஆறு அல்லது ஏழு மாதமாகிவிட்டது. இது உங்கள் யாவருக்கும் தெரிந்த விஷயந்தான். நான் காதல் கொண்டு இருக்கும் காதலர் யாரென்றால், உங்களின் கனிஷ்ட புத்திரன்—நா. ச. அ. அவரின் பெயரை இதில் எப்படிக்கும்பிட்டு யெழுதுவது. எழுதுகிறது சரியில்லை. ஆனதால் அவரின் முழுப்பெயரையும் எழுதாமல் விட்டு விட்டேன். மன்னிக்கவும் மாமி. ஆதலால் உங்கள் மகனுக்கும்—எனக்கும் விவாகத்துக்கு வேண்டிய ஏற்பாட்டை கூடிய சீக்கிரம் முடித்துவைக்க வேண்டியது. அது உங்களைச் சேர்ந்ததல்லவா? அது உங்களின் கடமைதான்.

இப்படிக்கு,
உங்களின் மருமகள்,

..................................

# மொராக்கோ

ஸ்ரீமதி ஜி. கிரிஜா

மொராக்கோ தேசம் ஆப்பிரிக்காக் கண்டத்தின் வடமேற்குக் கரையோரத்திலுள்ளது. இதற்கு கிழக்கே அல்ஜீரியா தேசமும், சஹாராப்பாலைவனமும், வடக்கிலும் மேற்கிலும் முறையே மத்தியதரைக்கடலும், அட்லாண்டிக் மஹாசமுத்திரமும் எல்லைகளாக அமைந்துள்ளன. இதற்கு 'மேற்கு கோடி தேசம்' என்றும், 'சூரிய அஸ்தமன நாடு' என்றும், 'உலகத்தின் அந்தம்' என்றும் பெயர் வழங்கி வந்தது. பழையகாலத்தில் இதற்கப்புறம் நிலப்பரப்பே உலகில் இல்லை என்ற எண்ணம் இருந்து வந்தது. இதன் விஸ்தீரணம் சுமார் 231,500 சதுர மைல்கள். இதன் ஜனத்தொகை சுமார் 65 லக்ஷம். இத்தேசம் 1912ம் வருஷம் ஏப்ரல் மாதத்திலிருந்து பிரஞ்சு அரசாங்கத்தாரின் பாதுகாப்பில் (French Protectorate) இருந்து வருகிறது. தேசத்தின் ஒரு பகுதி ஸ்பெயின் சர்க்காரின் ஆதிக்கத்தில் (Sphere of Spanish influence) இருக்கிறது. அங்கிருந்து தான் இன்று ஸ்பெயினில் கலகம் செய்து வரும் பிராங்கோ கூலிக்கு முரட்டு மூர்களை சிப்பாய்களாகச் சேர்த்துக் கலகத்தை வளர்த்து வருகிறான்.

ஒரு காலத்தில் மூர் ஜாதியினர் ஸ்பெயினையே ஜயித்து ஆண்டு வந்தனர். முறையே போனிஷியர்கள் (Phonecians) கார்த்தஜீனியர்கள் (Carthagenains) ரோமர்களால் ஜயித்து ஆளப்பட்டுப்பின் முகம்மதிய சுல்தான்களால் ஆளப்பட்டு வந்தது மொராக்கோ. உள்நாட்டுக் கலகங்களும் சுல்தான்களுக்குள் அடிக்கடி சச்சரவுகளும் சண்டைகளும் நடந்து வந்ததால் எப்பொழுதும் ஆண் மக்கள் யாவரும் சண்டை செய்வதற்குத் தயாராகவே இருந்தார்கள். யுத்த வெறி பிடித்தவர்கள். 'வலுத்தவன் கை பணியாரம்' என்ற வாக்குக்கு அத்தேசமே சரியான உதாரணம். 1912ம் வருஷத்தில் அந்நாட்டு சுல்தான் பிரஞ்சு சர்க்காருடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டு பிரஞ்சு அதிகாரத்துக்குட்பட்டு நாட்டை ஆண்டு வருகிறான். இன்றும் நாட்டில் அவ்வளவு அமைதி நிலவி வருவதாக நினைக்க இடமில்லை. மூர் ஜாதியினர் தங்களை, யார்பணம் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு விற்றுக் கொள்ளுகிறார்கள். சண்டைக்கு ஆள் வேண்டும் சர்க்கார்கள் இவர்களை அமர்த்திக் கொள்ளுகின்றனர். ஜனங்களில் பெரும்பான்மையோர் மூர் ஜாதியினர். நீக்ரோக்களும், யூதர்களும் இருக்கின்றனர். பிரெஞ்சு, ஸ்பானிஷ், அராபி, பெர்பர் முதலிய பலபாஷைகளும் பேசப்பட்டு வருகின்றன.

## முக்கிய நகரங்கள்

இந்த தேசத்தின் பெயர் மொராக்கோ என்றிருந்தபோதிலும் இதன் தலைநகரின் பெயர் ரபத் என்பதாகும். மொராக்கோ நகரம் தென்பகுதிக்குத்தான் தலைநகர். ஆனால் மொராக்கோதான் பெரிய நகரம். இதர நகரங்களில் காஸாப்ளாங்கா,

பெஸ், டாங்கியர், மெலில்லா, மெக்யூனிஸ், டெட்வான், ஸபி, ஸலே, மொகதார் முதலியன முக்கியமானவை.

## அரசியல்

இதன் அரசியல் பேருக்கு சுல்தானால் நடைபெற்று வருகிறது. ஆனால் சுல்தானுக்கு மேலதிகாரியாக இருந்து அவனை ஆட்டிவைப்பவர் பிரெஞ்சு ரெஸிடென்ட் ஜெனரல் (Resident-General) பெரும்பாலும் உயர்தர உத்தியோகஸ்தர்கள் பிரெஞ்சுக்காரர்களே. ராணுவத்தின் தலைவர் ரெஸிடென்ட் ஜெனரலே. ராணுவம் ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு பல பாகங்களிலும் வைக்கப்பட்டிருக்கிறது.

## விளைபொருள்கள்

பார்லி, கோதுமை, பீன்ஸ், லின்ஸீட், சோளம், திராட்சை, ஈச்சம் பழம், ஆரஞ்சு, பாதம், எலுமிச்சம் பழம் முதலியன பயிர் செய்யப்படுகின்றன. பருத்தியை இப்பொழுது தான் பயிர் செய்து வருகிறார்கள். கம்பளங்களும் செய்யப்படுகின்றன. தங்கம், வெள்ளி, கந்தகம், இரும்பு, பெட்ரோலியம் சுரங்கங்களும் சில பிரதேசங்களில் காணப்படுகின்றன.

## போக்குவரத்து

சுமார் 1100 மைல்கள் ரயில்வேயும், 1500 மைல்கள் ரோடும் இருக்கிறது. கம்பியில்லாத் தந்தி நிலையங்கள் மேல், தந்தி டெலிபோன் வசதிகளும் இருக்கின்றன.

பெரும்பான்மையானவர்கள் சன்னி (Sunny) முகமதிய மதத்தைத் தழுவினவர்கள். சுமார் ஒரு லட்சம் கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள். பள்ளிக்கூடங்கள் சுமார் 300 இருக்கின்றன. பெஸ் நகரி



அழகிய வீட்டிலிருந்தாலும் மூர்ஸ்திரீ தன் அழகை வெளிப்படுத்த முடியாது. மாடியினின்றும் எட்டிப் பார்க்கிறாள்.

லும், ரபத் நகரத்திலும் இரு இஸ்லாமிய உயர்தரக் கல்லூரிகள் இருக்கின்றன.

## மூர்கள்

இவர்கள் மிகுந்த மதப்பற்றுடையவர்கள். இதை ஆளும் சுல்தான் முகமது நபி நாயகத்தின் நேர் சந்ததியைச்சேர்ந்த





ஷெரீபி வம்சத்திலுதித்தவன். சுல்தானே மதகுரு. மதவிஷயத்தில் அவன் உத்தரவே முடிவானது. கொரான் சட்டமே வழங்கிவந்த போதிலும் பிரெஞ்சு சர்க்கார் தங்கள் நாகரிகத்தைப் புகுத்தப்



கோஷாப் பெண்

(வெளியே செல்லும்போது அணிந்திருக்கும் உடையணிந்திருக்கிறாள்,)

பிரயத்தனம் செய்து வருகிறார்கள். நியாயாதிபதிகள் பெயர் காஜிகள். இவர்கள் தேர்ந்த கல்விமான்களாக இல்லாததால் நீதி சரிவர வழங்கப்படவில்லை. இவர்கள் கருநிறமான நல்ல திடசரீரமும், மிகுந்த தைர்யமும் உள்ளவர்கள். புத்திசாலித்தனமும், சாமர்த்தியமும், பிடிவாத குணமும் மூர்களிடம் காணப்படுகின்றன. இவர்கள் எத்தனை பெண்களையேனும் மணந்துகொள்ளலாம். விவாஹரத்து விதிகளும் வெகு சுலபமானவை. சுல்தான் அந்தப்புறத்துக்கு ஒரு ஸ்திரீ மேலதிகாரியுண்டு. அவள் மன்னன் மனதுக்குகந்தபடி அந்தப்புறத்தை வைத்திருக்கவேண்டும். மூர்கள் தங்கள் வீடுகளில் இன்னும் அடிமைகளை வைத்திருக்கின்றனர். ஆனால் அவர்கள் வேலையில்லாது அன்ன ஆகார ஆடை வீடு இன்றித் தவிக்கும் வேலையற்ற சுதந்திர ஜீவன்களைவிட நல்ல நிலையிலேயே இருக்கின்றனர். அடிமை வர்த்தகம் நடக்கிறது. அடிமைகள், ஆண் பெண், இருபாலாரும் பஹிரங்கமாக ஏலத்தில் விற்கப்படுகின்றனர்.

மூர்கள் சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த கட்டடங்கள் கட்டுவதிலும், ஆடை ஆபரணங்கள், பண்ட பாத்திரங்கள் செய்வதிலும் மிகுந்த திறமைசாலிகள். பிரஞ்சு ஆளுகையின் கீழ் மேல் நாட்டு நாகரிகத்தின் நவீன அம்சங்களும், பலவித சௌகர்யங்களும் மக்களுக்கு சிறிது சிறிதாக அளிக்கப்பட்டு வருகின்றன. மூர்கள் அவற்றை விரும்பிப்பயன்படுத்திக் கொள்கிறார்கள். இருந்தபோதிலும் ஐரோப்பிய நாகரிகத்தினிடத்தில் அவர்களுக்கு இயற்கையாகவே ஒரு வெறுப்பு இருந்து வருகிறது.

## ஸ்திரீகள்

இங்கு 'கோஷா' முறை வெகு கடுமையாக கையாளப்பட்டு வருகிறது. ஸ்திரீகள் தங்களை ஒரு உறையால் அடியோடு மூடிக்கொள்ள வேண்டும். கண்களுக்கு மட்டும் இரு ஓட்டைகள் உண்டு. அவைகளால்தான் பிறரைப் பார்க்கலாம். நல்ல கொடுமையான வெயில் காலத்தில்

வெளியே போகநேரிட்டாலும் அவர்கள் படுதாக்களால் போத்தப்பட்டுதான் செல்ல வேண்டும். நெருங்கிய பந்துக்களைத்தவிர இதர புருஷர்களுடன் வார்த்தை ஆடக்கூடாது. இன்னும் கோஷா வழக்கத்தை யொட்டிய பல கட்டுக்களும் உண்டு. ஸ்திரீகள் பொதுவாக நல்ல அழகும், உறுதியான தேகக்கட்டும் வசீகரமுமுடையவர்களாய் இருக்கின்றனர். ஏற்கனவே இயற்கை வனப்பு மிகுந்த அந்தப்பெண்மணிகள் தங்களை நேர்த்தியாக வேலைப்பாடுகளுள்ள ஆடை ஆபரணங்களால் அலங்கரித்துக் கொள்ளுவதில் அதிகப் பிரியமுடையவர்கள். பல வித வர்ண உடைகளை அணிந்து கொள்ளுகிறார்கள். இருந்தும் கூண்டில் அடைபட்டுக்கிடக்கிறார்கள்.

'கோஷா'ப் பெண்கள் சந்தைகளுக்கு படுதாவுடன் வந்து பேரம் செய்வதும் உண்டு. குறிப்பாக ரொட்டிகள் விற்பவர்கள் எல்லாம் தங்கள் கணவன்மார்களால் தள்ளிவைக்கப்பட்ட ஸ்திரீகளாகவே இருக்கிறார்கள். விவாஹரத்து கணவன் விரும்பினால், பெண் கொண்டு வந்த ஸ்ரீதனப் பொருள்கள் அத்தனையும் புருஷன் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். இதற்குமேல் அவளுக்கு இதர உதவிகள் ஒன்றும் கிடையாது. பெண்கள் தங்கள் புருவங்களை வாசனை மிகுந்த அஞ்சனங்களால் அலங்காரம் செய்து கொண்டும், கண்ணுக்கும் மைதீட்டிக் கொள்வார்கள். கைகால்களை மருதாணி போன்ற வஸ்துவால் அழகுபடுத்திக் கொள்ளுகின்றனர். ரபத்நகரம் அதன் கம்பளங்களுக்குப் பிரசித்திபெற்றது. அந்த உயர்தரக் கம்பளங்களைச் செய்பவர்கள் மூர் ஸ்திரீகளே. இதன் நிறவேறுபாடுகள் கண்ணைக் கவர்கின்றன. சாயம் கெட்டி.



# கோலாட்டம்

"ஞான"

நம் நாட்டில் ஆதிதொட்டு வழங்கிவந்து இப்பொழுது வழக்கந்தப்பி மறைந்து போகும் நிலைமையடந்து வரும் விளையாட்டுக்களி லொன்று கோலாட்டம் என்ற கொண்டாட்டம். இக்கோலாட்டப் பண்டிகை தென் ஜில்லாக்களில் சாதாரணமாக நாட்டுப்புறமான இடங்களில் ஐப்பசி மாதத்தில் நடைபெற்று வருகிறது. ஆனால் நாகரிகம் சிறக்க வழங்கும் நகரங்களில் அது மறைந்து வருகின்றது. நம் பெண்டிர் தேகப்பயிற்சிக்கும், மனக்களிப்புக்கும் ஏற்றவையான பல விளையாட்டுகள் இப்பொழுது மறைந்தே போயின வென்று சொல்லலாம். அம்மானையும், கழக்கோடியுமாட ஆற்றல் பெற்ற பெண்கள் இக்காலங்களில் காண்பதருமை. இத்தகைய விளையாட்டுகள் நாகரிக மற்றவையென்று நம் வீடுகளிலும் பாலிகா பாடசாலைகளிலும் சிறுமிகள் கற்கா வண்ணம் விலக்கப்பட்டன போலும்! ஆனால் இவ்விளையாட்டுக்கள் பழையனவே யாகினும் பழுதெனக் கருதிக் களைதற்குரியனவோவென்று நம் நாட்டார் நன்கு ஆலோசிக்கவேண்டும். நமது பூர்வீக வழக்கங்களில், உய்ப்பித்து நிலைநிறுத்ததற்குரியனவற்றுள் கோலாட்டமொன்றாக இருக்கிறது.

ஹிந்து மாதர்களுக்கு வீட்டிலும் நாட்டிலும் சுவாதீனம் இல்லை யென்றும், வெளியிற் போய் ஒருவரோடொருவர் சேர்ந்து ஒருங்கு கூடி யாதேனுமொரு பொதுக்காரியத்தைத் தொடங்கி முடிக்கச் சுதந்திரமில்லை யென்றும் பச்சிம நாட்டாரும், பச்சிம நாகரிகந்தழுவி நடக்கும் நம்மவரும் கூறுதல் யாவரு மறிவார்கள். வீட்டு விசாரணையிலும், இல்வாழ்க்கைக்குரியனவும், சமுதாய ஆசாரங்கட்குத் தனமுமாகிய விஷயங்களிலும் நமது ஸ்திரீகளுக்குச் செல்வாக்கும் சுதந்திரமும், உண்டென்று ஒப்புவோரும் அவர்களுக்குத் தம்முள்ளொன்று சேர்ந்து ஒரு காரியத்தை நடத்த ஏலாதென்று கூறுவர். இது மெய்யாயின், இதன் காரணம் யாது? தம் பெண்களுக்கு வெளியே போய் ஒருவரோ டொருவர் கூடிக்களித்துக் குலாவி உறவு கொண்டாடத் தகுந்த சந்தர்ப்பங்கள் ஏற்படாததினாலன்றோ இப்பழிக்கவர்கள் இடமாகின்றார்கள்? பெண்கள் கூடிக்குலாவ ஏற்பட்ட சந்தர்ப்பங்களிற் சிறந்தது கோலாட்டப் பண்டிகை என்பது, கோலாட்ட ஜவந்தரைப் பார்த்தவர்களுக்குத் தெற்றெனவிளங்கும்.

இப்பண்டிகை நடைபெறுங் காலம் ஐப்பசி மாதமென்றோம். இதற்குமுன்னதாக நவராத்திரி பண்டிகை வருதல் யாவருமறிவர். நவராத்திரியின் பொழுது சாதாரணமாய் ஒவ்வொரு கிரகத்திலும் பெண்கள் கொலு வைப்பது வழக்கம். கொலுவைத்திருக்கும் ஒவ்வொரு வீட்டுப் பெண்டுகளும் ஏனைய வீட்டுப் பெண்டிரை கொலு விழாக்காண அழைத்து வருவார்கள். அழைக்கப் பெற்றவர்களும்,

அழைத்தவர்களும், நல்ல ஆடை உடுத்து, நகைகள் பல பூண்டு, மனக் களிப்புற்று, ஒவ்வொரு வீடுகளிலும் கூடி உல்லாசமாய்ப் பாடி, உறவுடன் பேசிச் சிரித்து, மகிழ்ந்து நேசித்து பொழுது போக்கிய பின்னர் வெற்றிலை பாக்கு புஷ்பம், மஞ்சள், குங்குமம், பணிகார முதலிய சுபதிரவியங்கள் பெற்று அவரவர் வீடு போய்ச் சேர்வார்கள். நவராத்திரி தினங்களில் நம் பெண்டிர்க்குண்டாகும் சந்தோஷமும் பரபப்பும் அறியாதாருளரோ? நவராத்திரியைத் தொடர்ந்து அவ்விழா ஒளப்பிய மனக்களிப்புக் குன்று முன்னர், தீபாவளிப் பண்டிகையும் அத்துடன் கோலாட்டமும் வருகின்றன. ஸ்ரீ கண்ணபிரான் நரகாசுரனை வதஞ் செய்து மனிதர்க்கும், தேவர்க்கு மேற்பட்ட பிடையைத் தீர்த்தருளிய திருவிழாத் தினமாகிய நரக சதுர்த்தசியன்று தீபாவளி மகோற்சவம் கொண்டாடப்படுகிறது. நரகாசுர ஸம்ஹாரத்தின் பலனும் அவனால் சிறைப்படுத்தப் பெற்ற பதினாயிரம் கன்னியர் சிறை மீட்கப் பெற்றனராதலால் அக்கன்னியர் களிமிக்குற்றத் திருவிழாக் கொண்டாடினரென்று புராணங் கூறும்.



கோலாட்டம்

இப்பொழுது நடைபெற்று வரும் கோலாட்டப் பண்டிகையே [illegible] நீக்கத் திருவிழா. தீபாவளி ஸ்நானம் செய்த பிறகு அமாவாசையன்று கிராமங்களிலுள்ள சிறுமிகள் சேர்ந்து நல்ல தெருவில் கோலாட்டம் போட்டுக் கொண்டு [illegible] கொண்டு வந்து [illegible] பண்டிகை [illegible]





இந்தியாவின் வாசல், பம்பாய் துறைமுகம்.



வி. யமுனாகுமாரி.
(புதுடில்லியில் சங்கீதவல்லமைக்காக சென்னை கல்வி சபையாரால் சன்மானம் அளிக்கப்பட்டாள்.)



லேடி லின்லித்கோ
சாரணப் பெண்களுக்கு பரிசளிக்கிறார்கள்



செய்து கோலாட்டம் போடுவார்கள். கடைசிநாளில் ஜவந்தரை நடத்த, பல வீடுகளிற் சென்று இசைந்த பாட்டுப் பாடிக் கோலாட்டம் போட்டுப் பணம் சேகரிப்பார்கள். குழந்தைகள் தாளத்திற் கிசைந்துபாடி வெகு சாதுரியமாய்க் கோலாட்டம் போடும் சாமர்த்தியத்தையும் அவர்கள் முகத்தில் தோன்றும் ஆனந்தத்தையும் பார்த்து மனங்களிப்புக் கொள்ளாதார் எங்கு மிராரென்று துணிவாய்ச் சொல்லலாம். கோலாட்ட நாட்களில் பலவிதக் கோலாட்டம் போடுந் திறமை பெற குழந்தைகள் வீட்டில் முன்னமே பயிலுதல் வழக்கம். அன்றியும் கோலாட்டதிற்கு வேண்டிய பாட்டும் புதிதாய் வீட்டில் குழந்தைகள் கற்று வருவார்கள். இப்பயிற்சியால் குழந்தைகளுக்கேற்படும் நலங்கூறவும் வேண்டுமோ? ஜவந்தரைக் கொண்டாட்டத்தின் வைபவம் மிகச் சிறந்ததேயாம். அன்று வேண்டியவர்களெல்லோரையும் வரவழைத்துக் கலியாண ஊர்கோலம் போல மேள வாத்திய முதலிய வைபவங்களுடன் பசுவனைப் பல்லக்கில் வைத்து அணி அணியாய் குழந்தைகள் நல்லாடை யுடுத்து நகைகள் பூண்டு, ஆனந்தப் பெருக்கோடு கோலாட்டம் போட்டுக்கொண்டு தெரு வழியே போய்ப் பசுவனை ஆற்றில் போட்டு விட்டு, வந்திருக்கு மெல்லோரும் ஆற்றங் கரையில் உற்சாகமாய்க் கூட்டுண்ணல் முடித்து, பிறகு வாத்தியத்தோடு பெண்கள் பாடிக் கோலாட்டம் போட்டுக் கொண்டு வீதி வழியே வீட்டுக்கு வந்து சேருவார்கள். வீடு வந்ததும் வெளி வாசலில், சிறுமிகளைப் போல இளமாதர்களும் கோலாட்டம் போட்டுத் தடையின்றி விளையாடிக் களிப்பார்கள். இவ்வாறு நம் பெண்டிர் விழாவான கோலாட்டப் பண்டிகை வழக்கந் தப்பி மறைந்து போகாமல் நாட்டுப்புறம் போல நகரங்களிலும் விருத்திக்குக் கொண்டுவர வேண்டுவது அவசியமாகும். இவ்வருஷம் ஞாபகமிருக்கட்டும்!

---

**மனைவி:**—எல்லாம் என் பணம் வந்த பிறகுதான் இந்த ஜம்பமும், டம்பமும். நான் பணங்கொண்டு வராவிட்டால் என்ன செய்திருப்பீர்கள்?

**புருஷன்:**—கல்யாணமே பண்ணிக் கொண்டிருக்கமாட்டேன்.

* * * *

**புருஷன்:**—என்னிடம் இரண்டு லக்ஷம் ரூபாய் இருந்தால் நான் என்ன செய்வேன் தெரியுமா?

**மனைவி:**—தெரியாது, ஆனால் அது மூன்று லக்ஷமாக இல்லையே யென்று துக்கப்பட்டுக் கொண்டிருப்பீர்களே யொழிய நான் கேட்ட சீட்டிப் புடவையைக்கூட வாங்கித்தர மாட்டீர்கள்.

# சீன ஸ்திரீகள் முன்னேற்ற இயக்கம்

திரு. அன்வர்குரேஷி

ஜப்பானியர் இன்று ஏகாதிபத்திய வெறிகொண்டு சீனா தேசத்தை தங்கள் ஆதிபத்தியத்துக் குட்கொண்டுவர பல கொடூரமான செயல்களைப் புரிந்து வருகின்றனர். இந்த ஆக்ரமிப்பை எதிர்த்துநிற்க சீனா தேசத்து மாதர்களும் தயாராக இருந்து ஆயிரக்கணக்கில் படையிலும், இதர ராணுவ இலாகாக்களிலும் சேர்ந்து தங்கள் நாட்டின் சுதந்திரத்திற்காக போராடுகின்றனர். இக்கட்டுரை அவர்களின் சுதந்திர இயக்கத்தை விவரித்துக் கூறுகிறது.

இப்பொழுது நடக்கும் சீன ஜப்பான் யுத்தத்தின் முடிவு எவ்வாறிருந்த போதிலும், சீனாவின் கதி எப்படி யானாலும் சரி, சீன மாதர்களின் இயக்கம் மட்டும் நிச்சயமாய் தனது வெற்றிமார்க்கத்தில் வேகமாக முன்னேறியே தீரும் என்று உறுதியாகக் கூறுவேன். அந்த முன்னேற்ற வெள்ளத்தை அடக்க எவராலும் முடியவே முடியாது. இதற்கு முன் ஒரு சமயமாவது சீன ஸ்திரீகள் முன் வைத்த காலைப் பின் வைத்ததே கிடையாது. இந்தப் போரால் அவர்கள் இயக்கம் வலுவடையுமே தவிர வேகம் குறையாது.

தற்கால சீனத்தின் பெருமையையும், மேன்மையையும் எடுத்துக் காட்டுவது இன்று சீன மாதர்கள் அடைந்திருக்கும் உன்னத ஸ்தானமே. ஆதிகாலந்தொட்டு பெண்களை அடிமைகளாக்கி அவர்கள் யாதொரு பொதுவேலைகளிலும் தலையிடாமல் தடுத்து வைத்திருந்த கட்டுகளும் மூட சாம்பிரதாயங்களும் சென்ற முப்பது வருஷங்களில் அறவே தகர்த்து ஒழிக்கப்பட்டன. அவ்விலங்குகள் தூள் தூளாக நொறுக்கப்பட்டன.

சென்ற முப்பது வருஷங்களில் சீனாவில் உலகம் போற்றக்கூடிய மூன்று நாரிமணிகள் தோன்றி பிரகாசித்தன. அவர்களே சீன ஸ்திரீகள் விடுதலைக் கிளர்ச்சியின் தூண்போன்றவர்கள். அவர்களே சீன ப்ளாரன்ஸ் நைட்டிங்கேலான டாக்டர் மேரி சாங், சீன விடுதலைப் போர் வீரரும், சீனக்குடியரசின் முதல் தலைவருமான டாக்டர் சன்யாட் செனின் மனைவியான மேடம் சன்யாட்சென், சீனக் குடியரசு மாதர்கள் உயிர்நாடியும், அவர்களின் குலதெய்வமுமாகிய மேடம் சியாங்காய் ஷேக். இவர்களே தூங்கிக்கிடந்த ஸ்திரீ சமூகத்தை தட்டி எழுப்பி அவர்கள் அரசியல் முதலிய விவகாரங்களில் தங்களது நியாயமானஸ்தானத்தை அடையுமாறு செய்த விடுதலை வீரத்தாய்மார்கள்.

நவீன சீனத்தை உண்டாக்குவதில் மாதர்கள் முக்கியபங்கு எடுத்துக்கொண்டனர். சீனாவின் விழிப்புக்கும் சுதந்திரத்துக்கும் காரணம் சீன ஸ்திரீகள்தான் என்று கூறுவது மிகையாகாது. சீனாவின் நாகரிக, அறிவுவளர்ச்சிக்கும், அவைகள் புத்துயிர்பெற்று சீனத்தில் இன்று மிளிர்



வதற்கும் தகுந்த பக்கபலமும், ஊக்கமும் அளித்தது மாதரியக்கமே. சீன தேசாப்பியாசமுன்ற பலம்பெற்று விளங்குவது அவ்வியக்கத்தின் ஒரு பகுதியே.

கால்கள் கட்டுண்டு குழந்தை பெறுவதும், வீட்டுவேலைகளை மட்டும் கவனித்து வருவதுமே தங்கள் அலுவல்களாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள் சீனநங்கையர் என்று இந்தியமாதர்கள் நினைக்க வேண்டாம். அதெல்லாம் முப்பது வருஷங்களுக்கு முன்னர்தான். அந்தக்காலம் கரையேறிவிட்டது. இன்று எல்லாம் மாறிவிட்டது. அவர்கள் இன்று இந்திய மாதர்களுக்கு ஓர் திருஷ்டாந்தமாக விளங்குகிறார்கள். அவர்களின் நடவடிக்கைகள் நம்மாதர்க்கோர் படிப்பினையாக விளங்குகின்றன. கீழ்திசை மாதர்களிளெல்லாம் சீன மங்கையரே மிகுந்த முன்னேற்றமடைந்தவர்கள். அதுமட்டுமல்ல. அறிவிலும், தைரியத்திலும் அவர்கள் எந்தக் கீழ்திசைநாட்டுப் பெண்களையும் விட மேம்பட்டவர்களே.

முப்பது வருஷங்களுக்கு முன் உயர்தரக் குடும்பங்களைச்சார்ந்த ஸ்திரீகளைத் தெருக்களில் காண்பது வெகு அருமை. அவர்கள் இடம் வீடு மட்டும்தான்; அங்கு குழந்தைகளைப் பார்த்துக்கொண்டு சித்திரத் தையல்வேலைகளில் ஈடுபட்டிருப்பார்கள். தெருக்களில் தென்படும் பெண்கள் வேலைக்காரிகள் அல்லது தாழ்ந்த வகுப்புப் பெண்களே. இந்த நிலையிலிருந்த சீனா இன்று இருக்கும் உயர்ந்த நிலையைக் காண்போர் இடைக்காலத்தில் ஏற்பட்டிருக்கும் மாறுதல்கள் மிகுந்த ஆச்சர்யகரமானவை என்பதை உணர்வார்கள்.

இன்று சீன ஸ்திரீகள் வியாபார ஸ்தலங்களிலும், தொழிற்சாலைகளிலும், பாங்குமுதலிய ஸ்தாபனங்களிலும் சேர்ந்து ஆண்களோடு அமர்ந்து திறமையுடன் தங்கள் வேலையைச்செய்து வருகிறார்கள். அநேக மங்கையர் பிரசித்தி பெற்ற வக்கீல்களாகவும், வைத்தியர்களாகவும், உபாத்தியாயினிகளாகவும், பத்திரிகாசிரியர்களாகவும் இருந்து வருகிறார்கள். தங்களுடைய மோட்டார்கார்களை தாங்களே ஓட்டுகிறார்கள்; தாங்கள் விரும்பிய ஆடவ நண்பர்களுடன் நடனக் கச்சேரிகளுக்குச் செல்லுகிறார்கள்; பொதுக்கூட்டங்களில் பல விஷயங்களைப் பற்றியும் அரிய பெரிய பிரசங்கங்கள் புரிகிறார்கள்; பல தர்ம கைங்கர்யங்களை தாங்களே ஆரம்பித்து நிர்வகித்து நடத்துகிறார்கள்; போலோ முதலிய கஷ்டமான விளையாட்டுகளில் ஆடவர்களைவிட மிகுந்த ஆர்வமும் தேர்ச்சியும் காட்டுகிறார்கள். இதுமட்டுமா? சமீபத்தில் லண்டனிலுள்ள தங்கள் ஸ்தானிகர் காரியாலயத்துக்கு ஒரு ஸ்திரீயை முக்கிய உத்தியோகம் வகிக்க அனுப்பியுள்ளார்கள். இது போன்ற சம்பவம் கீழ்திசைநாடுகளின் சரித்திரத்திலேயே இதற்குமுன் நடந்தது கிடையாது. ஸ்திரீகள் ஸ்தானிக காரியங்களை நடத்திவைக்க லாயக்கற்றவர்கள் என்ற நெடுநாளைய எண்ணம் பொய்ப்பிக்கப்பட்டது.

மானிடவர்க்கத்தின் கௌரவத்துக்கு இயற்கையாயுள்ள சாதாரண சிறு உரிமைகள்கூட இல்லாதபடியும், தங்களது இயற்கையான சாமர்த்தியத்தை வெளியிட அவகாசமும் பெறமுடியாதபடி அவர்களை வைத்திருந்த மாயா[illegible]

வாதிகளின் தத்துவத்தை எதிர்த்துப் போராடி மறையச்செய்ய நவீன சீனு இவ்விதமே வேலையைச் செய்தது. சீனுவுக்கு அரைகுறை முறைகளில் நம்பிக்கை கிடையாது. இருந்தால் பூரண நாகரிகமடைந்தவர்களாய் ஆகவேண்டும்; இல்லாவிட்டால் ஒன்றுமே வேண்டாமென்ற மனப்பான்மையுடையவர்கள் அவர்கள். அவர்களின் முன்னேற்றத்தின் அடிப்படையான தத்துவம் அதுவே. அதை நிரூபிக்க ஏதேஷ்டமான திருஷ்டாந்தங்கள் இருக்கின்றன. கீழ்கண்ட சம்பவத்தைப்பற்றி சற்றே யோசித்துப் பாருங்கள்.

கடந்த சீன ஜப்பான்யுத்தத்தில் ஒரு சம்பவத்தைப்பற்றி லண்டன் டெய்லி எக்ஸ்பிரஸ் பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது. சாபே போர்க்களத்தில் யுத்த அரண்களில் பெண்கள் சுதேச நீலநிற ராணுவ உடைகள் தரித்து ஜப்பானிய வீரருடன் போர் புரிந்தனர். ஜப்பானியர் அவர்களை தங்கள் பாதுகாப்புப் பள்ளங்களிலிருந்து வெளியேறும்படி செய்தனர். உடனே அவ்வீரப் பெண்மணிகள் கோபாவேசத்துடன் தைர்யமாக ஜப்பானியப் போர்வீரர்களை நெருங்கி பலமாகத் தாக்கினார்கள். தகுந்த ஆயுதபாணிகளாயும், சிறந்த பயிர்ச்சியும் பெற்றிருந்த அனுபவசாலிகளான ஜப்பானியர் தங்கள் துப்பாக்கிகளைப் போட்டுவிட்டு நாலாபக்கமும் தவித்து உயிர்பிழைக்க ஓடினார்களாம்! என்னே சீனவீரப் புதல்விகளின் தீரமும், தியாகமும்! இதுபோன்ற சம்பவங்கள் ஓரிரண்டு அல்ல; சர்வசாதாரணம். இதுபோன்ற "உயிர்த்தியாக வீரச்செயல்கள்" அனேகம், ஸ்திரீ தொண்டர் படையினர் 1911-ம் வருஷம் நடைபெற்ற சீனப்புரட்சியின் போது செய்திருக்கின்றனர். "தேசத்துக்காக உயிரையும் தியாகம் செய்வோம்" என்ற படையின் தத்துவமே சீனமாதரியக்கத்தின் உயிர்நாடியாக இருந்து வருகிறது.

இந்த விழிப்புக்கும், உணர்ச்சிக்கும் ஆதியில் விதைபோட்டவர்கள் அன்னியர்களாய் இருந்தபோதிலும் இன்று அது ஒரு தேசிய இயக்கமாய் இலங்குகிறது. சீனஸ்திரீகள் முன்னுக்குவந்து தேசக்ஷேமத்தின் வேலையில் தங்களுடைய பங்கை எடுத்துக்கொள்ள வேண்டுமானால் அவர்களுக்கு முதலாவது கல்விபோதிக்க வேண்டியது அவசியம் என்பதை சீன முற்போக்காளர்கள் நன்கு உணர்ந்தனர். உயர்தரக்கல்வி பயின்ற ஒரு சில மங்கையர்களால் மட்டும் ஸ்திரீகள் விடுதலை இயக்கம் வளர்சியுற்று தன் லட்சியத்தை அடைய முடியாது என்பதை சீனர்கள் அறிந்தே யிருந்தார்கள். எனவே ஸ்திரீகளை அறியாமைப் படுகுழியினின்றும் விடுவிக்க தீவிரமான முயற்சிகள் முதலில் எடுத்துக்கொண்டார்கள். 1907-ம் வருஷம் நாட்டிலிருந்த எலிமெண்டரி பாடசாலைகளிலெல்லாம் சேர்ந்து மொத்தம் படித்த பெண்களின் எண்ணிக்கை 12,000; 1918-ல் 215,000; 1931-ல் 1,653,126. தற்சமயம் படிக்கும் பெண்களின் தொகை இதைப்போல் மூன்றுபங்குக்குமேல் ஆய்விட்டது.

பழைய சீனுவுக்கும், நவீன சீனுவுக்கும் உள்ளவேறுபாடுகளில் முக்கியமானது இருகாலங்களின் பெண்கல்வியின் அடிப்படையான நோக்கங்கள் ஒன்றுக்





கொன்று நேர்விரோதமாக இருப்பதுவே. பழைய சீனர்கள், பெண்களுக்கு அவர்கள் கிரஹக்கடமைகள், கணவன்மாருக்குச் செய்யவேண்டிய சேவைகள், தாய்தந்தையருக்கு ஆற்றவேண்டிய பணிகள் மட்டும் கற்றுக்கொடுத்தால் போதும் என்று நினைத்தார்கள். ஆனால் சீனமாதர்களின் தேசிய சபையின் (Kwangtung Women's Association) தற்கால நோக்கங்கள் என்ன?

சட்டத்தின் முன்பாகவும், சமூகத்திலும் பெண்கள் ஆண்களுக்குச் சரிசமானமாக இருக்கவேண்டும்.

ஸ்திரீ தொழிலாளிகளின் தேகாரோக்கியத்தையும் இதர சௌகர்யங்களையும் சட்டபூர்வமாகக் காப்பாற்றி அவர்களுக்கும் ஆடவதொழிலாளர்களுக்குக் கொடுக்கும் சம்பள விகிதங்களையே கொடுக்கும்படி செய்தல்.

வைப்பாட்டி வைத்துக் கொள்ளும் முறையை அடியோடு ஒழித்தல்.

தங்கள் இஷ்டப்பட்ட புருஷனையே மணந்து கொள்ள பரிபூரண உரிமை.

புத்திரி, புத்திரர்களுக்கு சமவாரீசு பாத்தியதைகள்.

குடியானப் பெண்களும் கல்வியடையும்படி செய்தல்.

சீனமாதர் இயக்கத்துக்கு 1931-ம் வருஷம் ஒரு மகத்தான வெற்றி கிடைத்தது. சீனக்குடியரசுச் சட்டத்தின்படியே சீனமக்கள் யாவரும் யாதொரு ஜாதிமத ஆண் பெண் என்ற வித்தியாசதாரதம்மியமின்றி சட்டத்தின் முன்பாக சரிசமானமாக பாவிக்கப் படுவார்கள் என்ற கொள்கையை சர்க்கார் அங்கீகரித்தார்கள். அதே சீர்திருத்தத்தின்படி வயது வந்த எல்லா ஸ்திரீகளுக்கும் ஓட் உரிமையும் வழங்கப்பட்டது.

கிரியாம்சையில் பூரணமாக இல்லாவிட்டாலும், பேரளவிலாவது சீனஸ்திரீகள் தங்கள் உரிமைகளுக்காக நடத்திய போரில் வெற்றிக்கொடி நாட்டி விட்டார்கள். இன்று அவ்வியக்கத்தின் முக்கிய வேலை அரசியல் துறையைவிட சமூகக் கல்வி விஷயங்களிலே தான் அதிகமாக இருக்கிறது. இதிலேதான் சீனஸ்திரீகள் கிளர்ச்சிக்கும் இந்தியமாதர் முன்னேற்ற இயக்கத்துக்கும் உள்ள வித்தியாசம் தெளிவாக விளங்குகிறது. இந்தியமாதர்கள் இன்னும் எவ்வளவோ தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. ஆனால் சீனப்பெண்களோ எவ்வளவோ காரியங்களைச் சாதித்து விட்டார்கள். இந்த வெற்றிக்கு முக்கிய காரணம் அவர்கள் ஆடவர்களுக்கு விரோதமாகவும், தங்களுக்கு சாதகமாகவும் பல உரிமைகளைப் பெற முயற்சி செய்யாதபடியும், புருஷர்கள் மீது ஒருவிதமான வெறுப்பான மனப்பான்மையைக் காட்டிக்கொள்ளாதபடியும், பொதுவாக ஸ்திரீகளின் நிலையை முன்னடையச் செய்ய வேண்டி கிளர்ச்சி செய்தது தான் என்று கூறவேண்டும். சீனஸ்திரீகளியக்கத்தை சர்க்காரும் எதிர்க்கவில்லை; புருஷர்களும் வெறுக்கவில்லை. அது மட்டுமல்ல; அரசாங்கமும், ஆடவரும் அக்கிளர்ச்சிக்கு சாதகமாக இருந்து உதவியளித்தனர் என்பது வெளிப்படை. சீனப்பெண்கள் ஆடவர்களின் உரிமைகளை எதிர்த்துப் போராடவில்லை; ஆனால் அவர்கள் வேண்டிய தெல்லாம்

புதிய சீனத்தை நிர்ணயிக்க எந்த எந்த அம்சங்களில் ஸ்திரீகள் சிறந்தவர்களோ அவைகளை நிர்மாணிக்கும் பொறுப்பு தங்களுக்கு அளிக்கப்படவேண்டும் என்றே அவர்கள் போராடினார்கள்.

சீனப்பெண்கள் விளையாட்டுக்களில் அடைந்திருக்கும் முன்னேற்றம் ஆச்சரியப்படத்தக்கது. இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் பையன்கள்கூட விளையாட்டுக்களிலும், தேகப்பயிற்சியிலும் சிரத்தை காட்டுவதில்லை; விளையாடினால் பிள்ளைகளின் உடம்பு கெட்டுப்போகும் என்று பெற்றோர்கள் நினைத்து வந்தார்கள். ஆனால் இப்பொழுது தேகப்பயிற்சியும், விளையாட்டுகளும் மாதரியக்கத்தின் ஒரு முக்கிய அம்சமாக இருந்து வருகிறது. கலாசாலைகளில் பெண்கள் கட்டாயமாக குதிரை சவாரிசெய்யவும், நீந்துவதற்கும், வாலிபால் (Volley-ball), பாஸ்கட் பால் (Basket-ball), டென்னிஸ் முதலிய விளையாட்டுக்கள் கற்றுக்கொடுக்கப் படுகிறார்கள்.

சர்வதேச விளையாட்டுப் போட்டியாகிய ஒலிம்பிக் போட்டிகளிலும் சீனமங்கையர்கள் கலந்து கொள்ளுகிறார்கள். 1929-ம் வருஷம் ஒஸாகா நகரில் நடை பெற்ற ஒலிம்பிக் பந்தயத்துக்கு சீனாவிலிருந்து நங்கையர் வாலிபால் டீம் ஒன்று சென்றது; 1930-ல் டோகியோவிலும், 1934-ல் மணிலாவிலும் சீனஸ்திரீ டென்னிஸ் விளையாட்டுக்காரர்கள் தங்கள் விளையாட்டுத் திறமையால் உலகமக்களை பிரமிக்கச் செய்தார்கள். ஷாங்காய் நகரத்துக்கு அருகில் ஸ்திரீகளுக்குத் தேகாப்பியாச முறையில் சிகிச்சை அளிப்பதற்காக லியாங்கியாங் காலேஜ் 17 வருஷங்களுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டு மெச்சத்தகுந்த வேலை செய்து வருகிறது. இது போன்ற ஸ்தாபனம் கீழ்திசையிலேயே இது ஒன்று தான். நூற்றுக்கணக்கான பெண்கள் பயிற்சி பெற்று தேகாப்பியாச உபாத்தியாயினிகளாக தேசத்தின் பலபாகங்களுக்கும் சென்றுவருகிறார்கள். இக்கல்லூரி மாணவிகள் விளையாட்டுப் போட்டிக்காக வெளிநாடுகளுக்கும் அடிக்கடி பிரயாணம் போகிறார்கள்.

மேலே குறிப்பிட்ட சில விஷயங்களிலிருந்து இந்திய மாதர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறதென்று தெரிகிறதல்லவா!



# பிரேமா

திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை

மானிடர் மனத்திற்கு மகத்தான எழுச்சியும் அலர்ச்சியும் கொடுப்பவை மூன்று; அவை தெய்வபக்தி, காதல், குழந்தைப் பிரேமை என்பவையாம். இவை மூன்றும் மாசற்றவை; பரிசுத்தமானவை; இம்மூன்றில் ஒன்றின் தன்மையை அறியாதார் மெய்யான உலகசுகமே இன்னதென்று அறியாதார் ஆவர்! அன்னார் நிலை பரிதபிக்கத் தக்கது. இந்த மூன்றிலும் சரியானபடி பண்பட்டவர்க்கோ இந்த ஜகவாழ்க்கை அற்புதமான ஒரு தெய்வீக மாங்கனி நுகர்வது போல் இருக்கும். ஆனால் மூன்றில் முதலிரண்டினை விட, மூன்றாவதாகிய குழந்தைப் பிரேமை சாதாரணமாய் எவரும் எளிதில் அடையக்கூடியதாம். தெய்வபக்திப் பரவசம் குறிப்பிட்ட இஷ்ட தேவதையின் தீவிர சேவையிலேயே உண்டாகும். காதலுருக்கம் கருத்தொன்றிய காதலருக்கேசாலும். ஆனால் குழந்தை பிரேமையோ சாதாரணமாய் எந்தக் குழந்தையைக் கண்டாலும் எழக்கூடியது. குழந்தைகளின் மழலைகள், விளையாட்டுக்கள் முதலிய லீலைகள் சாதாரணமாய் எவர் முகத்தையும் அலரச் செய்யும். ஆனால் இந்த லீலைகளிலும் மசியாத கடுகடு விருதய சுடுசுடு முகத்தினரும் ஒரு சிலர் உளர். அவர்கள் இந்த உலகில் பெருத்த பாக்கியஹீனர்கள் என்றே சொல்ல வேண்டும்.



பிரேமகுமாரி

குழந்தைகளின் லீலைகள் பலவகையின. அவை ஒவ்வொருவயதிலும் பலப் பல்வாய்ப் பரிணமிக்கும்: முகம் பார்த்தல், சிரித்தல், தீபங்காணல், பால் பருகல், கையுதறல், காலுதறல், கைகளைச் சப்புதல், குப்புறவிழுதல், தலை தூக்கல், அழல்; உட்காரல், தவழல், பண்டங்களை இழுத்தல், எழுந்து நிற்றல், மழலை தொடங்கல் என்பவை சில. இவையும் பிறவுமாகிய லீலைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குழந்தையிடத்தும், ஒவ்வொரு தினுசாக விளங்கி மனதை வசீகரிக்கும்.

அடியிற் கூறிய பாட்டு எமது குழந்தை "பிரேமகுமாரி"யின் சில லீலைகளைக் குறித்து குதூகலத்தால் பாடியது.

அன்னை வெண்டாமரை வாணி —எமக்
கன்போடளித்த பிரேமா
வன்னச் சண்முகந்தான் பேணி —கனி
வாழ்வை வளர்க்கும் பிரேமா

## பிரேமலக்ஷ்மி

சந்திர வன்னமாம் பிரேமா —எங்கள்
சர்க்கரைக் கட்டி பிரேமா

சந்தங்கமழும் பிரேமா —எங்கள்
கட்டிக் கரும்பு பிரேமா

சின்னஞ் சிறியதோர் கெண்டி —அதைச்
செல்லச் சிறுகையிற்கொண்டு

கன்னங்கள் உப்பப்பால் மண்டி —எங்கள்
கண்களை நோக்கிடும் பிரேமா

வண்டுகள் போலத்துலங்கும் —ஒளி
வண்ண வசீகரக்கண்முன்

பண்டம் பலகாரம் வந்தால் —மிகப்
பரபரப் பெய்துமே பிரேமா

கள்ளனுஞ் சங்கீதங்காணின் —ஒரு
கள்ள சுருப்பத்தைப் போலே

மெள்ள இருசெவிமொண்டு —இசை
அள்ளிக்குடிக்கும் பிரேமா

தத்தி தவழ்ந்தோடி வந்து —வெகு
தாட்டிகமாய் மடி தாவி

சத்தமில்லாமலென் தொடையில் —சிரம்
சார்த்தி மகிழும் பிரேமா

ஆம்பல் மலர்தல் போல —அலர்ந்
தாலென்று வாயைத் திறந்து

தேம்பியழுங் குரலாலே —குழல்
தேங்கிசை கொட்டும் பிரேமா

தாத்தத்தத் தாத்தத்தத் தாத்தா —எனத்
தங்கக்கிளி மொழிபோல

ஏத்துந் தமிழில் மழலை —சொலி
இன்பம் பயக்கும் பிரேமா

தேயுவெனத் தூயதாகி —தெய்வத்
தேசு நிறைந்த முகத்தில்

ஆயிரம் முத்தங்கள் தந்தும் —எங்கள்
ஆசையடங்காப் பிரேமா

தூய்மை கொடுக்கும் பிரேமா —அன்பின்
தோரணை காட்டும் பிரேமா

வாய்மை பெருக்கும் பிரேமா —எங்கள்
வாழ்வை வளர்த்திடும் பிரேமா

———:0:———

வித்வான் சம்சாரம் :—என்ன, ஓங்களைத் தானே. நீங்களும், மலையாளம், திருவாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை எல்லா ராஜாக்கள் கிட்டேயும் சன்மானம் சால்வை எல்லாம் வாங்கிக்கொண்டு வந்துட்டயள். ஓங்களைவிட சமஸ்கிரதத்துலே வித்வான் கிடையாது இன்னூட்டும் பேரு வந்துடுத்து. ரெம்பநாளா எனக்கு ஒரு சந்தேகம். அது என்னன்ன தோஷம் என்கிற வார்த்தைக்கும் சந்தோஷம் என்கிற வார்த்தைக்கும் என்ன வித்தியாசம், செத்தே நீங்க சொல்லுங் கோளேன் பார்க்கலாம்.

வித்வான் :—அடியே நீ கேட்டயே இந்த கேள்வி அயன் கேள்வி. இதுக்கு வியாக்கியானம் இல்லாமல் அர்த்தம் சொல்லி வித்தியாசத்தைச் சொல்ல முடியாது. கவனமாய் கேள். ஒன்னே நான கணத்துலே பிடிச்சுத் தள்ளினுக்கா அது தோஷம். நீயா விழுந்துவிட்டாயோ எனக்கு சந்தோஷம் சரிதானா? ரெண்டுக்கும் வித்தியாசம் புரிஞ்சுதா.



# பத்மாவதி அல்லது பதிபக்தி

திரு. கி. சந்தானம்

ஒரு நாடு சிறப்புற்று விளங்க வேண்டுமாயின் அது அந்நாட்டின் பெண்டிரால் தான் முடியும். அவர் தமது நற்குணநற் செய்கைகளாலும், நன்னடத்தையாலும் தம் மக்களுக்கு ஒரு வழிகாட்டியாய் நின்று அவர்களையும் நல்வழியிற் பழக்கி நாட்டிற் கணியாய் விளங்கச் செய்வார். தன்னலமறுத்துக் கணவனைக் கடவுளாக மதித்து வாழும் பெண்டிற்கு பொதுநல நோக்குடைய மக்கள் பிறப்பதில் சந்தேகம் யாதுளது?

அன்புதான் ஜனசமூகத்தின் ஜீவசக்தி. மாந்தர்களிடம் உலவும் பலதிறப்பட்ட அன்பில் சதிபதிகளிடம் நிகழும் அன்பே பூரணத்வமுள்ளது. சுயநலமற்ற தாய் பிரதிப் பிரயோஜனத்தை எதிர்பாராததாய், பயமற்ற தாய் வாழ்வின் உயர்தர லக்ஷியமாய் நிகழும் அன்பே உத்கிருஷ்டமான அன்பு. இத்தகைய அன்பு கடவுளிடம் செலுத்தப்படுங்கால் அதற்கு பக்தி எனப்பெயர். இதையே ஒரு பெண் புருஷனிடம் செலுத்தினுல் அதைப் பதிபக்தி என்பர்.

தன்நலமற்ற விடத்துத்தான் பூர்ண பதிபக்தி சாத்தியப்படுமென்று சொன்னோம். குலமகட்கு தெய்வம் கொழுநனே என்னும் கொள்கையைக் கடைப்பிடித்துத் தன்னை மறந்து, பதிப்பிரேமையிற் பூர்ணத்வமடைந்த குலமகட்கு இவ்வுலகில் சாதிக்கமுடியாத தொன்றுமில்லை. அவர் பெருமையைச் சொல்லவும் உறுமோ? அவர் சக்தி எங்கணும் வியாபித்து உலகையே அடிமை கொள்ளக் கூடியது. பரஸ்பரம் வைரமுற்ற ஜந்துக்களும் அவர்திருமுன் பகைநீத்து அன்பு பூண்டொழுகும்; புலியும் பசுவும் ஒரு துறையில் நீருண்ணும். சுருங்கச் சொல்லுமிடத்து உலகம் நடப்பதும் அவர இச்சாமாத்திரமே.

"தெய்வம் தொழாஅள் கொழுநற்
றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை"

எனத் தெய்வப் புலமை திருவள்ளுவரும் ஓதிப் போந்தனர்.

இப்பதிபக்தியையே ஆபரணமாகப் பூண்டு குன்றின்மேலிட்ட விளக்காய் பிரகாசித்து, ஸம்ஸார ஸாகரத்திலுழன்று கரைகாணுமல் திகைக்கும் மாந்தர்கட்கோர் தீபஸ்தம்பமாய் விளங்கியவர் நம் நாட்டில் அநேகர். நமனையும் வென்று அவனிடமிருந்து தன்நாயகன்உயிரை மீட்டுவந்த சாவித்திரி என்ன, வேடனை எரித்த தமயந்தி என்ன, பொழுதுவிடியாமற் செய்த நளாயனி என்ன, இவர்களும் இவர்களை நிகர்த்த எண்ணிறந்த பெண்டிரும் நம்மனதில் எந்நாளும் குடிகொண்டிருப்பர் என்பது சத்தியம். இவர்கள் சரித்திரமும் உலகுள்ளவரையில் ஓங்கிநிற்கும்.

இத்தகையோர்க்கோர் அணியாய் மற்றைப் பெண்டிர்க்கு ஓர் எடுத்துக்காட்டாய் சமீப காலத்தில் விளங்கியவர் பத்மாவதி என்னும் புனிதவதி. இவள் மகாராஷ்ட்ரதேசத்தில் பிறந்தவள். ஜெயதேவஸ்வாமிகள் என்னும் மகாபக்தரைப் பதியாக அடைந்தாள். பதிபக்தியிற் சிறிதும் சளைக்காதவர். அவருக்குத் தன் பர்த்தாவே தெய்வம். கணவனின் வாக்கே வேதவாக்கு. அவரது பூஜையெல்லாம் பதிக்குப் பணிவிடைசெய்தலே; தியானமெல்லாம் புருடனின் திவ்யரூபத்தை இடைவிடாமல் மனதில் நிறுத்தலே.

நல்வழியில் நின்றோர் பலசோதனைகளுக்காளாவது சகஜமே. இவ்விதிக்குப் பத்மாவதி விலக்கானவளில்லை. ஜெயதேவஸ்வாமிகள் ஒரு மகா பக்தர்; பிரம்மஞானி; ஏகாந்தஸ்தலத்தை

நாடி அடிக்கடி நாட்டைத்துறந்து சமீபத்திலுள்ள காட்டில் பிரவேசித்துவிடுவர். அப்போதெல்லாம் பத்மாவதி வனத்தில் அலைந்து திரிந்து பல கஷ்டங்களுக்குள்ளாகிக் கடைசியில் கணவனைக் கண்டுபிடித்து வீட்டுக்கழைத்து வருவார். இங்ஙனம் ஒருநாள் ஜெயதேவஸ்வாமிகள் வீட்டைவிட்டுச் சென்றுவிட்டார். பத்மாவதிதேவியார் பலவிடங்களில் தேடியும் அவரைக் கண்டுபிடிக்க முடியாமல் உயிரும் உடலும்வாட அலைந்து திரிந்தார். இச்செய்தியை அவர் தகப்பனார் அறிந்து தான்தேடியழைத்துவருவதாகத் தேறுதல்கூறி பத்மாவதியைத் தன் வீட்டுக்கழைத்துபோனார். ஆனால் அவராலும் ஜெயதேவஸ்வாமிகளிருப்பிடத்தைக் கண்டுபிடிக்க முடியாமற்போகவே, சிறையிருந்த செல்விபோல் பத்மாவதியும் ஊணுறக்கம் துறந்து ஆடையாபரணங்கள் தவிர்த்து நாதன் நாமத்தையே ஸதாகாலமும் ஜெபித்துக்கொண்டு அவர் வரவை எதிர்பார்த்தவண்ணம் காலங்கழித்து வந்தார்.

உலகெலா முணர்ந்தோதற்கரியவனான எம்பெருமான் செயல்கள் நம் புல்லறிவுக் கெட்டுமோ? பல விடங்களில் தேடியும் பத்மாவதிக்கும் அவர் தந்தைக்கும் அகப்படாமற்போன ஜெயதேவஸ்வாமிகளைக்கண்டு தெரிசிக்கும் பாக்யம் ஒரு தனவந்தனுக்குக் கிட்டிற்று. அவன் ஸ்வாமிகளைத் தன் வீட்டுக்கழைத்துப் போய் உபசரித்து அவர் பலதடவை மறுத்தும் கேளாமல் மிகுதியான தனத்தையளித்துத் தன் ரதத்திலேற்றி அவர் வீட்டிற்கனுப்பிவைத்தான். காட்டினூடே ரதம் செல்லுகையில் பல திருடர்கள் எதிர்ப்பட்டுத் தனங்களை யபகரித்துக்கொண்டு ஜெயதேவஸ்வாமிகளின் கால்கைகளைத் துணித்து அவரைப் பாழுங்கிணற்றில் தள்ளிவிட்டுச் சென்றுவிட்டனர்.

எக்காரியம் செய்யினும் எதவஸ்தைப்படினும் பக்தர் மனம் பரமனையே நாடிநிற்கும். தன் கையை ஒரு துர்த்தன் வெட்டிவிடவும் தனக்கொன்றும் சோதனுபோல் ஸ்ரீஸதாசிவ பிரம்மேந்திரன் தன் வழியே போகவில்லையா? அதுபோல் ஜெயதேவரும் தன் கைகால்கள் வெட்டப்பட்டும் கர்த்தனிடத்தே கருத்தை நாட்டியிருந்தனர். இங்ஙனமிருக்க வேட்டையாடவந்த வொரு அரசன் ஜெயதேவரைக் கண்டு மகானெனவறிந்து தன் அரண்மனைக்கழைத்துச் சென்று அவரையே குருவாக மதித்து அவருக்குப் பற்பல தொண்டுகள் புரிந்துவந்தான்.

சத்சங்கத்தாலும் சாதுசேவையாலும் அரசன் மனம் நிவிருத்தி மார்க்கத்தில் திரும்பியது. இல்லறத்தைத்துறக்க இச்சை கொண்டான். ஆனால் ஜெயதேவர் "அப்பா நீ உலகத்திலிருப்பதால் யாதொரு குற்றமுமில்லை. ஆனால் உன்னிடத்தில்மட்டும் உலகமிருக்கும்படி விட்டுவிடாதே. என்னைப்போல் கிருகஸ்தாசிரமத்திலிருந்தும் நீ முக்தி பெறுதல் கூடும்" என்றார். இப்பொழுதுதான் அரசன் தன் குருவுக்குத் தேவியிருக்கிறார் என்பதையறிந்தான். உடனே ஆட்களையேவி அவரையழைத்துவர ஏற்பாடு செய்தான்.

அவிழ்த்துவிட்ட கன்று துள்ளிக் குதித்து வாலை உயரத்தூக்கிக் கொம்மாளமிட்டுத் தாயின்மடியை நோக்கிப் பார்ப்பதுபோல பத்மாவதிதேவியார் தன் பர்த்தாவைக்காணக் காதலுற்றுக் கடுகிவந்தார். கண்டார் கணவன் நிலையை. இடியேறுண்ட நாகம்போல் திகைத்தார், அழுதார், அரற்றினார், உடல்சோர உயிர் ஊசலாட அனலிலிட்ட புழுப்போல்வெதும்பித் துடித்தார். ஆயினும் சென்றது கருதாஜீவன் முக்தரான தன் பதியால் தேற்றப்பட்டு முன்னினும் பன்மடங்கு ஊக்கத்தோடு அவருக்குப் பணிவிடை செய்துவந்தார்.

இன்பம், துன்பம், மெய், பொய், சீதம், உஷ்ணம்முதலான எதிரிடைத் தத்துவங்களாலானது தான் உலகமே. காட்டில் ஜெயதேவரைத்தாக்கிய கள்ளர்கள் அரசன் சாதுக்களுக்





குச் சன்மானம் வழங்கிவருவதைக் கேள்விப்பட்டு சாதுவேடம்தாங்கி மன்னனிடம் வந்தார்கள். ஜெயதேவருக்கு அவர்களை இன்னாரெனத் தெரிந்தும் ராஜனுக்குத் தெரிவியாமல் வாளாவிருந்ததுடன் அவர்களுக்கு மிகுதியான தனதான்யங்களைக்கொடுத்து ரதத்திலேற்றுவித்து ஏவலாளரைக் கூட அனுப்பி வழிவிட்டுவரும்படி ஏவினர். ரதம் காட்டின் வழியே சென்றது. தங்களிருப்பிடம் சமீபித்ததும் திருடர்கள் ரதத்தினின்றுமிறங்கி வேலையாட்களிடம் ஜெயதேவரைப்பற்றி பல அவதூறு வார்த்தைகள் புகன்றனர். பக்தனுக்குக் குற்றம்செய்யின் பகவான் பொறுப்பரோ? பூமி படீரெனவெடித்தது. கள்ளர்கள் பாதாளத்திலமிழ்ந்தனர். கிங்கரர்கள் இவ்வதிசயத்தை அரசனுக்கு ஓடியுரைத்தனர். இச் செய்தியைக் கேட்ட ஜெயதேவர் துன்பத்திலாழ்ந்தார். பகவத் பக்தரென வேஷம்போட்டு வந்தவர்களுக்கும் கெடுதல் நேருவது அவருக்குப் பொறுக்கவில்லை. தன் உயிரையும் அதேவிடத்தில் மாய்த்துக்கொள்ள எண்ணி காட்டைநோக்கிப் புறப்பட்டார். அரசனும் பின்தொடர்ந்தான்.

இது இங்ஙனமிருக்க ஜயதேவரை மகிபன் குருவாகப் பாவித்து வந்ததுபோல் அரசியும் பத்மாவதிதேவியை மிகவும் உபசரித்து அவருக்குப் பல சௌகரியங்களும் செய்து கொடுத்து அவரைச் சந்தோஷிப்பித்துவந்தார். மேற்கண்ட சம்பவங்கள் நிகழ்ந்தவன்று அரசனும் ஜெயதேவரும் காட்டிற்குச் சென்றபின்பு அரசி பத்மாவதியை யணுகி தான் நற்கதியடைவதற்கோர் உபாயமுறைத்துத் தன்னையாட்கொள்ளவேண்டுமெனப் பிரார்த்தித்தாள். அதற்கு தேவியார் "ஸ்திரீகள் மோக்ஷமடைவதற்கு சுலபமான மார்க்கம் பதியைக் கடவுளாகப்பாவித்து நடத்தலே; புருஷன் பணிவிடையே பூஜையாகவும், அவன் திருநாமத்தை ஜெபிப்பதே பூஜையாகவும் கொண்டொழுகி பதியிறந்தக்ஷணமே தன் உயிரைத் தியாகம் செய்யும் ஸ்திரீ மோக்ஷமடைவாள் என்பதற்குச் சந்தேகமில்லை. இதனினும் உயர்ந்ததும் சுலபமானமார்க்கம் யானறியேன்" என உபதேசித்தாள். அரசி இதைக்கேட்டு நகையாடி "அம்மணி கணவனைக் கடவுளாக மதித்துநடத்தல் கூடுமானதே. ஆனால் அவன் இறந்தான் எனவும் தக்ஷணமே உயிர்விடுதல் என்பது மட்டும் நடக்கக் கூடியதல்ல" என்றாள்.

"என்னசொன்னாய்! கற்புடைய நங்கைக்குக் கூடாததென்றொன்றுண்டோ. அனசூயை மும்மூர்த்திகளையும் பாலராகச் செய்யவில்லையா? அருந்ததி கற்கடலைகளை வேகவைக்கவில்லையா? கணவன் இறந்தானெனக்கேட்டதும் உயிர்விடுபவளே உத்தமபத்தினியென்பது பெரியோர்வாக்கு. அதுவே எனது கொள்கை" என்றாள்.

அரசிக்கு சமாதான மேற்படவில்லை. தன் தாதிகளோடுகலந்து யோஜித்தாள். "பதியிறந்தபின் உடன்கட்டையேறுதலே மிகத்துர்லபம். அப்படியிருக்க இறந்தானென்றசொல் காதில் கேட்டவுடன் உயிர்துறத்தல் இயலுமா? கௌசலை முதலானோர் தசரதருக்குப்பின் உயிர்வாழவில்லையா? ராமன் படுகளத்திலிறந்துபட்டானெனச்சொல்லியும் ஸீதை தான் நேரில் காணப்பிரியப்பட்டனளேயொழிய உயிர்துறந்தனளோ? தாரை வாலிக்குப்பின் வாழ்ந்திருக்கவில்லையா? மண்டோதரியும் இராவணனிறந்ததும் அவன்மேல் விழுந்து அழுது அரற்றி உயிர்துறந்தனளேயொழிய அவச்சொல் கேட்டதும் ஆவி நீத்தனளோ? இது கூடாதகாரியமே. பத்மாவதிக்குமட்டும் இது எப்படி சாத்யமாகும்? தன்னால் செய்யமுடியாததைப் பிறருக்கு உபதேசிப்பதில் யாதுபலன்?" எனப் பலவாறாக யோஜித்து தாதிகளைக்கூவி "பாங்கிகாள், நீங்கள்போய் ஒரு பட்சியைக்கொன்று அதின் ரத்தத்தில் ஜெயதேவருடைய வஸ்திரத்தை நனைத்து பத்மாவதிக்குக் காண்பித்து காட்டில் புலியாலடிக்கப்பட்டு ஜெயதேவர் இறந்துவிட்டார் என்று சொல்லுங்கள். என்ன நடக்கிறது பார்ப்போம்" என்றாள்.

அதற்கு அவர்கள் "அம்மணி, இது ஒருவேளை பொல்லாங்காய் முடிந்தாலும் முடியும். பத்மாவதி மகாப் பதிவிரதை என்று நாம் கேட்டிருக்கிறோம். அவர் செய்கைகளையும் கண்டிருக்கிறோம். விளையாட்டு வினையாய் முடிந்தால் என்செய்வது?" என்றனர்.

அரசி அவர்களைக் கையமர்த்தி "நீங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். நீங்கள் அஞ்சுவதுபோல் ஒன்றும் நடவாது. யார்க்கும் சொல்லுதல் எளிது, சொன்னவண்ணம் செய்தல் அரிது. ஆதலால் நீங்கள் கவலைப்படவேண்டாம். நான் பத்மாவதியினிடம் போகிறேன். நீங்கள் சற்றுப்பொறுத்து நான் சொன்னபடி செய்துகொண்டு வாருங்கள்" என்றாள்.

ஏற்பாட்டின்படியே எல்லாம் நடந்தது. ஜெயதேவர் இறந்தாரென்ற வார்த்தை பத்மாவதி செவியில் பட்டதுதான் தாமதம், அன்புவெள்ளம் மடைதிறந்தாலென்ன "நாதா" என்று ஒரு குரல் அவள் வாயினின்றும் எழுந்ததை அங்கிருந்தோர் கேட்டனர். கண்ணைப் பறிக்கும்படியான ஜ்யோதி அவர் உடலினின்றும் வெளிப்பட்டுப்போனதைக் கண்டனர். அவர் உயிர் காட்டைவிட்டு வீட்டையடைந்துவிட்டது. பதிபக்தியின் உன்னத நிலையை விளக்க உதாரணம் இதனின்றும் வேறுளதோ?

வனத்திற்குச்சென்ற ஜெயதேவர் கள்ளர் பாதாளத்தமிழ்த்தியவிடத்தைப் பார்வையிட்டு வருத்தமேலீட்டால் தன் உயிரை மாய்த்துக்கொள்ள எத்தனித்தார். அப்போது அன்பருக்கருள்செய்யும் ஐயன் ரிஷபவாகனரூபராய்க் காக்ஷியளித்து திருடரையுமெழுப்பித்தந்து, நகரத்துக்குச்சென்றபின் ஸ்ரீநாராயணன் காட்சியளித்தாட்கொள்வாரெனப் பல ஆசிகள் கூறி அந்தர்த்தானமாயினர்.

பட்டணம் புக்கனர் அரையனும் குருவும். நகரம் மங்கலநாணிழந்த நங்கைபோல சோபையிழந்து தோன்றியது. மன்னனின் மாளிகையையடைந்து தன் மனைவியைக் காணவிரைந்தார் ஜெயதேவர். தன் பாரியை பிரேதமாகக் கிடப்பதைக் கண்டார். அரசியின் செயலை அறிந்தார். அரசன் நெஞ்சம் பதைபதைக்க, வெகுளிமூள, குருபத்னியின் அழிவுக்குக் காரணமாயிருந்த தன்மனைவியைக்கொல்ல உடைவாளை உருவினன். நற்குணக்குன்றாகிய ஜெயதேவர் அரசனைத்தடுக்கக் கருதி கையறு நிலையராயிருப்பதையும் மறந்து கையெடுக்க முயல, கண்ணனின் அருளால் அவருக்குக் கைகால்கள் வளர்ந்தன. இடர் பலவுற்றபோதும் தெய்வபக்தியினிற் சிறிதும் குறையாது விளங்கிய புனிதராம் ஜெயதேவருக்கும் குருவின்பால் குறையாவன்பு பூண்ட அரசனுக்கும் காட்சியளித்தார் பகவான். அணங்கும் உயிர்பெற்றாள். யாவரும் மறைமுடிகாணா மணிமுடிவேந்தனை நேரில்கண்டு தரிசிக்கும் பாக்யம் பெற்று

"அன்பெனுமாறு கரையது புரள
நன்புலனன்றி நாத்வென்றாற்றி
உரைதடுமாறி யுரோமம் சிலிர்ப்பக்
கரதலமொட்டி இருதய மலர
கண்களிகூர நுண்துளியரும்ப
இடரைக்களையும் எந்தாய்போற்றி
ஈசாபோற்றி இறைவாபோற்றி
முத்தாபோற்றி முதல்வாபோற்றி"

என்று பகவானை வாயாரத் துதித்தனர்.

இவ்வாறு பதிபக்தியென்னும் சிறந்த தர்மத்தைப் பூரணமாக அனுஷ்டித்துக்காட்டி பொய்யுடம்பு நீங்கியும் புகழுடம்புடன் மங்கையருள் மாணிக்கமாய் திகழ்கின்றார் பத்மாவதி யென்னும் புனிதவதி.





ஸ்ரீமதிகள் இந்திரா ஜோஷியும், நிர்மலா சாமர்தியும்
டோக்கியோவில் நடைபெற்ற சர்வதேச கல்வி மகாநாட்டுக்குச்
சென்று திரும்பினர்.



ஸ்ரீமதி ஜே. பி. சுக்லா
ஹரிபுர காங்கிரஸ் மஹாசபை உபசரணைக்
கமிட்டியின் கூட்டுக்காரியதரிசி.



கிரஹலக்ஷ்மி

# என் சகோதரிகளுக்கு!

## டர்பன் ஸ்ரீமதி பார்வதி

சகோதரிகாள்!

இங்கு யான் "கிரஹலக்ஷ்மி" யின் ஆசிரியர் வேலையில் சற்றுபங்கு பெற்றுக்கொள்வதைக் குறித்து மிகையாக எண்ணமாட்டீர்களென்றே நம்புகிறேன்.

சகோதரிகாள்! காலச் சுழற்சிக்கேற்ப கடனாற்ற எண்ணும் கற்புக்கரசிகாள்! அன்னத்தின் குணத்தை அடுத்து, உண்மை நாகரிகத்தை நாடி, உங்கள் மக்களை உலகின் தர்மத்தில் உயர்த்தும் கல்வி முறைகளைப் போதிக்க உங்களிடம் அன்பு நிறைந்த உணர்வு உளதோ? இயற்கை அமைப்புக் கிணங்கியும், நாட்டின் உயர்வை என்னாளும் நிலைநிறுத்த எண்ணியும் உங்கள் சுதந்தரம் முன்னேற்றம் உறுவது நலமன்றோ? ஆமெனில், உங்கள் முன்னேற்றத்தை நாடி உயர்த்துவது உங்கள் கடனாகும்.



ஸ்ரீமதி பார்வதி

இதைக் கண்ணுறும் சகோதரிகளாகிய நீங்கள், இணைபிரியாது "கிரஹலக்ஷ்மி" யைப் பின்பற்றுங்கள். அதன்மூலம் உங்கள் கோரிக்கைகளை உலகறியச்செய்ய "கிரஹலக்ஷ்மி" வசதி கொண்டுள்ளாள். "கிரஹலக்ஷ்மி" மூலமாய் தமிழகத்தில் உங்கள் மக்களை வீரர்களாக்குவதுடன், சுதர்மத்தை நிலைநாட்டி, தமிழ்ப்பெண்கள் உலகபோதகர், தமிழ்மக்களைப் பின்பற்றின் ஞானம், செல்வம் சிறக்கும், சமத்துவம் விளங்கும், என்னும் கீர்த்தியை நிலைநாட்டுங்கள்.

எழுத்தறிவு கொண்டவர்கள் எழுதுங்கள். எழுத்தறிவில்லையாயின், உங்கள் தலைவர்கள் மூலம் உங்கள் நலத்திற்கான உரைகள் எழுதி அனுப்புவதை "கிரஹலக்ஷ்மி" ஏற்றுக்கொள்வாளென்றே நம்புகிறேன். "கிரஹலக்ஷ்மி" பெண்களுரைகளை தனது பொன் மலர்களாய்ப் போற்றி தமிழுலகை உயர்த்தத் தோன்றியிருக்கிறாள். இதனால் நமது சமூகம் உயர்வதுடன், "கிரஹலக்ஷ்மி"க்குப் பெருமையும் ஆதரவும் பெருகும். அத்தகைய பெருமையும் ஆதரவும் பெருகுமானால் "கிரஹலக்ஷ்மி" நம் சமூகம் நலமுற என்றென்றும் தொண்டாற்றி வருவாளென்பது உண்மை.

ஆகையால் படித்த ஒவ்வொரு ஸ்திரீயும் உடனே சந்தாதாரராகச் சேர்ந்து பத்திராதிபரையும், பிரகாசகர்த்தரையும் உற்சாகப்படுத்துவீர்கள் என்று நம்புகிறேன்.

# வைத்தியப் பகுதி

ஸ்ரீமதி. எஸ். கமலா

## கர்ப்பவதி கவனிக்கவேண்டியவைகள்

நம் தேசத்தில் சிசு மரணங்கள் வெகு அதிகம். குழந்தைப் பேரால் ஏற்படும் தாய்மார்களின் மரணங்களும் அளவுக்கு மீறியதாய் இருக்கிறது. இந்தக் கொடுமையான நிலையைமாற்ற நம்மால் முடியும். எத்தனையோ குழந்தைகளும், தாய்மாரும் மரணமடையாமல் காப்பாற்ற வழியிருந்தும் அதை எல்லோரும் கையாள்வது கிடையாது. கர்ப்பவதியான ஒரிருமாதங்களிலேயே தாயை சமீபத்திலுள்ள சர்க்கார் அல்லது முனிஸிபல், ஜில்லா, தாலுகா போர்டு ஆஸ்பத்திரி டாக்டர்களிடமாவது அல்லது சக்தியுள்ளவர்கள் தேர்ச்சி பெற்ற ஸ்திரீ டாக்டர்கள், மருத்துவச்சிகளிடம் காட்டிவர வேண்டும்; இப்பொழுது அங்கங்கே ஏற்பட்டிருக்கும் பிரசவமுன் உதவி நிலையங்களுக்குச் (Anti-natal centres) சென்று அவர்கள் கொடுக்கக்கூடிய மருந்துகளை அருந்தி அவர்கள் சொல்லுகிறபடி நடக்க வேண்டும். இங்கு அடிக்கடி போய் தங்கள் நிலையை டாக்டர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்வதில் இருவித சௌகர்யங்களிருக்கின்றன. சில்லரைத் தொந்தரவுகளும் சிக்கல்களும் இங்குள்ளவர்கள் அப்போதைக்கப்போது கவனிப்பதால் லகுவில் சிரமமில்லாமல் தீர்க்கப்பட்டுவிடும். பின்னும் சிக்கல்கள் ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்ளலாம். மேலும் சில கேஸ்கள் ரொம்பவும் நூதனமாகவும், கஷ்டமானவைகளாகவும் இருக்கலாம். அவைகளைத் தெரிந்துகொண்டு அவற்றுக்கேற்ற பரிகாரங்கள் செய்ய தகுந்த வைத்திய நிபுணர்களுக்கே தெரியும். பிரசவ உதவி நிலையங்களிலுள்ளவர்கள் அதைச் செய்யத் தயாராகக் காத்திருக்கின்றனர்.

பிரசவம் ஒரு கத்து என்று கருதப்படுகிறது. ஆனால் கர்ப்பம் தரித்திருக்கும் ஸ்திரீ, வைத்திய முறையில் அனுஷ்டிக்கச் சொல்லியிருக்கும் நியமங்களைக் கையாண்டு வருவாளானால் அது அவளுக்கு யாதொரு சிரமத்தையும் கொடுக்காது; அது அவளுக்குமட்டும் நன்மையல்ல; பிறக்கப் போகும் சிசுவுக்கும் மிகவும் நன்மையாகும். முதலாவது கர்ப்பந்தரித்த மங்கை தன்னை நல்ல டாக்டர் அம்மாளிடம் காட்டி யாதொரு கூச்சமோ லஜ்ஜையோ இல்லாதபடி தன் உடம்பின் வாகைப் பற்றியும், தனது நோய்களைப் பற்றியும் ஒளிக்காமல் சொல்லிவிட வேண்டும். உதாரணமாக சிசு வெளிவரும் துவாரம் வெகு சிறியதாயிருந்தால் வைத்தியர் பரிசீலனை செய்து பார்க்கும்போது தெரிந்து அதற்கு வேண்டிய பரிகாரங்கள் செய்து சிசு சிரமமன்னியில் வெளிவர வேண்டியதைச் செய்வாள். இதை அலட்சியம்



செய்தால் பின்னடி தாயின் உயிருக்கே ஹானியேற்படலாம். மேலும் வைத்திய பரீட்சை அடிக்கடி செய்து வந்தால் வயற்றில் குழந்தை எவ்விதமிருக்கிறது என்று தெரிந்து அது பிசகான மார்க்கமாய் வெளிவராமலிருக்க வேண்டிய சிகிச்சைகளும் கர்ப்பிணிக்கு அளிக்கமுடியும். கர்ப்பந்தரித்திருக்கும்போது தான் பலவித தொந்தரவுகள் ஏற்படாமல் தடுப்பது லகு. பிரசவத்துக்குப்பின் அவைகள் ஏற்பட்டு அவற்றை சொஸ்தப்படுத்துவது என்பது மிகவும் கடினமான காரியம்.

பால்ய விவாஹம் அடியோடு ஒழிக்கப்படவேண்டும். இளஞ் சிறுமிகளின் தேக வளர்ச்சி பூரணமாகுமுன்னும், அந்த அந்த உறுப்புக்கள் தங்கள் காரியங்களைச் செய்யத்தக்க வளர்ச்சியும் சக்தியும் பெறுமுன்னரும் மணமுடிந்து கர்ப்பிணிகளாகவும் ஆகிவிடுகிறார்கள். ஆகையால் அவர்களுக்கு குழந்தை பெறக்கூடிய வலுவு உடம்பில் இல்லாததால்தான் நம் நாட்டில் பிரசவ மரணங்களும், சிசு மரணங்களும் அதிகமாய் இருந்து வருகிறது.

கர்ப்பிணி பொதுவாக நல்ல காற்றும், போதிய சூரியவெளிச்சமும், ஆரோக்கியமுமான இடத்தில் வசித்து வரவேண்டும். அவள்படுத்துத் தூங்கும் இடத்தில் காற்று நிறையவேண்டும்; இரைச்சல் இருக்கக்கூடாது.

சாதாரணமாக வீட்டுவேலைகளைச் செய்வதே தகுந்த தேகப் பயிற்சியாயிருந்த போதிலும் கர்ப்பிணி தினசரி அரைமணி அவகாசமாவது வெளியிடங்களில் உலாவ வேண்டும். மாலை வேளைகளில் குறைந்த பக்ஷம் இரண்டு மணி நேரமாவது காற்று வாங்க வீட்டை விட்டு வெளியே சென்று வரவேண்டும். கர்ப்பம் வளர வளர அதிகமான கடினமான வேலைகள் செய்யக்கூடாது; பளுவான சாமான்களைத் தூக்கக் கூடாது. சாதாரணமாக நம்தேசத்துப் பெண்கள் தங்களால் தூக்கமுடியாத குடங்களைத் தூக்கியும், பளுவான சாமான்களைத் தூக்கி நழுவி விழுவார்கள். கர்ப்பந்தரித்திருக்கும் போது இப்படி விழுந்தால் ரொம்பவும் கஷ்டம்.

கர்ப்பிணி குறைந்த பக்ஷம் 8 மணி நேரமாவது யாதொரு சந்தடியில்லாத இடத்தில் நிம்மதியாகத் தூங்கவேண்டும். பகலில் தூங்கக்கூடாது. ஆனால் அரைமணி அல்லது ஒரு மணி நேரம் படுத்துக்களைப்பாறவேண்டும்.

தினந்தோறும் சுத்தமாக ஸ்நானம் செய்யவேண்டும். உடம்பைத் தேய்த்து குளிக்கவேண்டும். மர்மஸ்தானங்களை அடிக்கடி சுத்தம் செய்துகொள்ளவேண்டியது மிக அவசியம். சிறுசிரங்கு, சொறி எது இருந்தாலும் மருந்துபோட்டு ஆற்றிக்கொள்ள வேண்டும். வேறு ஏதாவது நோய் கண்டால் உடனே டாக்டரைக் கூப்பிட்டு வேண்டியதைச் செய்துகொள்ள வேண்டும்.

உணவு எடுத்துக் கொள்வதிலும் ஒரு திட்டம் வேண்டும். உணவு நல்ல போஷாக்கு அளிக்கக்கூடியதாகவும், சுத்தமானதாகவும், லேசாக ஜீரணிக்கக் கூடியவையாகவும் இருத்தல் வேண்டும். கண்ட கண்ட வேளைகளில் சாப்பிடக் கூடாது. அளவுக்குமிஞ்சிய ஆகாரம் எடுக்கவே கூடாது. தன் ஆகாரத்தில் எதேஷ்டமாகப் பச்சைக் காய்கறி பதார்த்

தங்களும், பழவகைகளும் சேர்த்துக் கொள்ளவேண்டும். பால்தான் சிறந்த உணவு. போதை வஸ்துக்களையும், மசாலா பதார்த்தங்களையும் உண்ணக்கூடாது. சாதாரண மத்திய வகுப்புக் கர்ப்ப ஸ்திரீகளுக்கு கீழ்கண்ட உணவு பொருத்தமாக இருக்கும்.

காலை 7 மணிக்கு தோசை, அல்லது இட்டிலி அல்லது கஞ்சியும், மோர் அல்லது கொஞ்சம் காப்பியாவது டீயாவது சாப்பிடலாம். 11 மணிக்கு சாதம் அல்லது கோதுமைப்பூரி சாப்பிடலாம். கத்தரிக்காய், வெங்காயம், பீன்ஸ் முதலிய காய்கறி பதார்த்தங்களைச் சேர்த்துச் சாப்பிடவேண்டும். போதிய அளவு நெய்யும், நல்ல எண்ணெயும் ஆகாரத்துடன் சேர்த்துவர வேண்டும். ஆகாரத்துக்குப் பின் ஒரு வாழைப்பழமாவது ஆரஞ்சுப் பழமாவது சாப்பிடவேண்டும். மாலை 4 மணிக்கு ஏதாவது ரொட்டியோ பாலோ கொஞ்சம் கொஞ்சம் சாப்பிடவேண்டியது. இரவில் எட்டுமணிக்கு அன்னமும் வேறு பதார்த்தங்களும் சாப்பிடலாம். மாமிச பதார்த்தங்கள் சாப்பிடுபவர்கள் அவ்வித உணவுகளை அதிகமாக உபயோகப்படுத்தக்கூடாது. மீனும், முட்டையும் தவிர இதர பதார்த்தங்கள் உபயோகப்படுத்தக்கூடாது.

கர்ப்பிணி தன்வாயை வெகுசுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். தினசரி இருமுறை பற்களைச் சுத்தம் செய்துகொண்டு ஒருதடவை பல்லை பல் வைத்தியரிடம் காட்டவேண்டும். ஈரல் எறிச்சல், சொத்தைப்பல் இருந்தால் பின்னர் பலவித நோய்களுக்கு இடமாகும்.

மலம் சுத்தமாக கழியவேண்டும். மலபந்தம் கர்ப்பிணிகளுக்கு ஏற்பட்டால் பிரசவகாலத்தில் பெரிய சிக்கல்களும், கஷ்டங்களும் உண்டாகும். ஆகார நியமம் சரியாக இருந்தால் மலச்சிக்கல் நேராது. அப்படி நேர்ந்தாலும் பலமான பேதிமருந்து எடுத்துக்கொள்ளக் கூடாது. பழம், காய்கறிகள் அதிகம் சேர்த்தாலேபோதும். நீர் சரியாக இறங்க வேண்டும். அது சரியாகப் போகாவிட்டால் காலதாமதம் செய்யாமல் டாக்டரிடம் காட்டவேண்டும். ஏழாவது மாதத்துக்குப்பிறகு இருவாரத்துக்கு ஒருதடவை மூத்திரத்தை டாக்டர் பரிசோதனைக்கு அனுப்பிவரவேண்டும். ஸ்தனங்களை அடிக்கடி வெந்நீரால் சுத்தம்செய்து கொள்வது அவசியம். சுருங்கிப்போன முலைக்காம்புகள் சரியானபடி இருக்கும்படி செய்தால்தான் பிரசவத்துக்குப்பின் குழந்தை பால் குடிக்க லகுவாயிருக்கும். இதுவிஷயங்களில் நம்பெண்கள் வெட்கப்படக்கூடாது. பின்னர் நேருந்துன்பங்களை மனதில்வைத்து முன்ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

இரத்தக்குறைவு, சுரம், மண்டையிடி, முகவீக்கம், அல்லது கைகால்வீக்கம், வேறு மர்மஸ்தான சம்பந்தமான நோய்கள் வலிகள், தூக்கமின்மை, வயறு பொறுமல் முதலிய ஏற்பட்டால் கர்ப்ப ஸ்திரீகள் உடனே வைத்திய உதவியை நாடவேண்டும்.

தவிர பிரசவ சமயத்துக்கு அவசியமான சாமான்கள், மருந்துகள் இதர வசதிகள் எவ்வளவோ அதிகம். அவற்றை எல்லாம் சாதாரணக் குடும்பத்திலுள்ளவர்கள் தாங்களே வாங்கிவைத்துக்கொள்ள முடியாத காரியம். ஆகையால் வசதிகளைச் செய்துகொள்ள முடியாத ஸ்திரீகள் வீண் கௌரவம் பார்க்காமல் சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஆஸ்பத்திரிகளுக்கே பிரசவத்துக்குப் போவதுதான் க்ஷேமமானமுறை. அங்கிருக்கும் வசதிகள் எல்லாம் நம்முடைய வரிப் பணத்திலிருந்து வாங்கிவைக்கப்பட்டவைகளே. அங்கு வேலைசெய்யும் உயர்தர டாக்டர்கள் முதல் ஆயாள்வரை நம்மால் சம்பளம் கொடுக்கப்படுபவர்கள். பொதுஜன சேவைசெய்யவே அவர்களிருக்கிறார்கள். ஆகையால் அங்கு போகத் தயங்கவேண்டாம். அந்த இடங்களில் வேலைமுறை சரியாக இல்லாவிட்டால் மேலதிகாரிகளுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தி விஷயங்களைச் சீர்திருத்தவேண்டியது நம்முடைய வேலைதான். இந்தச் சாதாரண விதிகளைக் கையாண்டால் நம் நாட்டில் ஏற்படும் கோடிக்கணக்கான சிசுமரணமும், பிரசவமரணங்களும் நின்று தாய்மார்களும், குழந்தைகளும் திடகாத்திரராய் திகழ்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.





# அமிதக் காபி குடியின் கேடு

"குட்ஹெல்த்" என்ற பத்திரிகையில் ஒரு ருசிகரமான விஷயம் வெளியாயிருக்கிறது. ஒரு பெண்மணி; இளவயதுடையவர்; அதிக நேரம் வேலை செய்பவர்; வேலை செய்வதாலுண்டாகும் அலுப்பைப் போக்குதற்காக அவர் ஒரு நாளைக்கு நான்குமுறை காப்பி சாப்பிடுவது வழக்கமாம். காப்பி சாப்பிட்டதும் அவர் சுறு சுறுப்பாக வேலை செய்வார். ஆனால் தூக்கம் என்பதே அவருக்கு வரவில்லையாம். இவ்விதமிருக்கையில் ஒரு நாள் அவருக்கு மூளை குழம்பிப் போய்விட்டது; பைத்தியம்பிடித்துவிட்டது. எந்த வஸ்துவைக் கண்டாலும் தூக்கித்தூர எறிய ஆரம்பித்தார். அதன் பயனாக அவர் பைத்திய ஆஸ்பத்திரியில் மூன்று மாதகாலம் சகவாசம் செய்தார். அதன் பிறகு பைத்தியம் தெளிந்துவிட்டது. ஒரு நாளைக்கு நான்குமுறை அவர் காப்பி சாப்பிடுவது வழக்கமன்றோ! அந்த வழக்கத்தை நிறுத்தியவுடன் பைத்தியம் பறந்தோடிவிட்டது.

சிலருக்குக் காப்பி சாப்பிடாவிட்டால் தலைவலி யுண்டாகும்! வேறு சிலருக்கு வாந்தியுண்டாகும். இவற்றிற்கெல்லாம் காரணம் மிதமிஞ்சிய காப்பிக்குடியேயாகும். நோயுள்ளவர் பலர் காப்பிசாப்பிடுவதை நிறுத்தியதால் சுகமடைந்தனர்.

# முருகனிடம் முறை

"மேருவல்லி"



ஓம் எனும் பொருளை உணர்ந்த ஒருவன்
ஆக்கும் தெய்வம் அவனே முருகன்
காக்கும் தெய்வம் கந்தன் முருகன்
யார்க்கும் தெய்வம் சரகத் தலைவன்
மாலின் மருகன் மயில்மேல் அழகன்
பார்வதி பாலன் பங்கயப்பாதன்
சீரலை வாயுறை செந்தமிழ்க் கடவுள்
ஆவினன் குடிவாழ் அமரர் பெருமான்
பழமுதிர் சோலைப் பைங்கிளிக் குரிசில்
குறிஞ்சிக் கிழவன் குன்றெலா முகந்தோன்
கீரன் பாடிய ஆரம் அணிந்தவன்
நானதைப்பாட நல மெலாம் நல்கினன்
முருகா என்பேன் முதல்வா என்பேன்
அருகா என்பேன் அத்தா என்பேன்
ஒரு நொடிப்போதும் உனைமறந்திலனே
திருவின் மருகா, தேவசேனபதி
உருநலம் உவமைக்கு ஒண்பொருள் நீயே
புருஷோத்தமனே புண்ணியத்தருவே
காமதேனுவே கதிரை வேலா
சிவன் நீ யென்பேன், சிவை நீ யென்பேன்
மால் நீ யென்பேன், மலர்மகள் என்பேன்
போகமும் தருவை, யோகமும் தருவை
சித்தியும் தருவை, முத்தியும் தருவை
சீரெலாம் தருவை, திருவெலாம் தருவை
வேண்டிநர் வேண்டியாங் கெய்தினர்
[வழிபட
ஆண்டாண்டுறைதலும் அறிந்தவாறே
யானதை யறிந்து அம்மையென்றோர்ந்து

தேனுகர் வண்டெனத் திரிந்திங்கிருந்தேன்
பான்மொழி வள்ளியின் பாதம் வணங்கு நின்
பாதமே கதியெனப் பரவினேன் பரமா
போரூர் முருகா புண்ணிய உருவா
கழுகாசல முறை கண்ணுதல் காதலா
தேவ அரசின் திருவை மணந்தவா
உன்னூர் அறியேன் உன்பேர் அறியேன்
என்னை நானறியேன், எனினும் ஐய
உன்னை நினைந்தே ஊமையின் கனவென்
காலை மாலை நாளு வேளையும்
அல்லும் பகலும் அன்பாய்த் தேடி
முருகா, முருகா, முருகா என்று [னேன்
பாடினேன், ஓடினேன், ஆடினேன், தேடி
இன்னும் காணேன், எங்குற்றாய் சொல்
என்னே என் மதி! எவ்வுலகும் நிறை
மன்னே நீயும் எங்கு அற்றாய் சொல்!
அருத உன்னை அருத அன்பால்
அணைந்தேன், அடைந்தேன், அஞ்சல்
அபயம் ஐயா, ஆறு முகவா, [என்றாய்
அபயம் தேவா, அலையில் கரும்பென்
அலைந்த என்னை அஞ்சல் என்றாய்
"அலர்தோர்க்களிக்கும்" அழகிதோ அப்பா
நாவும் உலர்ந்தேன் நடக்கவும் இல்லேன்
மூவா முதல்வா, முழுதளி முருகா
காவாய் என்னை இக்கணத்தினில் குகனே
குகனே காவாய் கோதெலாம் நீக்கி
இம்மை இன்பம் விழைந்தேன் எனினும்
இருமையும் அளிக்க என்மறுக்கின்றாய்



இம்மை தருவாய், மறுமையும் தருவாய்
இருமையும் தருவாய் குறமகள் கேள்வா
"மறுவில் கற்பின் வாணுதல் கணவா"
உறும் குறையிரந்தேன் உண்மைபுகன்றேன்
தருவதும் மறுப்பதும் தாயின் கடனே
சேயின் கடனோ செவ்விதழ் கூப்பி
ஆயென்றாற்றி அழுதலே அலாது
வேறு முளதோ வெள்ளி வெற்பா,
அழுத என்னை ஆதரிப்பாயே
மண்ணும் நீயே மணித்தரும் நீயே
பெண்ணும் நீயே பிலமும் நீயே
எண்ணும் நீயே எழுத்தும் நீயே
கண்ணும் நீயே கருத்தும் நீயே

வானமும் நீயே வான்சுடர் நீயே
காற்றும் நீயே காவிரி நீயே
பூதமும் நீயே பொறியும் நீயே
நாதமும் நீயே நாதனும் நீயே
அங்கியங் கடவுள் ஆனவன் நீயே
உயிரெலாம் ஆதி உயர்ந்தோன் நீயே
வேதமும் நீயே வேதியும் நீயே
ஆதலால் முருகா அஞ்சேல் என்றாய்
முருகா முருகா முருகா முருகா
பொன்மலை யுகந்த "பொலம் பூண் சேய்"
என்வினை தீர்த்து எனக்களிப்பாயே
நன்வினை நாடி உன் நாமம்பரவினேன்
உன் விளையாட்டில் உவப்பிப்பாயே.

## முருகா

வருவாய் மயில் மீதினிலே
வடிவே லுடனே வருவாய்
தருவாய் நலமுந் தகவும் புகழுந்
தவமுந் திறமுந் தனமுங் கனமும்
அமரா வதிவாழ் வுறவே
அருள்வாய்! சரணம், சரணம்
குமரா பிணியா வையுமே சிதறக்
குமுறும் சுடர்வேலவனே சரணம்!

—பாரதி.

# ஸ்ரீமதி பிலோமினா தம்புசெட்டி

## (இந்திய பிடில் ராணி)

**“கண்ணன்”**

சங்கீதம் ஸ்திரீகளுக்கு இயற்கையாகப் பழகக்கூடிய ஒரு உன்னத கலை. நம் நாடு அக்கலைக்கு ஒரு ஜீவஸ்தானம். அந்த ஜீவஸ்தானத்தின் பிரதான நகரம் மைசூர் என்று சொல்லலாம். அந்நாட்டு மன்னர் பல கலைகளையும் போற்றி வளர்த்து வருகிறார். அவரது நெருங்கிய பந்துக்களும் அவரைப்போலவே சங்கீதத்தில் பிரேமை கொண்டவர்கள். எனவே அந்தப் புனித பூமியில், ‘‘இந்திய பிடில் ராணி’’ என்று உயர்தர ஆங்கிலப் பத்திரிகையாகிய ‘பஞ்’ (Punch) புகழ்ந்து கூறிய ஸ்ரீமதி பிலோமினா தம்பு செட்டி பிறந்தது பொருத்தமே. ஸ்ரீமதி பிலோமினா சங்கீத உலகில் ஒரு ஜோதியாய் பிரகாசித்து வருகிறாள். பாரத தேசத்தின் புகழை மேல்நாடுகள் கண்டு அதிசயிக்கும்படி செய்த பல இந்திய சிரோரத்தினங்களில் பிலோமினா ஒரு மாணிக்கம். அவரை ஒரு தெய்வீகக் கலைத்தேவி என்றே கூறலாம்.

### குடும்பம்

தம்புச் செட்டி குடும்பத்தார் மைசூர் சமஸ்தானத்தில் மிகப்பிரபல்யமானவர்கள். பிலோமினாவின் பாட்டனார் ராஜ தர்மப்ரவீண டி. ஆர். ஏ. தம்புச் செட்டி, ஸி.ஐ.இ., மைசூர் சமஸ்தான பிரதம ஹைகோர்ட் நீதிபதியாக பல வருஷங்களிருந்து பின்னர் திவானாகவும் வேலை பார்த்து வந்தார். அவரும், அவரது மனைவியாரும் நற்குண நற்செய்கைகளில் சிறந்து விளங்கினர். பிலோமினாவின் தந்தை ராஜஸபாபூஷண டி. தம்பு செட்டி, ஓ.பி.இ., இப்பொழுது மைசூர் மஹாராஜாவின் அந்தரங்கக் காரியதரிசியாக இருந்து வருகிறார். இவர் தன் குமாரி பிலோமினாவின் முன்னேற்றத்தைக் கருதி அவருக்கு இயற்கையான விருப்பங்களில் ஈடுபட்டு பயிற்சி எடுத்துக் கொள்ள சுதந்திரமும், இதர தேவைகளையும் மனமுவந்து அளித்து வந்தார். தன் புதல்வியின் விருப்பங்களே தனது விருப்பமாக எண்ணினார். இவரது மனைவியும் தன் பர்த்தாவைப்போலவே மகள் எந்த வழியில் சென்றால் தேர்ச்சியடைவாளோ அதேமார்க்கத்தில் செல்ல அனுமதி தந்தாள். இருவரும் மிகுந்த தெய்வபக்தியும், ஏழைகள்பால் அன்பும் மிக்கவர். மகளுக்கு தங்கள் இஷ்ட தேவதையாகிய பிலோமினாவின் பெயரையே சூட்டினார்கள்.

### சங்கீதப் பயிற்சி

பிலோமினா தன் தந்தையின் பங்களாவான “ரக்பிலாட்ஜ்” என்ற மாளிகையில் பெங்களூரில் பிறந்தார். குழந்தைப் பருவத்திலேயே குமாரி பிலோமினா சங்கீதத்தில் மிகுந்த ஆர்வமும் தேர்ச்சியும் காட்டினாள். ஆகையால் அவரது பெற்றோரும் குழந்தைக்கு முதலில் சிறிது பொதுக் கல்வி அளித்துவிட்டு பிடில் கற்றுக்



ஸ்ரீமதி பிலோமினா தம்புசெட்டி.

கொள்வதற்காக மைசூர் குட் ஷெப்பர்ட் கான்வென்ட் பள்ளிக்கூடத்தில் சேர்த்தார்கள். இவருக்கு முதல் முதல் பிடில் வாத்தியத்தில் சிட்சை செய்து வைத்தவர் சிறந்த சங்கீத நிபுணராகிய சகோதரி மவுரிஸ் என்பவரே. அப்பொழுது பிலோமினாவுக்கு வயது ஆறு. அவ்வளவு குழந்தையாயிருந்தபோதிலும் வாசிப்பதில் மட்டும் ஆர்வம் காட்டவில்லை; சிறு சிறு விவரங்களையும், நுணுக்கங்களையும் அப்பொழுதே தான் கற்றுத் தேரவேண்டுமென்று ஆசைப்பட்டார். இதைக்கண்டு சகோதரி மவுரிஸும் மற்றவர்களும் ஆச்சர்யப்பட்டார்கள்.

பிலோமினா காட்டி வந்த உன்னத ஞானத்தைக்கண்டு அவரது பெற்றோர்கள் அவளை ட்ரினிடி காலேஜ் (Trinity College) சங்கீதப் பரீட்சைக்கு அனுப்பவேண்டுமென்று நினைத்து அப்படியே பயிற்சி அளித்தார்கள். பிலோமினா சிறந்த வித்வானாகிய டாக்டர் மிஸ்டோஸ்கி என்பவரால் பரீட்சை செய்யப்பட்டார். சிறுமி பிலோமினாவின் திறமையைக்கண்டு அவர் இவள் ஒரு "இயற்கை சங்கீத வாணி" என்று கூறினார்.

பெங்களூர் கான்வென்ட் பள்ளிக்கூடத்தில் பயிற்சி முடிந்தபின் பிலோமினா மேற்படிப்புக்காக கல்கத்தாவுக்கு அனுப்பப் பெற்றார். அங்கு கல்கத்தா சங்கீதக் கலாசாலையின் ஆசிரியராகிய ப்ரொபஸர் சாந்த்ரே என்பவரிடம் பயிற்சி பெற்று வந்தார். அவ்வளவு இளம்வயதில் தாய் தந்தையரை விட்டுப் பிரிந்து ஒரு தூரமான நகரில் புதிய மனிதர்கள் மத்தியில் இருப்பது முதலில் சற்று சங்கடமாக இருந்த போதிலும் நாளாவட்டத்தில் சரியாய்ப் போய்விட்டது. சீக்கிரம் ஆசிரியரும் இதர மாணவர்களும் இவளை அதிகமாக விரும்பினர். இவளது திறமையைக் கண்டு சந்தோஷமும் ஆச்சர்யமும் அடைந்தனர். லண்டன் ட்ரினிடி காலேஜ் பரீட்சைகளில் மிகவும் கடினமான எப்.ஸி.டி.எல். என்ற பட்டப் பரீட்சைக்கு உட்கார்ந்தார். இத்தடவையும் அவருக்கு பரீட்சகராக டாக்டர் மிஸ்டோஸ்கியே வந்து சேர்ந்தார். அவர் ரொம்பவும் கடுமையானவர் என்று எல்லோரும் நினைத்தனர். ஆனால் சிறுமி பிலோமினாவுக்குப் பரீட்சை 'காப்ரா' எப்பொழுதுமே கிடையாது. தன்னம்பிக்கையும், தைர்யமும் மிகுந்தவர் பிலோமினா. எனவே மறுமுறையும் டாக்டரின் நன்மதிப்பைப் பெற்றார். பரீட்சையில் டாக்டர் 100-க்கு 98 மார்க்குகள் போட்டார். ஆனால் அவர் "பிலோமினாவுக்கு நூற்றுக்கு நூறும் கொடுக்கலாம், அதற்கு மேலும் கொடுக்கலாம்" என்று ஒப்புக்கொண்டார். இந்தக் காலங்களில் பிலோமினா பிடில் அப்பியாசம் தவிரப் பொதுக் கல்வியையும் அபிவிருத்தி செய்துகொண்டு வந்தார்.

1929ம் வருஷம் பிலோமினாவின் வாழ்க்கையில் முக்கியமானது. அதற்குள் பிலோமினா இந்தியாவில் நல்ல பயிற்சி அடைந்தாய் விட்டது. இனி என்ன செய்வது என்ற பிரச்சினை எழுந்தது. வாத்தியத்தில் உலகப்பிரசித்தி பெற்ற கல்லூரி பாரிஸ் நகரத்தில் தானிருக்கிறது. தங்கள் அருமைக் குமாரியை அங்கு அனுப்பி அவள் பூரண ஞானம் அடையச் செய்யவேண்டும் என்று தாய் தந்தையர்

ஆவலுற்றார்கள். ஆனால் அவ்விளங் குமாரியை வெகு தூரதேசத்தில் விட்டுப் பிரிந்திருக்க வேண்டுமே யென்று மனம் நொந்தனர், தங்கள் கவலை குமாரியின் வளர்ச்சிக்கும், சிறப்புக்கும் இடைஞ்சலாக இருக்கக்கூடாது என்று முடிவு செய்தனர். அப்படியே தனது பதினாறாவது வயதில் பிலோமினா பாரிசுக்கு அனுப்பப்பட்டார்.

அங்கு உலகப்பிரசித்தி பெற்ற சங்கீதக் கலாமந்திரமாகிய பாரிஸ் கன்சர்வெட்டரில் (Paris Conservatoire) சேர்ந்தார். இதில் சேருவது என்பது எளிதான காரியமல்ல. அதில் சேர்த்துக் கொள்ளப்பட்ட முதல் இந்திய ஸ்திரீ பிலோமினா தான். அதில் சேருவதற்கு முன் ஒரு பரீட்சை வைக்கப்பட்டது. மொத்தம் பத்து ஸ்தானங்களுக்கு உலகின் பல பாகங்களிலிருந்தும் 150 நிபுணர்கள் போட்டிப் பரீட்சையில் கலந்து கொண்டார்கள். ஆனாலும் தேர்ந்து எடுக்கப்பட்ட பதின்மரில் பிலமினா ஒருவளாயிருந்தாள். அதுமட்டுமல்ல அவளே வயதிலும் குறைந்தவள்.

தன் அப்பியாசத்தில் அக்கரையுடன் ஸ்ரீமதி பிலோமினா பயின்றுவந்தார். அங்கு இருப்பதே அவருக்கு ஒருவித உள்ளக் கிளர்ச்சியையும் உலகப்போக்கையும் உணரும்படிசெய்தது. நகரின் பிரதான ஸ்தலங்களையும் சரித்திர சம்பந்தமான கட்டிடங்களையும் பார்வையிட்டு பெருமூச்சுவிடுவார். தன் கத்தோலிக் மதத்தின்மீது அவருக்கிருந்த பற்றுதல் மென்மேலும் அதிகரித்தது. பல வல்லவர்களின் நூல்களைக் கற்றுத் தெளிந்தார். பாரிஸில் தன்பயிற்சியை முடித்துக்கொண்டு பிலமினா மேலும் ஞானவிருத்தியின்பொருட்டு உலகப்பிரசித்தி பெற்ற ருமேனிய பிடில் உபாத்தியாயரான ஈனஸோ என்பவரிடம் பாடம் கேட்டார். ஈனஸோ பிலமினா நிச்சயம் சங்கீத உலகத்தில் பிரகாசிப்பாள் என்று கூறினார். அவர் சொன்னது வெகு சீக்கிரத்திலேயே உண்மையாயிற்று.

## சீமையில் பிரபல்யம்.

1934ம் வருஷம் ஏப்ரல்மாதம் லண்டன் ட்ரினிடிகாலேஜ் சங்கீதஹாலில் ஒரு கச்சேரி ஸ்ரீமதி பிலமினா நடத்தினார். அதிலேயே அவர்புகழ் எங்கும் பரவ ஆரம்பித்தது. கடினமான பாடல்களையும் சிறந்தமுறையில் யாதொரு ஆயாசமுமில்லாமல் வாசித்து சபையோரை இன்புறச் செய்தார். அதேவருஷம் ஸ்ரீமதி பிலமினாவையும், அவரது தாயையும் இந்தியக் காரியதரிசியாய் இருந்த சர் ஸேம்வேல் ஹோரின் மனைவி மாக்ஷிமை தங்கிய மன்னர்பிரானுக்கும், மகா ராணியாருக்கும் பக்கிங்ஹாம் அரண்மனையில் அறிமுகப்படுத்திவைத்தார். இங்கு குறிப்பிடத்தக்க விஷயம் ஒன்றுளது. பிலமினா எவ்வளவோ கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியபோதிலும், மேல்நாட்டு நாகரிக பழக்க வழக்கங்களைக் கண்டிருந்தபோதிலும் மன்னர் பிரானிடம் சென்றபோது தன் தேசிய உடையிலேயே சென்றது மிகவும் போற்றத்தக்கது. அங்கு அவர் நடந்து கொண்ட விதமும் தன் தேசத்துக்கு கௌரவமளிக்கும் முறையாகவே இருந்தது. மன்னர்பிரானுக்கு இந்திய ஸ்திரீகளிடத்திலுள்ள மதிப்பு அதிகரிக்கும்விதத்தில் ஸ்ரீமதி பிலமினா தன் சுயமரி





யாதையையும், தேச கௌரவத்தையும் நிலை நாட்டினார்.

1935ம் வருஷம் ஏப்ரல் மாதம் 11ந் தேதி ஸ்ரீமதி பிலமினாவின் வாழ்க்கையில் ஒருமுக்கிய தினமாகும். அது ஜுபிலி விழாவருஷம். லண்டனில் உலகின் பல பாகங்களிலிருந்தும் பிரபலஸ்தர்கள் குழுமியிருக்கின்றனர். மாஜி வைஸ்ராய் லார்ட்ரீடிங், சென்னைகவர்னர் லார்ட் கோஷன் முதலிய பெரியோர்கள் அடங்கிய ஒருசபையில் பிலமினா தன் பிடில் திறமையைக்காட்டி வாசித்துப்பாடினாள். அப்பொழுது அவருக்கு வயது 22. அச்சபைக்கு அக்கிராசனராக லார்ட்ரீடிங் அமர்ந்திருந்தார். மேல்நாட்டுப் பிரமுகர்களும், சங்கீத வித்வான்களும் நிறைந்திருந்த அந்தப் பெரிய சபையில் பிலமினா யாதொரு தயக்கமும், அச்சமுமின்றிப் பிரவேசித்துத் தனது கருவியில் அழகான பாக்களை யாவர்மனமும் குளிரும்படி வாசித்துப் பரவசமடையச் செய்தாள். சபையோர் யாவரும் பிலமினாவைப் புகழ்ந்து கூறினார்கள். பல பிரபல பத்திரிகைகளும் இவ்விளஞ்சூரியனின் பிரகாசத்தைப்போற்றி புகழ்ந்தனர். பாரததேசம் மேல்நாட்டுக் கலையையும் கற்று, அந்நாட்டினரே திகைத்து நிற்கும் வண்ணம் அதைக் கையாளமுடியும் என்ற உண்மையை மங்கை பிலமினா லண்டனில் யாவருமறியச் செய்தாள்.

## தாய்நாடு திரும்பினார்

தன் ஜயக்கொடியை லண்டன்மாநகரில் நாட்டிய பிலமினா சீக்கிரம் தன் தாய்நாட்டுக்குத் திரும்ப வேண்டுமென்று ஆசை கொண்டார். தன் நாட்டுக்குவந்து தனது மஹாராஜாவின் முன்னர் தன் வாசிப்பைக் காட்டி தன்னுடைய ராஜவிஸ்வாசத்தைத் தெரிவித்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் இங்கிலாந்து தேசத்தைவிட்டு புறப்பட்டுத்தன் அன்னையுடன் 1935ம் வருஷம் செப்டம்பர் மாதம் 5ல் பம்பாயில் வந்திறங்கினார். இதற்குள்ளாகவே இவரது புகழ் இந்தியாவெங்கும் பரவியிருந்தது. அவரது வரவை ஆவலுடன் எதிர்பார்த்து பம்பாய் துறைமுகத்தில் பிரபல சீமான்களும், சீமாட்டிகளும் புஷ்ப ஹாரங்களுடன் காத்திருந்தனர். மைசூர் சமஸ்தானமக்கள் பலரும்கூடி பிலமினாவுக்கு தேசிய வரவேற்பு அளித்தனர். ஒருவிருந்தும் நடந்தது. பல பத்திரிகைநிருபர்களும் அவரைப்பேட்டி கண்டனர். மேல்நாட்டு சங்கீதத்துக்கும், கீழ்த்திசை சங்கீதத்துக்கும் என்னவித்யாசம், எது உயர்ந்ததுபோன்ற கேள்விகளை பத்திரிகா நிருபர்கள் போட்டார்கள். ஆனால் ஸ்ரீமதி பிலமினா சங்கீதத்துக்கு தேசவரையரை கிடையாதுஎன்றும், ஏற்றத்தாழ்வும் இல்லையென்றும், இருவித சங்கீதங்களும் மனதுக்கின்பமளிப்பவைகளே என்றும் கூறினார். சங்கீதக்கலை உலகெங்கும் வியாபித்து தேசவரையரைகளை மீறியது என்றும் அவர் நினைக்கிறார். இந்தப் புகழ் அதிகமாகவே அவர் ரொம்பவும் கூச்சப்பட்டார். ஆடம்பரமான வரவேற்புகளை அவர் அதிகமாக விரும்புவதில்லை.

இந்தியாவில் முதல்முதலாக தன் மஹாராஜா முன் கச்சேரி நடத்தி அவர் ஆசீர்வாதத்தைப் பெற்றபின்தான் வேறு இடங்களில் தன் வித்தையை காண்பிப்பேன் என்று அவர் கூறியதிலிருந்து

அவரது ராஜவிஸ்வாசம் நன்ருய் தெரிகிறது.

பம்பாயிலிருந்து மைசூருக்கு வந்த பொழுது மைசூர்மக்கள் பூராவாகவும் தங்கள் தங்கள் இல்லங்களில் ஏதோ விசேஷம்போல் கருதி மகிழ்ந்தார்கள். 1935ம் வருஷம் அக்டோபர் மாதம் ஜஹன் மோஹினி அரண்மனையில் மஹாராஜா, யுவராஜா, திவான் சர் மீர்ஸா இஸ்மேல், சர். ஸி. வி. ராமன், சர். கே. பி. புட்டண்ணச் செட்டி, திரு. சிந்தாமணி முதலியவர்கள் முன்னிலையில் பிலமிஞ தன் இனிய கானத்தைப் பொழிந்து எல்லோரையும் மகிழ்வித்து மனம்பூரிக்கச் செய்தார். 1936ம் ஆண்டு டிசம்பர் 22ந் தேதி ஸெயின்ட் பிலமிஞ மாதாகோவில் தர்மநிதிக்காக மைசூர் மகாராஜாவின் ஆதரவிலும் முன்னிலையிலும் இன்னொரு கச்சேரி நடத்தினர். சென்னைநகரவாசிகளும் இந்த இந்திய ரத்தினத்தின் வாத்திய வன்மையையும், சாரீர இனிமையையும் கேட்கும் சந்தர்ப்பம் சென்ற மார்ச்சு மாதம் 9ந் தேதி ஏற்பட்டது. அது சென்னை கவர்னர் லார்ட் எர்ஸ்கின், லேடி எர்ஸ்கின் முன்னிலையிலும் ஆதரவிலும் நடைபெற்றது. நகரத்தின் பிரபல உத்தியோகஸ்தர்கள், உத்தியோகப்பற்றற்றவர்கள், வித்வான்கள் எல்லோரும் பிடில் வாத்தியத்தின் சிறப்பையும், ஸ்ரீமதி பிலமிஞவின் தேர்ச்சியையும் கண்டு பிரமிப்படைந்தனர். கந்தர்வஞானம் ஒரு கந்தர்வ ஸ்திரீயே வந்து சென்னை நகரவாசிகளுக்கு அமுதம்போல் பொழிந்தது போன்றிருந்தது.

## விவாகம்.

சென்ற ஆகஸ்ட்மாதம் திருமதி பிலமிஞ உற்ற கணவனை தேர்ந்தெடுத்து மணம் செய்துகொண்டார். அவரது பந்துக்களில் ஒருவரையே பிலமிஞ மணந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. விவாஹத்தின்போது திவான் ஒரு அரிய பிரசங்கம் செய்தார். அதற்கு மறுமொழி கூறுங்கால் திருமதியின் கணவர் தன் மனைவியின் கலைவளர்ச்சிக்கும் இதர அபிலாஷைகளுக்கும் தான் எப்பொழுதும் ஆதரவளிப்பதாக உறுதி கூறியுள்ளார். அவரும் சிறந்த அறிவாளி, பரந்தநோக்கமுடையவர். இவ்விரு தம்பதிகளும் தீர்க்காயுளுடனும், திடகாத்திரத்துடனும், சகல சம்பத்துகளுடனும் நீடூழி காலம் வாழ்ந்துவர வேண்டுமென்று அன்னை பராசக்தியை யான் பிரார்த்திக்கிறேன். இந்த உதய சூரியனின் ஒளி உலகெங்கும் பரவுவதாகுக.





பம்பாபதி தேவாலயத்தின் கோபுரம்

# ஹம்பி – விஜயநகரம்

திரு. எஸ். ஆர். வெங்கோபராவ்

பல வருடங்களுக்குமுன் ஒரு பெரிய ராஜ்யமாய் விளங்கிய விஜயநகரம் இன்று நம்முன் ஒருவர் தனிமையாய்ப் பார்க்கமுடியாத ஓர் பாழடைந்த நகரமாய் விளங்குகிறது. இவ்விஜயநகரத்திற்கு அருகாமையிலுள்ள துங்கபத்ரா நதியும் அதற்கடுத்துள்ள பலவேறு தேவாலயங்களும் சிற்ப வேலைகளில் மட்டுமன்றி மற்றெல்லா விஷயங்களிலும் ஒன்றுக்கொன்று சளையாததாயிருத்தலை நோக்குங்கால் பண்டைக்காலத்தில் நம் நாட்டுமன்னர்கள் தெய்வ வழிபாட்டிற்கு யாதொரு குறையும் நேராவண்ணம் செங்கோலோச்சிவந்தார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறதன்றோ!

விஜயநகரத்தை ஆண்டு வந்த மன்னருள் திலகனாய், ராஜீய விவகாரங்களில் மிகவும் தேர்ச்சி பெற்றவனாய், மக்களால் என்று மழியாத புகழ்மிக்கவனும் கிருஷ்ண தேவராயன் தான் காதலித்த நாகலா தேவி என்னும் கற்பிலும் நுண்ணறிவிலும் சிறந்த ஓர் பெண்மணியின் ஞாபகார்த்தமாகக் கட்டுவித்த நகரமே இப்பொழுது ஹொஸ்பேட் என்னுமிடமாகும். முன்பு இந்நகரம் கிருஷ்ணதேவராயருக்கு வாசஸ்தலமாய் நாகலாபூர் என்று வழங்கப்பட்டு வந்தது. ஹொஸ்பட்டிலிருந்து ஹம்பி சுமார் 7 மைல் தூரத்திலுள்ளது. இப்பாதை மிகவும் அகலமாயிருப்பதோடு இருபுறங்களிலும் நிழலைத் தரக்கூடிய பெரிய மரங்களுடன் விளங்குகிறது. அப்பாதைக்கு அருகில் பலவேறு கோயில்களும் இருக்கின்றன.

சரித்திர ஆராய்ச்சியின் மூலமாய் விஜயநகரம் முன் சுக்ரீவன் என்னும் வானர அரசனால் ஆளப்பட்டு பம்பை என்னும் பெயருடையதாய் விளங்கியது. ஸ்ரீராமபிரான் சீதாதேவியாரைத் தேடிச் செல்லும் மார்க்கத்தில் சுக்ரீவனையும் அவன் மந்திரியான ஸ்ரீமத் ஆஞ்சனேயனையும் இங்கு சந்தித்து ஆஞ்சனேயன் உதவியால் சீதையை மீட்டுவந்தாரென்பது இராமாயணம். அதற்கு அத்தாட்சியாக மதங்கபர்வதம் என்னும் ஒரு குன்று பம்பாபதி கோயிலினருகே உள்ளது. இங்கு மதங்கரிஷி என்பவர் வசித்துவந்தார். பம்பா தீர்த்தம் என்னும் ஓரழகிய குளம் துங்கையின் வடக்குக் கரையருகேயுள்ளது. ஸ்ரீசீதாதேவி தனது நகைகளை விட்டுச் சென்ற குறிகள் இன்றும் நதிக்கரையில் யாத்திரிகர்கள் காணலாம்.

1310-ம் வருஷம் அல்லாவுதீன் கில்ஜியின் சேனைத்தலைவனான மலிக்காபூர் என்பவன் தக்கணத்தின் மீது படை எடுத்து வாரங்கல் என்னும் நகரைக் கைப்பற்றவே தென்னிந்திய மன்னர்கள் மிகவும் பயந்து இருந்தவிடம் தெரியாமல் சிதறுண்டனர். ஆனால் மலிகாப்பூரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். கி. பி. 1336-ம் வருஷம் ஹுக்க, புக்கா என்னும் இரு இந்துக்கள் விஜயநகர ராஜ்யத்தை நிலை நாட்டினர். இவர்களுக்கு மிகவும் உதவி புரிந்தவர்கள் வித்யாரண்யா என்னும் சிருங்கேரி மடாதிபதியாதலால் அவரே முதல் மந்திரியாக நியமிக்கப்பட்டார்.

விஜயநகரத்தின் பெருமைக்குக் காரணமானவர் கிருஷ்ண தேவராயராவர். அவர் காலத்தில் அந்நகரமுழுவதும் பல்

வேறு கோயில்களை யுடையதாய் விளங்கியது. அக்கோயில்கள் பாழடைந்திருப்பதை நாம் இன்னும் காணலாம். விஜயநகர மன்னரின் முக்கிய தெய்வம் விருபாக்ஷக் கடவுளாகும். ஆயினும் அக்காலத்து மன்னர்களும் ஜாதிமத வித்தியாசமின்றி செங்கோல் செலுத்தினார்கள் என்பது மிகையாகாது. பம்பாபதி கோயிலினருகிலேயே பல ஜைன கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டது ஓர் அத்தாட்சியாயிருக்கிறது.

விஜயநகரக் கோயில்களில் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கும் கோயில் பம்பாபதி கோயில்தான். இன்னும் அக்கோயிலில் பூஜை புனஸ்காரங்கள் நடைபெறுகின்றன. மற்ற கோயில்கள் முன் காலத்தில் நல்திசையிலிருந்தன. துங்கா நதிக்கரையில் ஸ்நானம் செய்து பம்பாபதீஸ்வரரைத் தரிசிப்பவர்கள் புண்ணியம் சொல்ல முடியாது. விட்டலதேவாலயம், ஸ்ரீநரசிம்ம விக்ரகத்தின் உருவம் இவைகளில் சில வற்றை நாம் நோக்குங்கால் எந்த இந்தியனும் பெருமை யடையும்படி செய்கின்றதாயினும் இன்று அவை யிருப்பதை கவனிக்க நம்நாடு இப்படி பலவேறு ஜனங்களால் நிர்மூலமாக்கப்பட்டிருப்பது வருத்தத்தையும் உண்டாக்குகிறது.

விட்டலாலயத்தில் ஒருகல் ரதம் மிகவும் பெரியதாயிருக்கிறது. அச்சுதராயன் கோயில், ராமாது கோயில்கள் முதலியன அங்கங்கே அமைந்திருக்கின்றன. சுருங்கச் சொல்லின் விஜயநகரத்திலிருக்கும் கோயில்கள் பலவாகும்.

ஹம்பிக்குச் செல்பவர்கள் கமலாபுரம் மார்க்கமாய் செல்ல வேண்டும். கமலாபுரத்திலிருந்து ஹம்பியின் பாழடைந்த கோயில்கள் முதலியன மிகவும் நன்றாய்த் தென்படுகின்றன.

பரமலோபியாய் இருந்த புரந்தரதாஸ் என்றும் எட்டற்கரிதான முக்தியை யடையச் சாதகமாய் ஸ்ரீவியாசராய ஸ்வாமியிடம் குரு உபதேசம் செய்துக் கொண்டயிடம் விஜயநகரமே யாகும்.

விஜயநகருக்கருகே நவ பிருந்தாவனம் என்னும் சிறந்ததோர் பிருந்தாவனம் துங்கையின் மத்தியில் அமைந்துள்ளது.

விஜயநகரம் செல்பவர்கள் போஜன விஷயத்தில் மாத்திரம் வெகு ஜாக்கிரதையாக யிருத்தலவசியம். நல்ல உயர்ந்த ஆகாரம் சாப்பிட்டாலன்றி அங்கு சென்று சுற்றி வருவது அசாத்தியமாதலால் ஹொஸ்பெட்டில் நல்ல ஓட்டலிலோ மிகவும் தெரிந்தவர்கள் வீட்டிலோ சாப்பிடுதல் நலம்.

கமலாபுரத்திற்கருகிலுள்ள ஜனங்கள் தங்குமிடத்திலிருந்து வடக்கே செல்வோமாகில் அரசரது அரண்மனையும், அதற்கு அடுத்தாற்போல் கல்சிம்மாசனம், குளிக்குமிடங்கள், ராஜசபை, ராமாது கோயில், காப்பாளர்கள் வசித்தயிடங்கள், யானை கட்டம் முதலியன அமைந்துள்ளன.

இவைகளுக்கருகில் பூமிக்குள்ளேயே சுரங்கம் போன்ற வழியில் ஒரு கோயில் உள்ளது. இதற்கு வடக்கே சென்றால் வீரபத்ரஸ்வாமி கோயில், இரண்டு கணேசர் கோயில்கள், ஜைனகோயில்கள், பிரசித்திபெற்ற பம்பாபதி கோயில் உள்ளன.

பம்பாபதி கோயிலின் கிழக்கே பெரிய கடைத் தெருவு விசாலமாய் இருக்கிறது. அதைத் தாண்டிச் சென்றால் நதியினருகே கோதண்டராமர் தேவாலயம், வராஹஸ்வாமி தேவாலயம், அனந்த சயன தேவாலயம், அச்சுதராயன்குடி முதலியன ஒருங்கே அமைந்திருக்கின்றன. சுக்ரீவன் வசித்து வந்ததாகக் கருதப்படும் குகையும் நதியினருகே யிருக்கிறது. ஸ்ரீ விட்டல ஸ்வாமி கோயில் துங்கையினருகில் யிருக்கிறது. சிறிது தூரம் கிழக்கே சென்றால் வடக்கே ஒரு பாதை நைஜாம் ராஜ்யத்தின் தென்பாகமான யானெகுந்திக்குச் செல்கின்றது.



**சமையல்**

# சைனாக்ராஸ் ஹல்வா முதலியன

“ ஸரோஜா ”

இந்த ஹல்வா ஜவ்வரிசி ஹல்வாமாதிரித்தான் இருக்கும். உடம்புக்கு ரொம்பவும் குளுமை. சைனாக்ராஸ் (China grass) பலசரக்குக் கடைகளில் அவசியம் கிடைக்கும். நோயாளிகளுக்கு இந்த புல்லின் பாயசம்கூடச் செய்து ரவா கஞ்சிக்குப் பதிலாகக் கொடுப்பதுண்டு. ஹல்வா தயாரிப்பதற்கு அரை மணி நேரத்திற்கு முந்தி ஒரு தோலா சைனா புல்லை ஒரு கிண்ணம் அல்லது ஒன்றரை கிண்ணம் பாலில் ஊறவைத்து வைக்கவேண்டும். பின்பு அடுப்பில் கலாய் பூசின வாயகலப் பாத்திரத்தில் வைத்து கிளற வேண்டும். கொஞ்சம் குங்குமப் பூவும், ஏலப்பொடியும் வேண்டிய அஸ்கா சர்க்கரையும் போட்டு, வேண்டுமானால் கொஞ்சம் வெண்ணை காய்ச்சின நெய்யும் விட்டு கிளறிக்கொண்டே வந்தால், பளபளவென்று ஜவ்வரிசி மாதிரி கண்ணாடியாட்டமா வெந்து கட்டியானதும், நெய் தடவிய தட்டில் கொட்டி, பில்லைகளாகக் கீறி, ஆறினபின்பு எடுத்து உபயோகிக்கவும்.

## ரவாகோழாவடை

சிலர் இந்த பக்ஷணத்தை கோணவடை என்றும் அழைக்கிறார்கள். சிலர் கோழாவடை என்றும் சொல்வதுண்டு. ரவா கோழாவடை கொழமா கோழாவடையைவிடத் தின்பதற்கு மணமாகவும், ருசியாகவும் இருக்கும். இதைத் தயாரிப்பதற்கு பேணி ரவைதான் நலம். ரவையை முதன் முதல் பாணலியில் கொட்டி நெய் விட்டு “கம்” என்று வாசனை வரும்மட்டிலும் சுடவைத்து இரக்கிக்கொள்ளவேண்டும். பின்பு ஒரு சிமிட்டா சோடா, எலுமிச்சம்பழரசம், உப்பு பொடி, பச்சைமிளகாய், கொத்தமல்லித்தழையை மெல்லியதாக அரிந்தாவது, அல்லது சட்டிணிபோல் வெழுமனாக அரைத்தாவது அதையும், நெய்விழுது கொஞ்சம், எல்லாவற்றையும் அந்த ரவையில் கலந்து கொஞ்சம் பெருங்காய ஜலமும் சேர்த்து நன்றாக பிசைய வேண்டும். பிசைந்த மொத்தையை கொஞ்சம் இடித்தெடுத்து வைத்துக்கொண்டு, சுண்டுவிரல் பெருமனில் கோழாவடைகளாக திரிக்கவேண்டும். பின் நெய்யில் போட்டு இரண்டு மூன்று தடவைகள் திருப்பி கொடுத்து கோழாவடைகள் நன்றாக வெந்து பொன்னிறத்திற்கு திரும்பி, கலகலவென்றானதும், பாணலியிலிருந்து எடுத்துவிடவேண்டும். ஒருவிசை சாப்பிட்டவர்கள் இதை விரும்பாமலிருக்க மாட்டார்கள் என்றே சொல்லலாம்.

## வெஜிடபிள் புலவு

ஹோட்டல்களில் ‘வெஜிடபிள் புலவு’ என்று ஒரு தினுசு பலகாரம் எல்லோரும் விரும்பி வாங்கிச் சாப்பிடுவது இப்பொழுது நாகரிகமாக இருந்து வருகிறது. ‘மட்டன் புலவு’ என்று ஒருவகை உணவை மாமிசம் அருந்துவோர் சாப்

பிடுகிறார்கள். இந்த 'வெஜிடபிள் புலவில்' மாமிசத்துக்குப் பதிலாக மரக்கறி பதார்த்தங்கள் கலந்து தயார் செய்கிறார்கள். இதற்கு முதலில் கீழ்கண்ட சாமான்களை எடுத்துக் கொள்ள வேண்டும் :—இரண்டு டீகப் நிறைய புலவு அரிசி, 3 டீகப் நெய், 2 டேபிள்ஸ்பூன் தனியா, ஒரு அங்குல அளவு மஞ்சள், முதல்தரமான பெரிய ஏலக்காய்கள் 10, நாலு பெரிய வெங்காயம், சிகாமூலம் (Turnip) ஒன்று, காரட்கிழங்கு 1, நூல்கோல் 1, ஒரு டீஸ்பூன் உப்பு.

புலவு அரிசியை சுத்த ஜலம்விட்டு நன்றாகக் களையவேண்டும். களைந்தபின் நீரை அடியோடு வடித்து புலவரிசியை ஒரு தூய துணியை விரித்து அதில் உலரப்போட வேண்டியது. டர்னிப், காரட், நூல்கோல் இவற்றை சிறு சிறு துண்டங்களாக நறுக்கி 6 டீகப் ஜலம் நிறைந்த பாத்திரத்தில் போட்டு அதை மூடி அடுப்பில் வைத்து ஒரே தணலாக எரியவிட வேண்டியது. சுமார் ஒரு மணிநேரம் வெந்தால் தான் காய்கறிகள் பதமாக இருக்கும். அவைகள் கொதிக்கும்போது போதுமான அளவு உப்பைப்போடு. பதமாக பதார்த்தங்கள் வெந்தபின் அடுப்பிலிருந்து இறக்கி வடிகட்டி அந்தண்ணீரை எடுத்துவைத்துக்கொள்.

தனியாவையும், மஞ்சளையும் நேர்காக அரைத்துக்கொள். வெங்காயத்தை உரித்துத் துண்டம் துண்டமாக நறுக்கிக்கொள். நறுக்கப்பட்ட வெங்காயத்தில் பாதியையும், தனியா, மஞ்சள் தூளையும் ஒரு இருப்புச் சட்டியில் போட்டு நெய்யில் பாதியையும் விட்டு நன்றாய் வறுக்கவும்; வெங்காயம் பதமாக வதக்கப்பட்டபின் உலர்ந்த புலவரிசியை அதில் கொட்டி இரண்டு, மூன்று நிமிஷங்கள் நன்றாய்க் கிளறவேண்டும்.

அந்த மிக்சரை எடுத்து நல்ல மூடியுள்ள பாத்திரத்தில் போட்டு காய்கறி வெந்த வடிதண்ணீரையும் அதில் ஊற்றி பாத்திரத்தை நன்றாக மூடி முக்கால் மணி நேரம் அடுப்பில் வைக்கவேண்டியது. நெருப்பு இளநெருப்பாக இருக்க வேண்டும். புலவரிசி நன்றாக வெந்தபின் இதற்கு முன் வைத்திருந்த நூல்கோல், டர்னிப், காரட் முதலியவைகளை புலவுடன் சேர்க்க வேண்டும்.

பின்னர் வெங்காயத்தில் பாக்கி வைத்திருந்த பாதியையும், நெய்யில் பாதியையும் விட்டு பதமாக வதக்கி ஏலத்தையும் போடவேண்டும். புலவரிசியும், காய்கறிகளும் கலந்து வைத்திருப்பதில் இதைக் கொட்டு. எல்லாவற்றையும் சேர்த்து ஒரே பாத்திரத்தில் போட்டு பதினைந்து நிமிஷம் கொதிக்க வைத்து இறக்கிவிட வேண்டியது. இதற்குத் 'தொட்டுக்க' உருளைக்கிழங்கு செய்து சாப்பிட்டால் வெகு ருசியாயிருக்கும்.

## உருளைக்கிழங்கு குருமா

சாதாரண சைஸ் உருளைக்கிழங்குகள் பதினைந்து, ஒரு சிறு தேங்காய், ஒரு டீஸ்பூன் கஸகஸா, இரண்டு டேபிள்ஸ்பூன் தனியா (கொத்தமல்லி விரை), காய்ந்த மிளகாவத்தல் ஐந்து, அரை டேபிள்ஸ்பூன் சீரகம், ஒரு மலை வெள்ளைப்பூண்டு, மூன்று பெங்களூர் வெங்காயம், ஒரு துண்டு இஞ்சி, அரை அங்குலத்துண்டு





மஞ்சள், ஒரு டீஸ்பூன் உப்பு இவற்றை சேகரித்துக்கொள்.

உருளைக்கிழங்கை வேகவைத்துத்தோல் உறித்துக்கொள். அவற்றை மூன்றுகவோ நாலாகவே நறுக்க வேண்டும். வெங்காயம், வெள்ளைப்பூண்டை உறித்து, ஒரு வெங்காயத்தை மட்டும் கண்ட துண்டமாக நறுக்கு. தேங்காயை உடைத்துத் திருகி, அந்தப் பூவில் வென்னீர் ஜலம் சற்றுத் தெளித்து ஒரு துணியில் போட்டுப்பால் பிழி. அந்தப்பால் நன்றாக கெட்டியாக இருக்கவேண்டும். ஒன்றரை டீகப் அளவுக்குமேல் போகக் கூடாது. ...

உறித்த வெள்ளைப்பூண்டு, மீதியிருக்கும் இரு வெங்காயம், தனியா, கஸகஸா, சீரகம், இஞ்சி, மிளகாய் இவற்றை அம்மியில் வைத்து நேராக அரைக்கவும். துண்டமாக்கப்பட்டு வைத்திருக்கும் ஒரு வெங்காயத்தை மூன்று டேபிள்ஸ்பூன் நெய்விட்டு வதக்கவும். அதில் அரைத்து வைத்திருக்கும் மசாலாவைப் போட்டு பத்து நிமிஷம் கொதிக்க வைக்கவும். அதிலே உருளைக்கிழங்குத் துண்டுகளையும் போட்டு, உப்புப்போட்டு, தேங்காய்ப் பாலையும் கலந்து கால் மணி நேரம் இளஞ்சூட்டில் வேகவிட்டுப்பின் எடுத்து உபயோகப்படுத்த வேண்டியது. என்டி வாயிலே ஜலம் ஊர்ரதா? பண்ணிச்சாப்பிடேன். மாமியார்கூட வேண்டாங்க மாட்டாடி!

———:O:———

## ஸ்திரீகளுக்கு எகிப்திய மன்னர் மரியாதை

முஸ்லீம் நாடாகிய எகிப்தின் மன்னர் பரூக் ஸ்திரீகளுக்கு உயர்ந்த ஸ்தானம் கொடுக்கிறார் என்பது பத்மாபீகம் சொல்லுவதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

லண்டனிலுள்ள ஒகிங் மசூதியில் நாங்கள் பிரார்த்தனை செய்தபின் நடைபெற்ற ஒரு சம்பவத்திலிருந்து எகிப்திய மன்னர் பெண்களை எவ்வளவு கௌரவிக்கிறார் என்பது விளங்கும். அச்சமயம் ஒரு தேக்கச்சேரி நடைபெற்றது. வந்திருந்த சில ஸ்திரீகள் உட்கார இடம் இல்லாமல் திகைத்து நின்றார்கள். மன்னர் பரூக் மனம் பொறுக்கவில்லை. தானே எழுந்து நின்றுகொண்டு ஸ்திரீகளை அமரும்படி வேண்டினார். அதைக் கண்ட வேறு சிலர் தங்கள் தங்கள் ஆசனங்களை ஸ்திரீ விருந்தினருக்கு அளித்தனர். எகிப்திலே ஸ்திரீகள் வெகு கண்யமாகவும், மரியாதையாகவும் நடத்தப்படுகின்றனர். அவர்களின் சுதந்திரம் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டு வருகிறது. கோஷா முறை மறைந்து வருகிறது. பெருவாரியான பெண்கள் பேருக்கு 'கோஷா' போட்டுக்கொண்டு பொது இடங்களில் தாராளமாக வந்து தங்கள் காரியாதிகளை நடத்தி வருகிறார்கள். கல்லூரிகளில் பெண் மாணவிகளும் ஆண் மாணவர்களும் ஒருவருக்கொருவர் பக்கத்திலே உட்கார்ந்து கல்வி பயின்று வருகின்றனர். ஒரு சில வைதீக கோஷ்டியினர் இந்த கூட்டுக்கல்வி முறையை எதிர்த்த போதிலும், அதுவே சரியான முறை என கல்வியாளர்கள் கருதி அந்த முறையை எல்லாக் கலாசாலைகளிலும் அனுஷ்டித்து வருகிறார்கள். அதனால் நன்மையே விளைந்திருக்கிறது என்று நானும் அபிப்பிராயப்படுகிறேன். உலாமாக்களும், முல்லாக்களும் ஸ்திரீகளின் முன்னேற்ற வேகத்தை தடைசெய்ய முடியவில்லை.

# செய்தித்திரட்டு

## ஸ்திரீகளுக்கு புதிய உத்யோகம்

ஆஸ்திரேலியாவில் ஆகாயக் கப்பல்களில் பிரயாணம் செய்வோருக்கு உபசாரம் செய்வதற்காக 25 வயது முதல் 35 வயதுக்குட்பட்ட பெண்களை வேலைக்கமர்த்துகிறார்கள். அவர்கள் 113 பவுண்டு எடைக்குமேல் இருக்கக்கூடாது. அநுவஸ்யமாக பிரயாணிகளுடன் நட்புக்கொள்ளக்கூடாது. நூற்றுக்கணக்கானவர்கள் இவ்வேலைக்கு மனுச்செய்துள்ளார்கள்.

.... .... ....

## ஐரோப்பாவில் தொட்டில் கல்யாணம்

மத்திய ஐரோப்பாவின் பல பாகங்களில் சிசுமணங்கள் நடைபெற்று வருகின்றன. பெல்கிரேடில் தொட்டிலில் தூங்கும் சிறு குழந்தைகளுக்குக் கூட கல்யாணங்கள் நடத்தப்படுகிறதாம். "மாதிரிக் கல்யாண" முறையும் அங்கு இருந்து வருகிறது. 14 வயதில் கல்யாணம் செய்துகொண்ட பெண் கணவன் வீட்டில் சிலகாலம் வசிப்பாள். இருவருக்கும் மனமொத்திருக்க முடிந்தால் கல்யாணம் ஊர்ஜிதமாகும். இல்லாவிட்டால் விவாஹம் ரத்தாய்விடும். 18 வயதிலும் 'ப்ரொபேஷன்' கல்யாணங்கள் நடைபெறுகின்றன.

... ... ...

## பெற்றோர் காலேஜ்

ரஷ்யாவில் பெற்றோர்கள் குழந்தைகளை எப்படி வளர்ப்பது என்பதுபற்றிய போதனைகளைப் பற்றி அறிந்துகொள்ளும் பொருட்டு 'பெற்றோர்கள் காலேஜ்கள்' ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

... ... ...

## கல்யாண ரிஜிஸ்டர்

ஹைதராபாத் சமஸ்தானத்தில் ஹிந்து விவாஹங்களை ரிஜிஸ்டர் செய்யலாம் என்று நிஜாம்மன்னர் ஒரு உத்திரவு பிறப்பித்துள்ளார். அதன்படி யாதொரு கட்டணம் வாங்காமலே போலீஸ் அதிகாரிகள் ரிஜிஸ்டர்புஸ்தகத்தில் விவாஹங்களைப் பதிவுசெய்துகொள்வார். கட்டாயம் கிடையாது. கல்யாணச் சடங்குகளைப் பற்றியும் அவர்கள் விசாரிக்க வேண்டியதில்லை.

... ... ...

## காந்தி ஜயந்தி

சென்னை இந்திய மாதர் சங்கத்தார் மஹாத்மா காந்தியடிகளின் 69வது பிறந்த தினத்தை வெகு விமரிசையாக எழும்பூரிலுள்ள தங்கள் காரியாலயத்தில் கொண்டாடினார்கள். ஸ்ரீமதிகள் முத்துலக்ஷ்மி ரெட்டி, அம்புஜம்மாள், மீனம்பாள் சிவராஜ், விசாலாக்ஷி, ராமதுனிஸாபேகம் முதலியவர்கள் மஹாத்மாவின் மகிமையைப் புகழ்ந்து பேசினார்கள்.



மைலாப்பூர் ஸ்திரீகள் சபையாரும் காந்திஜயந்தியைக் குதூகலமாகக் கொண்டாடினார்கள். ஸ்ரீமதிகள் ருக்மணிலக்ஷ்மிபதி, துர்காபாய், சகோதரி ஆர். எஸ். சுப்புலக்ஷ்மி முதலியோர் காந்திஜீயின் சேவையைப் பாராட்டிப் பேசினார்கள்.

... ... ...

## சக்களத்தி ஆவிமீது தாவா

நியூஜெர்ஸி மாகாணத்தில், நியூவார்க் என்ற ஊரில் சமீபத்தில் ஒரு நூதன வழக்கு விசாரணைக்கு வந்தது. அதில் ஒரு ஸ்திரீ தன் கணவன் மீதும், இறந்துபோன தன் சக்களத்தியின் மீதும் நஷ்டஈடு தாவா தொடுத்தாள். இறந்துபோன முதல் மனைவியின் ஆவி தன் கணவனை இரண்டாந்தாரம் மணந்துகொண்டதற்காக வெருட்டியதாம். அவன் பயந்து இவளை விலக்கிவிட்டான். ஆகையால் அதுவும் ஒரு எதிரியாகச் சேர்க்கப்பட்டது. ஆனால் ஜட்ஜ் கணவன்மட்டும் நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்றும், ஆவிமீது டிக்ரி பாஸ் பண்ணினால் நிறைவேற்றிவைக்க முடியாதென்றும் தீர்ப்புச்செய்தார்.

... ... ...

## ஷிமோகா ஸ்திரீகள் சமாஜ புதிய கட்டடம்

ஷிமோகா ஸ்திரீ சமாஜத்தின் (லேடீஸ் கிளப்) புதியகட்டடத்தின் திறப்புவிழா அக்டோபர்மாதம் 8ந் தேதி ஸ்ரீமதி நாராயணராவ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. கட்டடத்தை முடிக்க 6000 ரூபாய் செலவாயிற்று. சுமார் 500 பெண்கள் விழாவுக்கு விஜயம் செய்திருந்தனர்.

## மறுபடியும் உடன்கட்டை.

கான்பூருக்கு அருகாமையிலுள்ள டாடியா என்ற ஊரில் போலீஸ்காரனாயிருந்த லக்ஷ்மணசிங் என்பவர் இறந்துபோனார். தன் கணவனுக்குப்பின் உயிர்வாழ விரும்பாத 20 வயதுடைய அவர் மனைவி தன் கணவனுடைய ஈமத்தீயில் அமர்ந்து சாவதென்று துணிந்துவிட்டாள். ஆனால் இச்செய்தி மேலதிகாரிகட்குத் தெரிந்து ஜில்லா கலெக்டர் ஓவன், போலீஸ் சூப்பரிண்டெண்ட் பியர்ஸ் முதலியவர்கள் ஸ்தலத்துக்குவந்து அவள் எரியில் மூழ்கு முன் தடுத்துவிட்டார்கள். உயர்தர அதிகாரிகளின் துணிவான செய்கையைக் கண்டும், பத்தினி ஸ்ரீமதி லக்ஷ்மணசிங்கின் பதிவிரதா மகிமையையும் பார்த்து ஜனங்கள் ஆச்சர்யப்பட்டனர்.

... ... ...

## இருதார மணத்துக்கு 10 வருஷ சிறைவாசம்.

நியூஜெர்ஸியைச் சேர்ந்த 27 வயதுள்ள தியேடோர் பிளேட் என்பவன் இரு மணம் செய்துகொண்ட குற்றத்திற்காக 10 வருஷ சிறைவாச தண்டனையும், 200 பவுன் அபராதமும் விதிக்கப்பட்டான். அவன் முதலில் 13 வயதுள்ள மிர்டில் எமிவார்ட் என்பவளை மணந்திருந்தான். அச்செய்தியை மறைத்துவைத்து 12 வயதுடைய ஹெலன் என்ற சிறுமியை மணந்த குற்றத்துக்காகவே இந்த தண்டனை கொடுக்கப்பட்டது. பாவம் சிறுமி ஹெலன் தன் கணவனை நினைத்து நினைத்து புலம்பி அழுகிறாளாம்!

# விசித்திரம் ஆனால் வாஸ்தவம்

## மழையினால் தீபற்றியது

ஜெர்மனியில் ஹோஹென் கோஜென் என்ற இடத்தில் ஒரு தொழிற்சாலை மழையின் காரணத்தால் தீபற்றி எறிந்தது. மழை பெய்யும்பொழுது ஒரு ஜன்னல் திறந்திருந்ததால் அதன்மூலம் தண்ணீர் உள்ளே சென்று ஒரு சுண்ணாம்புக் குவியலில்பட்டு அது புகைந்து நெருப்புப்பற்றி தொழிற்சாலை பூராவும் அழிந்துபோய் விட்டது.

... ... ...

## பறவைகள் பாட்டுப் போட்டி

கனேரிப் பறவைகளுக்குள்ளாக ஒரு பாட்டுப்போட்டி ஜெர்மனியில் ப்ராங்பர்ட் என்ற இடத்தில் 1938ம் வருஷம் ஜனவரி மாதம் 10ந் தேதி நடைபெறும். இவ்விதப் போட்டிகள் அங்கு அடிக்கடி நடைபெறும்.

... ... ...

## சுறுமீன் உண்ணாவிரதம்

ஸிட்னி நகரத்திலுள்ள மீன் கண்காட்சி சாலையிலுள்ள இரு சுறுமீன்கள் சில நாட்களாய் ஒருவித ஆகாரத்தையும் உண்ணுவதில்லை. சாதாரணமாக அவைகள் 5 பவுண்டு உணவு அருந்தக்கூடியவை. சென்ற வருஷமும் இதே சமயத்தில் அவையிரண்டும் ஒருமாதம் உணவு கொள்ளவில்லையாம்.

## ஒரேசமயத்தில் 11 வாத்தியம்

கானடாவில் ப்ளென்ஹீம் என்ற ஊரில் எல்மர்ட்ரட்ஜன் என்பவன் ஒரேசமயத்தில் கால், கை, முழங்கை, மணிக்கட்டு, விரல்களினுதவியால் பயானோ, ஆர்மோனியம், பிடில் முதலிய பதினொரு வாத்தியங்களை வெகு அழகாக வாசிக்கிறான்.

... ... ...

## 20 வருஷ "சிறைவிரதம்"

அல்ஜீரியா தேசத்திலுள்ள கான்ஸ்டான்டைன் நகரத்தில் ஆண்ட்ரியா அக்யுஸரேத் என்ற ஒரு 37 வயது மங்கை தானாகவே ஒரு சிறைக் கூடம் கட்டிக்கொண்டு சென்ற 20 வருஷ காலமாய் அந்த அறையைவிட்டு அகலாமலும், யாருடனும் பேசாமலும் காலம் கடத்தி வந்திருக்கிறாள். அவளுக்கு இதுவரையில் ஆகாரம் முதலியவைகள் கொடுத்து வந்த தன் அன்னையிடமும் அவள் பேசுவது கிடையாது. இதற்குக் காரணம் இவள் 17 வயதினளாயிருந்தபொழுது ஒரு யுவன் இவளைக் காதலித்தான். இவளும் அவனைக் காதலித்தாள். ஆனால் பெற்றோர் அனுமதி மறுத்து அவனை வெளிதேசத்துக்கு அனுப்பினர். அவன் தற்கொலை புரிந்துகொண்டான். அந்த வருத்தத்தால் கன்னி ஆண்டிரியா "கடுஞ் சிறைவாசம்" அனுபவிக்கிறாளாம்.



## தவளை மழை

ஹங்கேரியில், டார்பா என்ற ஊரில் ஒரு நாள் திடீரென பெருமழை பெய்தபோது ½ அங்குல நீளமுள்ள தவளைகள் ஆயிரக் கணக்கில் ஆகாயத்திலிருந்து விழுந்தனவாம். பின்னர் வாத்துகளுக்கு நல்ல விருந்து அவ்வூரில் நடந்ததாம்!

... ... ...

## மரணத்தை அறிவிக்கும் கருவி

ஒருவரின் இரத்தத்தைப் பரிசோதித்துப் பார்த்து அவன் எப்பொழுது இறப்பான் என்பதை வெகு சரியாகத் தெரிவிக்கக்கூடிய ஒரு கருவியை பாரிஸ் நகரத்தைச்சார்ந்த எம். விகாம்தி என்பவர் கண்டுபிடித்திருக்கிறார். இது 3 வருடங்களுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டபோதிலும் பரிசோதனையிலேயே இருந்து வந்தது. 8000 கேஸ்களில் இது பரீட்சக்கப்பட்டு ஆச்சர்யப்படும்படி மரணத்தின் காலத்தை சரிவரக் கூறியிருக்கிறது.

... ... ...

## 650 பவுண்டு பெண்

அமெரிக்காவில் ஜெல்லிஹார்வே என்ற ஒரு பெண் 650 பவுண்டு எடையிருக்கிறாளாம். அவள் கிட்டதட்ட அதே எடையுள்ள இரு ஆடவர்களுடன் ஒரு சினிமா படத்தில் நடிக்கப் போகிறாளாம்.

... ... ...

## 1140 பவுண்டு பன்றி

ஆஸ்திரேலியாவில் மெல்போர்னில் ஒரு 'ராக்ஷச' ப் பன்றி இருக்கிறது. அது 7 அடி நீளம், 4 அடி உயரம், 1140 பவுண்டு எடை இருக்கிறது. இதற்கு தினசரி 100 ஆப்பிள், 28 பவுண்டு உருளைக் கிழங்கு, 6 படி தான்யம், 4 காலன் பால் முதலியன ஆகாரம்.

## ஐந்தரை வருஷ 'தூக்கம்'

பாட்ரிகாமகூர் என்ற அமெரிக்கக்கன்னி கடந்த ஐந்தரை வருஷங்களாய் பிரக்ஞை இழந்தவளாய் தூங்குவதுபோல் கிடந்தாள். அவள் அம்மாதிரி தொடர்ச்சியாய் இருந்து வந்ததின் காரணத்தை அறிய டாக்டர்களால் முடியவில்லை. 1932ம் வருஷம் பிரக்ஞையிழந்து சமீபத்தில்தான் இறந்துபோனாள். அவளுக்கு வயது 31.

... ... ...

## பழுக்கக் காய்ச்சின இரும்பு 'சத்தியம்'

பாலஸ்தீனத்திலுள்ள ஜெரிகோ நகரில் சமீபத்தில் ஒரு நூதனசம்பவம் நடந்தது. ஷேக் அரிப் நஸ்ஸார் என்ற நூறு வயதுக் கிழவனுக்கும், மற்றொருவனுக்கும் ஒரு நில விஷயத்தில் தாவா ஏற்பட்டது. அரிப் தான் பழையகால முறைப்படி பழுக்கக் காய்ச்சின இரும்பை நக்கி தன் கட்சி நியாயம் என்று ரூபிக்கிறேன் என்று சொல்லி அப்படியே செய்தான். அவன் நாக்கு புண்படவில்லை. நியாயாதிபதி அவனுக்குச் சாதகமாகவே தீர்ப்பளித்தார்.

... ... ...

## ஆகாசத் தோட்டம்

லண்டன் பிரிட்ஜுக்குப் பக்கத்தில் தேம்ஸ் நதிக்கரையில் அடிலெயிட் ஹவுஸில் மாடியில் ஒரு பெரிய தோட்டமிருக்கிறது. அதன் விஸ்தீரணம் முக்கால் ஏக்கர். இதில் ஆப்பிள், ப்ளம் முதலிய கனிவர்க்க விருக்ஷங்கள் இருக்கின்றன. மாடி மண்பாங்காகச் செய்யப்பட்டிருக்கிறது. புஷ்பச் செடிகளும் விசேஷம்.

# கதம்பம்

## மனைவியை ஏலமிட்டான்

ஷாகின்தஸ் என்ற கிராமத்தைச் சார்ந்த ஸ்தேபான் டார்ட்ச் என்ற தச்சன் வெகு நாட்களாய் வேலையில்லாமல் திண்டாடினான். கஷ்டம் தாங்கமாட்டாமல் கடைசியில் தன் அருமை மனைவியையும், இரு குழந்தைகளையும் பகிரங்க ஏலத்தில் விற்றான். அவர்களை ஒரு பணக்கார விவசாயி நாலு ஷில்லிங், இரண்டு பென்ஸுக்கு வாங்கினான். என்ன கொடுமை!

... ... ...

## 'ப்ராட்காஸ்ட்' பெண்

அமெரிக்காவில் அர்க்கன்ஸாஸ் என்னும் ஊரில் மிஸ் ஜாக்கி கேத்லி என்று ஒருவளிருக்கிறாள். அவள் சத்தம் போட்டுப் பேசினால் மூன்று மைல் விஸ்தீரணத்துக்குத் தெளிவாய்க் கேட்குமாம். இப்படிப் பேச அவள் மலைகளின் மீதிருந்து பழகினாளாம். ஒலி பரப்பும் உயிர் கருவி!

... ... ...

## பல் உடைந்தவள் அதிர்ஷ்டம்

லண்டனில் வின்பரெட் ஸ்டோனர் என்றவள் பல் உடைபட்டே பிறந்தாள். சீக்கிரம் பேச ஆரம்பித்தாள். ஐந்து வயதிலேயே பாக்கள் இயற்றவும், பல வாத்தியங்களில் தேர்ச்சியும், காவியங்களில் பாண்டித்தியமும், கணித சாஸ்திரத்தில் சாமர்த்தியமும் காட்டினாள். புஸ்தகங்கள் பல எழுதி வெளியிட்டாள். அமெரிக்காவுக்குச் சென்று 12 வயதில் சர்வகலாசாலைப் பட்டம் பெற்றாள்; 9 பாஷைகள் பேசினாள்; சித்திரங்கள் [illegible] வரைவது, பலவித விளையாட்டுகளில் ஊக்கம் காட்டினாள். இவளது சாமர்த்தியத்தைக் கண்டு உலகமே பிரமித்தது. இவள் மும்முறை விவாஹம் செய்துகொண்டாள். வயது இப்பொழுது 35. இவளுக்கு தற்சமயம் 50,000 பவுன் சொத்து இருக்கிறது. அங்கஹீனம், ஆனால் அதிர்ஷ்ட லாபம்!

... ... ...

## காதலியின் மரணத்துக்காக 70 நாள் உண்ணாவிரதம்

ராபர்ட் டிமொஸிமி என்பவர் தன் அருமைக் காதலி இறந்த துக்கத்தால் தானும் மாண்டுபோக வேண்டுமென்று நினைத்தார். ஆனால் தற்கொலை செய்துகொள்ள விரும்பவில்லை. பட்டினி கிடந்து இறக்க நினைத்தார். அவர் 70 நாள் பட்டினி கிடந்தும் சாகாமல் பின் உணவு அருந்த ஆரம்பித்தார். மேலும் 14 வருஷங்கள் உயிருடன் இருந்தாராம்! 'கற்புள்ள' கணவன்!!

... ... ...

## நீலவானம்

ஆகாயம் ஏன் நீல நிறமாயிருக்கிறது தெரியுமா? ஆகாயம் சூரியனிடமிருந்து நீலவர்ணத்தைப் பெறுகிறது. சூரியனிடம் எல்லா வர்ணங்களும் இருக்கின்றன. ஆகாயத்தில் பறக்கும் கோடிக்கணக்கான தூசிகள் நீலவர்ணத்தைத் தவிர இதர சகல வர்ணங்களையும் கிரஹித்துக் கொள்கின்றன. எனவே வானம் நீலவர்ணமாகத் தோன்றுகிறது.



## ஆடவர்களுக்கு தையல் பள்ளிக்கூடம்

நியூயார்க்கில் ஆடவர்களுக்குத் தங்கள் துணிமணிகளைத் தாங்களே தைத்துக் கொள்ளச் சொல்லித்தரவேண்டி ஒரு தையல் பள்ளிக்கூடத்தை ஸ்ரீமதி ரூத் வின்னக் என்ற ஸ்திரீ ஆரம்பித்திருக்கிறாள். மூன்று மாத போதனைக்கு 5 பவுன் சம்பளம்.

... ... ...

## குள்ளர்கள் மகாநாடு

புடாப்பெஸ்ட் நகரத்தைச் சேர்ந்த 26 குள்ளர்கள் (ஒருவன் 26 அங்குல உயரம்) உலகம் பூராவும் சுற்றிவர தங்களுக்கு பாஸ்போர்ட் அளிக்கும்படி சர்க்காரை கேட்டிருக்கின்றனர். அவர்கள் சுற்றுப் பிரயாணத்தின் நோக்கம் அடுத்த வருஷம் புடாபெஸ்டில் ஒரு அகில உலக குள்ளர் மஹாநாட்டைக் கூட்டவே. ஆயிரக்கணக்கானவர்கள் கூடுவார்கள் என்று அவர்கள் எதிர் பார்க்கிறார்கள். எதற்குத்தான் மகாநாடு இல்லை?

... ... ...

## உலகத்தில் குட்டையானவன்

இங்கிலாந்தில் லங்காஷயரைச் சார்ந்த ஸ்டாக்போர்ட் என்ற ஊரில் ஹார்ரிபியாட் என்று ஒருவன் இருந்தான். அவனுக்கு வயது 50; உயரம் 23 அங்குலம்; எடை 24 பவுண்டு. அவன் சமீபத்தில் தான் மரணமடைந்தான். அவன் அவ்வளவு குள்ளமாக இருந்த போதிலும் புத்திகூர்மையுள்ளவனாக இருந்தான். உலகத்திலேயே அவனைவிட குள்ளமானவன் இல்லையாம்!

... ... ...

## எட்டு வருஷத்துக்குப்பின்

1929ம் வருஷம், மார்ச்சு மாதம் 19உ மிஸ் அன்னி ரிப்பின் என்ற மாது லண்டனிலுள்ள தன் கடையை இரவு மூடிக்கொண்டு புறப்படும் பொழுது எட்வர்ட் ஓப்ரையன் என்ற 18 வயதுச் சிறுவன், 48 பவுன், மோதிரம், கைகடியாரம், ஸேவிங்ஸ்பாங் நோட்டுக் அடங்கிய அவளுடைய கைப்பையை அபகரித்துக் கொண்டு மறைந்துவிட்டான். ஆனால் அவன் மனச்சாட்சி அவனை அருத்துக் கொண்டே இருந்தது. சென்ற மாதம் அப்பொருள்களைப் போலீசாரிடம் ஒப்புவித்துத் தன் குற்றத்தையும் ஒப்புக் கொண்டான். மனச்சாட்சியின் மாண்புதான் என்ன!

... ... ...

## மணத்துக்குமுன் மூன்று நாள்

அவசரமாய் விரும்பத்தகாத மணங்கள் நடைபெறாமல் இருப்பதைத் தடுக்க நியூயார்க் மாகாணத்தில் ஒரு புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதன் பிரகாரம் விவாஹ லைசென்ஸ் பெற்றதற்குப் பின் 72 மணிக்கப்புறம்தான் விவாஹம் நடைபெற வேண்டும். தம்பதிகள் இந்த சமயத்தில் நன்றாய் யோசித்துக் கொள்ள வேண்டும். இதை மீறி மணம் செய்யும் பாதிரிகளும், விவாஹ ரிஜிஸ்டிரார்களும் 10 பவுன் அபராதம் விதிக்கப்படுவார்கள்.

# சினிமா செய்திகள்

## ஜலஜா

சென்னை ரினஸான்ஸ் தியேட்டர்ஸார் 'ஜலஜா' என்ற கதையை வெகு நவீன முறையில் தயாரித்து வருகிறார்கள். திரு. ஜி. கே. சேஷகிரி படப்பிடிப்பை கவனித்து வருகிறார்.

## மதிகெட்ட மனைவி

சீனிவாஸ சினிடோன் கம்பெனியார் 'மதிகெட்ட மனைவி' என்ற சமூகப் படத்தை தயாரித்து வருகிறார்கள். மதுரை ஸ்ரீமதி சங்கரிபாய் இதில் பிரதம நடிகர்.

## ஸ்வர்ணலதா

ராஜேந்திரா பிலிம் கம்பெனியார் 'ஸ்வர்ணலதா' என்ற உன்னத சமூகப் படத்தை தயார் செய்து வருகிறார்கள். திரு. ஒய். வி. ராவ் படத்தை டைரக்ட் செய்கிறார். யானை வைத்தியனாதைய்யர் பாட்டுகளை எழுதுகிறார்.

## நந்தகுமார்

ஸ்ரீ கிருஷ்ணனின் ஈடில்லா லீலைகளை விளக்கும் 'நந்தகுமார்' என்ற தமிழ் படத்தை பெங்களூர் பிரகதி பிக்சர்ஸ் லிமிடெட் நூதன அம்சங்களுடன் படம்பிடிக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

## ஸ்ரீகந்த லீலா

கோவை பிரிமியர் சினிடோன் லிமிடெட் ஸ்ரீகந்த லீலா என்ற புராணக் கதையை சங்கீத நடிக ரத்தினங்களைக் கொண்டு பம்பாய் டைரக்டர் எச். எஸ். மேத்தாவின் டைரக்ஷனில் விரைவாகத் தயார் செய்து வருகிறார்கள். இவர்களின் அடுத்தபடம் "கள்வர் தலைவன்" என்பதாகும்.

## ஸேவசதனம்

சென்னை யுனைட்டட் ஆர்டிஸ்ட்ஸ் கார்போரேஷனின் உன்னத நவீனப் படம் 'ஸேவசதனம்' வெகு மும்முரமாகத் தயாராய் வருகிறது. கோகிலகான எம். எஸ். சுப்புலக்ஷ்மி தன் முழுத் திறமையையும் காட்டி நடிக்கிறார்.

## ஸ்ரீகிருஷ்ணன் தூது

காரைக்குடி ராஜகோபால் டாக்கீஸார் "ஸ்ரீகிருஷ்ணன் தூது" என்ற படத்தையும், அத்துடன் "தெனாலி ராமன்" என்ற ஹாஸ்யக் கதையையும் படம் பிடிக்கவேண்டிய ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

## கண்ணப்ப நாயனார்

பரமசிவ பக்தனை "கண்ணப்ப நாயனார்" என்ற திவ்ய கதையை ஈரோடு காளிதாஸ் பிலிம்ஸ் லிமிடெட் கம்பெனியார் தமிழ் சினிப்படமாகத் தயார் செய்து வருகிறார்கள்.

## நாமதேவர்

சேலம் சௌடேஸ்வரி பிலிம்ஸ் லிமிடெட் 'நாமதேவர்' என்ற படத்தை தயார் செய்கிறார்கள். டைரக்டர் தருபதராய்.

# ஆசிரியர் குறிப்புகள்

## கொச்சி சட்ட சபையும், ஸ்திரீகளும்

சமீபத்தில் கொச்சி சமஸ்தானத்தில் வாக்குரிமை நிர்ணயிக்க ஒரு கமிட்டி நிர்மாணிக்கப்பட்டு அக்கமிட்டியாரும் விசாரணை செய்து ஸ்திரீகளுக்கும் ஓட்டுரிமை அளித்தார்கள். கொச்சி சமஸ்தான சர்க்கார் ஸ்திரீகளுக்கு ஓட்டுரிமையளித்தது மாதர் சமூகத்தால் போற்றத் தக்கதே. மஹாராஜா வாக்குரிமைக் கமிட்டியின் சிபார்சுகள் மீது தன் உத்தரவைப் பிறப்பிக்கும்போது கொச்சி சட்டசபையில் ஸ்திரீகளுக்காக இரண்டு ஸ்தானங்கள் ஒதுக்கி வைத்திருப்பதைக் கண்டு நாம் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றோம். மஹாராஜாவின் முற்போக்கான செய்கைக்காக நாம் மாதர்களின் சார்பாக நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஸ்திரீகளுக்கு அச் சபையில் ஸ்தானம் அளிப்பது இதுவே முதல் தடவை என்பதை நம் வாசகர்கள் உணர வேண்டும். சட்ட சபையில் தேர்ந்து எடுக்கப்படும் ஸ்தானங்கள் 38. அதில் இரண்டு மட்டும் மாதருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கும்போது சற்று மனக்குறையாகத் தானிருக்கிறது. ஸ்திரீகளுக்கு இன்னும் அதிகமான ஸ்தானங்கள் அளிக்கவேண்டியது நியாயம் என்று மஹாராஜாவும், திவானும் திட்டமாக நம்புகிறார்கள் என்றே நாம் நினைக்கிறோம். இருந்தபோதிலும் அரசியல் நிர்வாஹ காரணங்களை உத்தேசித்து அவர்களுக்கு உள்ள பிரதிநிதித்துவத்தின் எண்ணிக்கை குறைவாக ஏற்படுத்தி யிருக்கலாம். இந்த வசதியை ஸ்திரீ பிரதிநிதிகள் வெகு நன்றாகப் பயன்படுத்திக்கொண்டு தங்கள் சமூகத்தின் தேவைகள் என்ன வென்பதை சர்க்காருக்குத் தெளிவாக எடுத்துக் காட்டினால் அவர்களது குறைகளை நீக்க மஹாராஜா நிச்சயம் முன் வருவார். சர்க்காரின் நன்மதிப்பைப் பெற்றார்களானால் இவர்களுக்கு சபையில் பிரதிநிதித்துவமும் அதிகப்படும். எனவே கொச்சி மாதர்கள் இந்த அரிய வசதியை நன்கு பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்வதுடன் இதர சமஸ்தானாதிபதிகளும் தங்கள் தங்கள் சட்ட சபைகளில் ஸ்திரீகளுக்கு பிரதிநிதித்துவம் அளித்து கொச்சி சமஸ்தானத்தைப் பின்பற்றக் கோருகிறோம்.

... ... ...

## ரிஜிஸ்டர் விவாஹம்

எம் மதத்தினரும் விவாஹத்தை ரிஜிஸ்டர் செய்துகொள்வதின்மூலம் சட்டரீதியான நேரடி சம்மதத்தைப் பெறுகிறார்கள். ஏழைகளும், ஆடம்பரமான செலவுகள் செய்ய சக்தியற்றவர்களும்கூட இந்தச் சட்டத்தின் உதவியைநாடி தங்கள் மணங்களை நடத்தி நன்மையடையலாம். இம் முறையின் நன்மையை மக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள் என்பது சமீபத்தில் நிஜாம்மன்னரும் தன் சமஸ்தானத்தில் ஹிந்து விவாஹங்களை ரிஜிஸ்டர் செய்ய வேண்டிய வசதிகளை ஏற்படுத்தியதினின்றும் நன்கு விளங்குகிறது. இந்த ரிஜிஸ்டர் விவாஹ முறையை இதர சமஸ்தானங்களும் கையாளவேண்டும் என நாம் கேட்டுக் கொள்கிறோம். இது ஏழை

# பிரசவ அட்டவணை

[பொதுவாக ஸ்திரீகள் கர்ப்பந்தரித்து 280 நாட்களில் பிரசவிக்கிறார்கள். கடைசித் தூரத்துக்கப்புறம் முதல்நாளிலிருந்து கணக்கு வைத்துக்கொள்ள வேண்டியது. கீழ்கண்ட அட்டவணையில் உதாரணமாக ஜனவரிமீ 1உ கர்ப்பம் கொண்டவள் அக்டோபர்மீ 8உ குழந்தை பெறுவாள் என்று முதலில் காட்டப்பட்டிருக்கிறது. அதுபோலவே மேல்வரிசையிலுள்ள தேதியில் கர்ப்பந்தரித்தவள் அந்த எண்ணுக்கு நேரே கீழ்வரிசையிலுள்ள தேதியில் பிரசவிப்பாள்.]

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜனவரி |
| அக்டோபர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | நவம்பர் |
| பிப்ரவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | | | | பிப்ரவரி |
| நவம்பர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | | | | டிசம்பர் |
| மார்ச்சு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மார்ச்சு |
| டிசம்பர் | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | ஜனவரி |
| ஏப்ரல் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஏப்ரல் |
| ஜனவரி | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | | பிப்ரவரி |
| மே | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மே |
| பிப்ரவரி | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மார்ச்சு |
| ஜூன் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஜூன் |
| மார்ச்சு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | ஏப்ரல் |
| ஜூலை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜூலை |
| ஏப்ரல் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மே |
| ஆகஸ்டு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஆகஸ்டு |
| மே | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | ஜூன் |
| செப்டம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | செப்டம்பர் |
| ஜூன் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | ஜூலை |
| அக்டோபர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | அக்டோபர் |
| ஜூலை | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | ஆகஸ்டு |
| நவம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | நவம்பர் |
| ஆகஸ்டு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | செப்டம்பர் |
| டிசம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | டிசம்பர் |
| செப்டம்பர் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | அக்டோபர் |

Printed and Published by Dr. S, Seshagiri Rao, at the Lodhra Press, Royapettah, Madras.





போலிகளைக் கண்டு உஷார்!!!

அமிர்தாஞ்சனம்

கேவலம் "கிரஹலக்ஷ்மி"

சகல வலிகளையும் போக்கும்

அமிர்தாஞ்சனம் லிமிடெட்,

பம்பாய், மதருஸ், கல்கத்தா.

டி. சி. என். கோல்டன் மெட்டல் ஜ்வெல்லரி மார்ட்



லின்தடிக் கல் செயின்கள்

அசல் தங்கத்தைப்போல பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல. கறுக்காது. 2 வருஷம் உத்தரவாதம்

பலவித கலர்க் கல்களால் கட்டப்பட்டவை மிகவும் அழகாயிருக்கும்

பெரிய சைஸ் செயின் பென்டன்ட்டுடன் 1-க்கு ரூ. 9 0 0
சிறிய சைஸ் ,, ,, 1-க்கு ரூ. 7 0 0
பெரிய சைஸ் பென்டன்ட் இல்லாமல் 1-க்கு ரூ. 7 0 0
சிறிய சைஸ் ,, ,, 1-க்கு ரூ. 5 0 0
வி. பி. செலவு 1-க்கு ரூ. 0 8 0

இரண்டு அணா பெறுமானமுள்ளதும், பல அழகிய படங்களுள்ளதுமான எமது கேட்லாக் இனாம்.

T.C. நாகலிங்கப்பா அண்டு கம்பெனி

தபால் பெட்டி நெ. 516

280, வால்டாக்ஸ் ரோட், பார்க்டவுன், மதராஸ்

## க்ஷீ ர ப லா

**(101 தடவை பாகம் செய்யப்பட்டது)**

**பாரிசவாயுவுக்கு ஸஞ்சீவி**

எல்லாவித வாத நோய்களையும் கண்டிக்கும். இதற்கு நிகரான மருந்தே கிடையாது. தேசமெங்கும் புகழ்பெற்றது.

அவுன்ஸ் 1க்கு 3 8 0.

**மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ், 107, பிராட்வே, சென்னை.**

---

Trade Mark

Regd. No. 1983

விலை தோடு சைஸ் கமலம் ஒன்றுக்கு அணா எட்டு

விலை பேசரி சைஸ் கமலம் ஒன்றுக்கு அணா ஆறு

ஒரிஜினல்

## கல்ச்சர் வைரங்கள்

கல்ச்சர் வைரம் எங்களிடம் தவிர வேறு இடங்களில் கிடையாது.

கேட்லாக் இனம்!

சொ. அருணாசலம் செட்டி,
மு. ராமசாமி செட்டி,
ஷரூப்பு வியாபாரம், திருச்சிராப்பள்ளி.

---



சர்மம் மிருதுவாகவும் பட்டுப்போல் பழபழப்பாகவும் இருப்பதற்கு

**வேப் சோப்பை**

(மர்கோஸா) உபயோகப் படுத்துங்கள்.

**கேரளா சோப் இன்ஸ்டிடியூட்**

கள்ளிக் கோட்டை.

---

## அழகான அச்சுவேலைகளே

**லாபகரமான தீவிர விற்பனைக்கு காரணமாகும்**

எல்லா விதமான அச்சுவேலைகளையும் அவரவர்கள் அவசரத்திற்கு தக்கபடி சேர்த்தியாக செய்து கொடுப்போமென்று உங்கள்

**அனுபவத்திலேயே தெரிந்துகொள்ளுங்கள்**

**லோத்ரா பிரஸ் — மதராஸ்**

---




**சுவை மிகுந்த உண்டிகள்—பானங்கள்.**

இணையற்ற ரகம்—வகையான உபசாரம்—
உல்லாசமான இடம்—நல்ல காற்றோட்டம்
முதல் தரமான வசதி.

# சாஸ்திரி ஹோட்டல்

**89, சிக்பேட், பெங்களூர் சிடி.**



# டோங்ரேயின் பாலாமிருதம் என்றால் என்ன?

159745

1. டோங்ரேயின் பாலாமிருதம் குழந்தைகளுக்கு மேன்மையான டானிக்.
2. டோங்ரேயின் பாலாமிருதம் குழந்தைகளின் கனச்சூட்டையும், பலஹீனத்தையும் குணப்படுத்தும்.
3. டோங்ரேயின் பாலாமிருதம் எலும்பை வளர்க்கும் சக்தியைக் கொடுக்கிறது.
4. டோங்ரேயின் பாலாமிருதம் ஜீரணசக்திக்கு உதவுகிறது.
5. டோங்ரேயின் பாலாமிருதம் பலத்தைத் தந்து சுகத்தைக் கொடுக்கிறது.
6. டோங்ரேயின் பாலாமிருதம் அநேக நாட்களாய் கஷ்டப்படுத்தும் இருமலையும் சாதா ஜுரத்தையும் போக்கும்.
7. டோங்ரேயின் பாலாமிருதம் தித்திப்பானதால் குழந்தைகளால் சந்தோஷத்துடன் சாப்பிடப்படுகிறது.
8. எவ்விதத்திலும் "டோங்ரேயின் பாலாமிருதமே" வளரும் குழந்தைகளுக்கு சரியானதாக யிருக்கிறது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்



# கேஸரியின் பற்பசை

REGD. No. M-3660 NOVEMBER 1937


# QUEEN OF TONICS

ஸ்திரீகளுக்கு ஒரு வரப்பிரசாதம்




## லோத்ரா

கர்ப்பாசய ரோக நிவாரணி.